Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 445 பிலவ வருடம், தை மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை
(03.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 01, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## களனி பல்கலை தாக்குதல் தொடர்பில் அறுவர் கைது

யோ.தர்மராஜ்

களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர் ஒருவர் உட்பட 6 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

களனி பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்தான விசாரணைகள் தொடர்பாக நேற்று (02) பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## 05 வருடங்களில் ஏழரைக் கோடி ரூபா பணத்தை ஈட்டிய விதம்

### விமல் வீரவங்சவிற்கு எதிரான வழக்கு பரிசீலிக்கப்படவுள்ளது



விமல் வீரவங்ச அமைச்சராக செயற்பட்ட 05 வருடங்களுக்குள் ஏழரைக் கோடி ரூபா பணத்தை ஈட்டிய விதம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை பரிசீலனை செய்வதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி வழக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று உத்தரவிட்டார்.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது, அமைச்சர் விமல் வீரவங்ச மன்றில் ஆஜரா கியிருந்தார்.

2010ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2014ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 75 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பணம் மற்றும் சொத்துக்களை முறையற்ற வகையில் ஈட்டியமை தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தல் இனி நடக்காது!

## நாடாளுமன்றத் தேர்தலொன்றுக்கே தயாராக வேண்டும் என்கிறார் மைத்ரி



02 பக்கம்

## சட்டத்தரணி ஹிஜாஸ் மீதான பிணைக் கட்டளை 7ஆம் திகதி



சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா வுக்கு பிணை வழங்குவது தொடர் பான தீர்ப்பு எதிர்வரும் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது. 02 பக்கம்

## பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றைய தினம் மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அண்மையில் வத்திராயன் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச்சென்ற இரண்டு மீனவர்களின் உயிரிழப்புக்கு நீதி கோரியும் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகவும் இந்த போராட்டம் மேற்கொள் ளப்பட்டது. 02 பக்கம்

## பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை அரசு நீக்கவேண்டும்

### சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்து



இலங்கை அரசாங்கம் பயங்கரவாத திருத்தச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்வைத்துள்ள யோசனைகள் போதுமானதாக இல்லை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் மோசமான விதிமுறைகளை புறக்கணித்துள்ளதென தெரிவித்துள்ள சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு, பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. 02 பக்கம்

## பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் மீனவர் வீதிமறியல் போராட்டம் மூன்றாவது நாளாக



02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



ஜனாதிபதி தேர்தலோ பார்லிமென்ட் தேர்தலோ எது வந்தாலும் வரட்டும்... மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாங்கள்....

## தேர்தலுக்காக 9 முதல் பிரசாரம் நிதியமைச்சர் பெசில் அறிவிப்பு




02 பக்கம்

## திருமலை சண்முகா இந்துக் கல்லூரியில் அபாயா ஆடையால் சர்ச்சை

### மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

12 பக்கம்



பெற்றோலியப் பொருட்களை இலங்கை வாங்குவதற்கான 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி (EXIM) மற்றும் இலங்கை அரசு நேற்று நிதி அமைச்சர் முன்னிலையில் கையெழுத்திட்டன. இதன்போது நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த ஒப்பந்தத்தில் திறைசேரிச் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலயும், இந்திய தரப்பில் இருந்து எக்சிம் வங்கியின் தலைமை பொது முகாமையாளர் கௌரவ் பண்டாரியும் கைச்சாத் திட்டனர்.

## மன்னார் காற்றாலை மின் உற்பத்தி ஜனாதிபதி கோட்டாபய திடீர் விஜயம்



மன்னார் நகர் நிருபர்

மன்னார் நடுக்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் முதல் காற்றாலை மின்சக்தி பூங்காவிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று காலை 11 மணியளவில் வருகைத் தந்தார். 02 பக்கம்





இலங்கையில் அதிவுயர் 5G வேகத்தை ஆரம்பித்துவைப்போர் TRCSL தலைவர், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் மற்றும் டிஜிட்டல், தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. ஜயந்த டி சில்வா மற்றும் Airtel லங்கா தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஆஷிஷ் சந்ரா.


## சுதந்திர தினமன்று மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் விடுத்தது



இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் கறுப்பு தினமாகவே அனுஷ்டிக்கவுள்ளோம் என வவுனியா காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தலைவி திருமதி சி.ஜெனிட்டா தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், 02 பக்கம்




# அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு நிபுணர்களின் உதவி அவசியம்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு நிபுணர்களின் உதவி அவசியமானது எனவும், நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்காலத்திலும் நிபுணர்களின் உதவியை அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் அலரி மாளிகையில் நேற்று (02) பிற்பகல் சந்தித்த போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார். இதன்போது இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பிரதமருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்களை உள்ளடக்கிய தொழில் வல்லுனர்கள் சங்கத்தில் 32தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்தி 52 தொழிற்சங்கங்கள் காணப்படுவதுடன், அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் நிபுணர்களின் உதவியை பெற்றுக் கொடுப்பதற்கு தயாராகவிருப்பதாக இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் துலித் பெரேரா இதன்போது தெரிவித்தார்.

அமைச்சுகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்திக்காக செயற்படுமாறு கேட்டுக்கொண்ட பிரதமர், நிபுணர்களாக நாட்டுக்காக மேற்கொண்ட உதவிகளுக்கு பாராட்டும் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்திற்காக ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் பெற்றுக்கொடுக்கக்கூடிய ஒத்துழைப்பை தொழில் வல்லுனர்கள் சங்கத்திற்கும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, பிரதமரின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் அனுராதா ஹேரத், இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் துலித் பெரேரா, ருச்சிரா குணசேகர, உபாலி ஜயவர்தன, பந்துல பத்மசிறி, சாந்த செனரத், எச்.பீ.ஆர்.கே.ரூபசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பருத்தித்துறை, சுப்பர்மடம்...

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் முன்னெடுத்துள்ள வீதி மறியல் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும் வத்திராயன் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட 2 மீனவர்களுக்கு நீதி கோரியும் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்தப் போராட்டத்திற்கு பல தரப்பினரும் தங்களது ஆதரவை அளித்து வருகின்ற நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மீனவ அமைப்புகளும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் நேரடியாக போராட்டக் களத்துக்கு வந்து ஆதரவளித்துள்ளனர்.

நேற்றுக் காலை போராட்டக்காரர்களுடன் பேசுவதற்காக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படையினர், பொலிஸார் மற்றும் கடலோர காவல் படை அதிகாரிகள் வருகைதந்து மீனவர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோதும் எந்தவிதமான முடிவும் எட்டப்படாததால் அதிகாரிகள் திரும்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.









## ஜனாதிபதித் தேர்தல்...

புதிய அரசியலமைப்பின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு அரசாங்கம் பொறியொன்றை முன்வைக்கின்றது. அதற்கமைய, நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்காது. அடுத்துவரும் தேசிய தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலாக மட்டுமே இருக்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அதிகாரம் பற்றி பேசுவதில் எவ்வித பயனுமில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு குறைந்தபட்சம் இரண்டரை வருடங்கள் உள்ளன. இந்நிலையில், புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது எதிர்வரும் காலத்துக்கான அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான பொறியொன்றை வைப்பது போன்றே எனக்கு தோன்றுகிறது.

எனவே, நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்காது என்று எனக்கு தோன்றுகிறது. அடுத்து வரும் தேசிய தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலாக மட்டுமே இருக்கும். ஆட்சி மாற்றத்தை நோக்கி நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாங்கள் தயாராக வேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடு.

நான் ஜனாதிபதியாக பதவியேற்று, அன்றைய தினமே நாடாளுமன்றத்தை கலைத்திருந்தால் இன்று அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். மாறாக, ஆறு மாதங்கள் சென்றமையினால் அரசின் மீதான தவறான நிலைப்பாடுகளால் பொதுத் தேர்தலில் பாரிய பிரதிபலனை பெற்றுக்கொள்ள முடியாது போனது. எனினும், நல்ல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்.

இதேவேளை, 20ஆவது திருத்தம் கொண்டு வரும்போது, என்னால் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு என்னால் அனுமதிக்க முடியாது. அதனால், 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க முடியாது என ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதமொன்றையும் எழுதியிருந்தேன்.

நல்லாட்சியில் என்னுடைய பதவிக் காலம் நிறைவடையும் வரை நான் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். இதேவேளை, பொலிஸ் மற்றும் ஒழுங்கு அமைச்சானது 2018 – 2019 வரையான ஒரு வருட காலம் என்னிடம் இருந்தது. ஆனால், ஏப்ரல் தாக்குதல் தொடர்பான பயங்கரவாத குழுக்கள் முன்னெடுத்த பயிற்சிகள், கூட்டங்கள், ஆயுதம் ஒன்று சேர்த்தல் போன்றன எனக்கு முன்னிருந்த சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சிடம் கிடைக்கப்பெற்றிருந்தது.

அதேபோன்று, 2017 முதல் சஹ்ரானுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால், 2019 ஜனவரி மாதம் இடம்பெற்ற பாதுகாப்பு சபையின்போதே இந்த பிடியாணை குறித்து எனக்கு தெரியவந்தது. இவ்வாறான நிலைமையில், ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த தாக்குதல் தொடர்பாக எவ்வித புலனாய்வு தகவல்களும் எங்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால், இச் சம்பவம் தொடர்பான தகவல்கள் தெரிந்து நான் வெளிநாட்டுக்குச் சென்றதாக இன்றும் கூறப்படுகின்றது. ஆனால், அதனை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். ஆபத்தான நிலைமையில் நான் நாட்டை விட்டுச் செல்லும் நபரல்ல.

புலனாய்வு, பொலிஸ், இராணுவ மற்றும் உரிய அமைச்சும் பிரதேச ரீதியாக முறைப்படி செயற்பட்டிருந்தால் இந்தத் தாக்குதலை தடுத்திருக்க முடியும் - என்றார் மைத்ரி.

## சட்டத்தரணி ஹிஜாஸ்...

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகியோரினால் நேற்றுக் காலை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஹிஸ்புல்லா தாக்கல் செய்த பிணை விண்ணப்பத்தை புத்தளம் மேல் நீதிமன்றம் அண்மையில் நிராகரித்திருந்தது.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையதாகக் கூறப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், கிட்டத்தட்ட 20 மாதங்களாக அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஹிஸ்புல்லாவை முற்படுத்தியபோது, மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணை விண்ணப்பத்தை தாக்கல் செய்யுமாறு அவருக்கு நீதிபதி அறிவித்தார்.

ஜனவரி 20ஆம் திகதி ஹிஸ்புல்லா மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்தனர்.

## களனி பல்கலை...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

களனி பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் மருத்துவ மாணவர் தாக்கப்பட்டதாக நேற்று (02) அதிகாலை 1.30 மணிக்கு பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்தன. தகவல் கிடைத்தவுடன், அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைகளுக்கமைய, இரு மாணவர்களுக்கிடையிலான முரண்பாட்டின் பிரதிபலனாகவே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. இரு மோட்டார் சைக்கிளில் வந்த தரப்பினரே இவ்வாறு மருத்துவ மாணவரை தாக்கியுள்ளனர்.

தாக்குதல் தொடர்பாகவும் காயமடைந்தவர் தொடர்பாகவும் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, தாக்குதலில் காயமடைந்த மூன்று மாணவர்கள் ராகம வைத்தியசாலையிலும் இருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்த ராகம வைத்திய பீடத்தின் மாணவர் ஒருவர் இச் சம்பவத்தின் சந்தேக நபர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு, மாணவர்களால் ஒரு மோட்டார் சைக்கிளும் சாரதியும் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது அரச நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனம் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் மாணவர் தவிர்ந்த ஏனைய அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

மேலும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவர்களிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு, இவர்களுக்கு யாரேனும் உதவிகளை வழங்கியிருந்தால் அவர்களுக்கு எதிராகவும் பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.

## சுதந்திர தினமன்று...

நாளை காலை 10 மணியளவில் முள்ளி வாய்க்கால் முற்றத்தில் வட – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் மற்றும் வடகிழக்கு சிவில் சமூகங்களின் ஏற்பாட்டில் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே குறித்த போராட்டத்தில் இளைஞர் யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், தனியார் பஸ் சங்கங்கள், தமிழ்த் தேசியத்தின் பால் செயற்பட்டுவருகின்ற கட்சிகள், மதகுருமார்கள், என அனைத்து உறவுகளும் கலந்துகொண்டு எமக்கான ஆதரவினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழினத்திற்கான சுதந்திரம் கிடைக்காத நிலையிலேயே நாம் இதுவரை போராடிக் கொண்டிருக்கின்றோம். நாம் எமது உரிமையை இழந்திருக்கின்றோம், உறவுகளை இழந்திருக்கின்றோம். எனினும் உணர்வுகளை இழக்கக்கூடாது. தமிழனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் இது தலயாய கடமை என்பதை புரிந்துகொண்டு குறித்த போராட்டத்தில் ஒன்றிணைந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். நாம் அனைவரும் ஒருமித்து குரல்கொடுத்தாலேயே எமது உரிமையையும் சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உளரீதியான ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருப்பதாக நீதி அமைச்சர் அண்மையில் தெரிவித்தார். நாங்கள் நன்றாகத்தான் இருக்கிறோம். எமக்கு மன உளைச்சல் இல்லை. எமது உறவுகள் கிடைக்கும்வரை நாம் சோர்ந்துபோய் ஒடுங்கிவிடமாட்டோம்.

எனவே, எமது உறவுகளை கொச்சைப்படுத்த வேண்டாம் என்று அவரிடம் கேட்டுக்கொள்கிறோம். எமக்கான நீதி கிடைக்கும்வரை நாம் உறுதியாக நின்றுபோராடுவோம் என்றார்.

## பயங்கரவாத தடைச்சட்டத்தை...

1979ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான திருத்தங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை 22ஆம் திகதி இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

மார்ச் 3ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையின் அடிப்படையில் இலங்கை குறித்து விவாதிக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இன்னொரு அமர்விற்கு முன்னதாக அதன் தோல்வியுள்ள மனித உரிமை செயற்பாடுகளில் இருந்து கவனத்தை திசைதிருப்புவதற்காக இலங்கை அரசாங்கம் குறைந்தபட்சம் நடவடிக்கையை முன்னெடுக்க துணிகின்றது என சர்வதேச யூரர்கள் ஆணைக்குழுவின் சட்ட மற்றும் கொள்கை இயக்குநர் இயன் சீடர்மென் தெரிவித் துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

மோசமான குறைபாடுகளை கொண்டுள்ள இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தினை இந்த நேர்மையற்ற சீர்திருத்த முயற்சிகளால் திருத்த முடியாது. அதனை முழுமையாக நீக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் இலங்கைக்கு உள்ளே அல்லது வெளியே உள்ள எந்த தனிநபரினதும் தனிநபர் குழுக்களினதும் அமைப்புகளினதும் சுதந்திரத்தினை தன்னிச்சையாகவும் காலவரையறையின்றியும் பறிப்பதற்கு வழிகோலுகின்றது. இந்த பலவீனத்திற்கு தீர்வை காண்பதற்காக முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களின் இரண்டாம் பிரிவு தடுப்பில் ஒருவரை வைத்திருக்கக்கூடிய காலத்தை 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக குறைத்துள்ளது.

10ஆவது சரத்தில் 12 மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர் பிணை பெறுவதற்கு தகுதியுடையவர்.

இந்த உத்தேச திருத்தங்கள் எந்த வகையிலும் அடிப்படை திருத்தங்களுக்கு தீர்வை காணவில்லை, என தெரிவித்துள்ள சர்வதேச அமைப்பு அவை நீதிமன்றத்தின் ஒருவரை ஆஜர் செய்யாமல் அவரின் சுதந்திரத்தை ஒரு வருடத்திற்கு முடக்குவதற்கு அனுமதியளிக்கின்றது.

மேலும், சரத்து 10இன் உட்பிரிவு விசாரணைகள் முடியும் வரை சந்தேகநபர்களை தடுத்துவைப்பதற்கு நீதிமன்றத்தின் அனுமதியை பெறுவதற்கு அதிகாரிகளுக்கு அனுமதியை வழங்குகின்றது. இலங்கை கைச்சாத்திட்டுள்ள ஐ.சி.சி.பி.ஆரின் 9 ஆவது பிரிவு சுதந்திரம் பறிக்கப்பட்ட எவருக்கும் நடைமுறை உத்தரவாதங்களை வழங்குகின்றது. ஆனால், பயங்கரவாத தடைச்சட்டத்திலும் உத்தேச திருத்தத்திலும் அவை காணப்படவில்லை.

உதாரணத்திற்கு எந்தவொரு காரணத்திற்காக தடுத்துவைக்கப்பட்டுள்ள நபரையும் தடுப்புக் காவலின் சட்டபூர்வமான தன்மைகளை உறுதி செய்வதற்காக கூடியவிரைவில் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்செய்ய வேண்டும், நீண்டகாலம் விளக்கமறியலில் நீதித்துறையின் கண்காணிப்பின்றி வைத்திருப்பது இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை தெளிவாக மீறும் செயலாகும்.

பல மாதங்களாக அல்லது வருடங்களாக குற்றச்சாட்டுகள் அல்லது விசாரணைகள் எதுவுமின்றி தடுத்துவைத்திருப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட பலரின் சுதந்திரத்தை பயங்கரவாத தடைச்சட்டம் பறித்துள்ளது. மேலும், தன்னிச்சையான காலவரையறை அற்ற தடுத்துவைப்பின்போது பலர் சித்திரவதை செய்யப்படுவதற்கும் மோசமாக நடத்தப்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது- என சர்வதேச யூரர்கள் ஆணைக்குழுவின் சட்ட மற்றும் கொள்கை இயக்குநர் இயன்சீடர்மென் மேலும் தெரிவித்துள்ளார்.

## மன்னார் காற்றாலை...

மன்னார் தாழ்வுபாடு தொடக்கம் நடுக்குடா வரை நிறுவப்பட்டுள்ள பாரிய காற்றாலை காரணமாக மீன் வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், நேற்றுமுன்தினம் (01) மதியம் இடம்பெற்ற மன்னார் பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டத்தில் காற்றாலை செயற்றிட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை நிறுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், நேற்றைய தினம் குறித்த காற்றாலை பூங்காவிற்கு கோட்டாபய ராஜபக்ஷ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த வருடம் குறித்த நடுக்குடா காற்றாலை மின் செயற்றிட்டத்தை பார்வையிடுவதற்காக இந்தியாவின் தொழிலதிபரான அதானி வருகை தந்ததுடன், இலங்கைக்கான சீனத் தூதுவரும் காற்றாலை மீன் செயற்றிட்டத்தை பார்வையிட்ட நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் வருகை தந்துள்ளார்.

கடந்த மாதம் அளவில் காற்றாலை விரிவுபடுத்தல் திட்டத்திற்கான ஆய்வு நடவடிக்கைகளுக்காக விசேட குழுவினர் எருக்கலம்பிட்டி பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் மக்களின் எதிர்ப்பால் குறித்த ஆய்வு நிறுத்தப்பட்டது.

அதேநேரம் தற்போது தாழ்வுபாடு தொடக்கம் சௌத்பார் கடற்கரை வரை காற்றாடிகளை பொருத்துவதற்கான விரிவுபடுத்தல் திட்டம் உயர் மட்ட ரீதியில் இடம்பெறுவதாகவும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட நிலையில், அவற்றை நிறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்காக 9 முதல்...

யோ.தர்மராஜ்

தேர்தலுக்கு நாங்கள் பயப்படவில்லை. நாளையே தேர்தல் வைத்தாலும் அதனை எதிர்நோக்க நாங்கள் தயார்.

இவ்வாறு தெரிவித்தார் நிதியமைச்சர் பெசில். நேற்று மாலை நிதியமைச்சு ஏற்பாடுசெய்த ஊடக சந்திப்பு கொழும்பு கிங்ஸ்பெரிஹோட்டலில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட நிதியமைச்சர் மேலும் கூறியதாவது,

நல்லாட்சி காலத்தில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. ஆனால் தேர்தலுக்கு நாங்கள் பயப்படவில்லை. நாளையே தேர்தல் வைத்தாலும் அதனை எதிர்நோக்க நாங்கள் தயார். எதிர்வரும் 9ஆம் திகதி முதல் இதற்கான தயார்படுத்தல்களை நாங்கள் செய்வோம். அநுராதபுரத்திலிருந்து எமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம். அதன்பின்னர் மாவட்ட மட்டத்தில் எமது பிரசாரத்தை நடத்துவோம்.

விவசாயிகளுக்கான நட்டஈடு வழங்கும் விவகாரத்தில் நெல் விவசாயிகளுக்கு மட்டும் என்று அரசு எப்போதும் கூறவில்லை. விவசாயிகள் அனைவரை பற்றியுமே அமைச்சரவையில் பேசியிருந்தோம். உத்தேச பொருட்கள் மற்றும் சேவை வரியானது உள்நாட்டு இறைவரி, சுங்கம் மற்றும் கலால் திணைக்களங்களின் கீழ் நிர்வகிக்கப்படும்.

கலால் வரியானது கலால் திணைக்களத்தினால் அறவிடப்படும். வட் வரியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும், தொலைத்தொடர்பு கட்டணங்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்படும், சிகரெட் மற்றும் வாகன வரி இலங்கை சுங்கத்தால் சேகரிக்கப்படும் - என்றார் நிதி அமைச்சர் பெசில்.

## பருத்தித்துறை பிரதேச...

இதன்போது பிரதேச செயலகத்தின் இரண்டு வாசல்களையும் முடக்கி அதற்கு முன்பாக அமர்ந்திருந்து மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனால் பிரதேச செயலகத்தின் இன்றைய செயற்பாடுகள் யாவும் பாதிக்கப்பட்டிருந்தன.

அத்தோடு, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியையும் மறித்து, வீதியில் இந்திய மீனவர்களால் அறுத்து நாசமாக்கப்பட்ட வலைகளையும் விரித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்ததோடு பாடசாலை மாணவர்கள் மாத்திரம் வீதியில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# இலங்கையில் அதிகூடிய இணைய வேக சாதனையை படைத்துள்ள எயார்டெல்

## அடுத்த கட்டமாக 5G பரிசோதனையை ஆரம்பிக்கிறது

எயார்டெல் லங்கா வர்த்தக வலையமைப்பில் நேரடி 5G சோதனைகளை மேற்கொள்கிறது. இது நாட்டில் இதுவரை பதிவு செய்யப்படாத அதிகூடிய இணையத்தள வேகத்தை பதிவு செய்துள்ளதோடு, எயார்டெல் லங்கா 1.9 Gbps இற்க்கும் அதிகமான வேகத்தில் 5Gக்கான அதன் தயார்நிலையில் இருப்பதை அறிவித்துள்ளது.



"இலங்கையானது முன்னோடி தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் வரையறுக்கப்பட்ட ஒரு சந்தையாக இருப்பது மற்றும் எமது 5G திறன்களை அதிகரிப்பதற்கு இன்று நாம் செய்யும் முதலீடுகள் இலங்கையின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான டிஜிட்டல் அடித்தளத்தை அமைக்கும். இன்று அதற்கு சாட்சியாக, நாட்டிலேயே அதிக இணையத்தள வேகத்தை பதிவு செய்ய முடிந்தது. மேலும் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும்போது சாதனைகளை முறியடிப்போம்" என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆஷிஷ் சந்திரா தெரிவித்தார்.

"எங்கள் அதிவேக நெட்வொர்க் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிகாரமளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகவும் மலிவு விலையில் உலகத்தரம் வாய்ந்த நெட்வொர்க்கை வழங்குவதற்கான எங்கள் உட்பார்வைக்கு ஏற்ப உள்ளது. எயார்டெல்லில் உள்ள அனைவருக்கும் இது ஒரு சிறந்த தருணமாகும்" என்றும் அவர் மேலும் கூறினார்.


எயார்டெல் 5Gஆனது தற்போதுள்ள தொழில்நுட்பங்களுடன் ஒப்பிடும்போது 10 மடங்கு அதிவேகம், 10 மடங்கு குறைவான தாமதத்திறன் மற்றும் 100 மடங்கு பல பணிகளை ஒரே நேரத்தில் செய்யும் திறன் கொண்டது. எயார்டெல் உலகின் புத்தாக்கமான மொபைல் மற்றும் நெட்வொர்க் கண்டுபிடிப்பாளர்களில் ஒன்றாக இருப்பதுடன், நெட்வொர்க் மேம்படுத்தல்களில் நிறுவனத்தின் கணிசமான முதலீடு காரணமாக 5G பரிசோதனைகளை ஆரம்பிக்கும்.

எயார்டெல் அதன் உலகத் தரம் வாய்ந்த 4G உட்கட்டமைப்பு நாடு முழுவதிலும் 5G தயாராக இருப்பதாக அறிவித்தது. இதனால் அடுத்த தலைமுறைக்கான வலையமைப்பிற்கு தடையற்ற மாற்றத்தை எளிதாக்குகிறது. 3500 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில், தற்போதுள்ள தாராளமயமாக்கப்பட்ட ஒலி அலைக்கற்றையை (Spectrum) NSA (Non Stand Alone) நெட்வொர்க் தொழில்நுட்பத்தின் மூலம் எயார்டெல்லுக்கு இதை செய்ய முடிந்தது.

இந்தப் புரட்சியானது, அனைத்து களங்களிலும் எயார்டெல் நெட்வொர்க்கின் 5G தயார்நிலையை நிரூபித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாரதி எயார்டெல் லங்கா நிறுவனம் தொடர்பாக:

2009 ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் (எயார்டெல் லங்கா) நிறுவனம் தற்போது ஒரு மில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். தமது வணிக செயற்பாடுகளை ஆரம்பித்த 2009ஆம் ஆண்டிலிருந்து 3 வருட குறுகிய காலப்பகுதிக்குள் எயார்டெல் நாட்டில் எல்லா பகுதிகளிலும் பரந்து விரிந்த சேவையை வழங்கியதோடு, இன்று நாடு முழுவதிலும் தமது சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வலயமைப்பு சேவைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்வுகள் உட்பட டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.airtel.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.

## சட்டவிரோத நிதி முதலீடு நாமலுக்கு எதிரான வழக்கு மார்ச் வரை ஒத்திவைப்பு

நாடாளுமன்ற உறுப்பினராக கடமையாற்றிக்கொண்டு சட்டவிரோதமாக உழைக்கப்பட்ட 30 மில்லியன் ரூபா நிதியை கவர்ஸ் கோபரேட் நிறுவனத்தில் முதலீடு செய்ததாக குற்றச்சாட்டு முன்வைத்துள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட



பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பான அடுத்தக்கட்ட விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று முன்தினம் (01) உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்கவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதிவாதிகள் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஒருவரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, இந்த வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி இடம்பெறுமென அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராக கடமையாற்றிக்கொண்டு சட்டவிரோதமாக உழைக்கப்பட்ட 30 மில்லியன் ரூபா நிதியை கவர்ஸ் கோபரேட் நிறுவனத்தில் முதலீடு செய்தமையினால், நிதிச் சலவை தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் குற்றம் செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டின்பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 06 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 03ஆம் திகதி, வியாழக்கிழமை

# கவனிக்கப்படவேண்டிய எச்சரிக்கை!

கொரோனா மருத்துவக் கழிவுகள் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்துபவை என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறித்து கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

உலகம் முழுவதும் தற்போது ஒமிக்ரொன் வைரஸ் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனையடுத்து உலக நாடுகளில் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோரது எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

இவர்களுக்கு சிகிச்சையளிக்க பல்வேறு மருத்துவ உபகரணங்கள், ஊசிகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. உலகளவில் மருத்துவக் கழிவுகள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று பல்வேறு விஞ்ஞானிகள் அவ்வப்போது எச்சரிக்கை விடுத்து வருவர்.

இதேபோன்று தற்போது உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது. கொரோனா தாக்கம் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகளிடம் பயன்படுத்தப்பட்ட மருத்துவ உபயோகப் பொருட்கள் பயன்பாட்டுக்குப் பின்னர் கழிவுகளாக மாறி வெளியே கொட்டப்படுகின்றன.

இவை சுற்றுச்சூழலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. தடுப்பு மருந்து கண்ணாடிக் குடுவைகள், கொரோனா பரிசோதனைக் கருவிகள், பிளாஸ்ரிக் கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுகள் தொன் கணக்கில் மருத்துவக் கழிவுகளாக குவிந்து உலக நாடுகளை மாசுபடுத்தி வருகின்றன.

இந்தக் கழிவுகள் மூலமாக எளிதாக கொரோனா பரவும் அபாயமும் உள்ளது. கொரோனா மருத்துவக் கழிவுகள் நீண்டநாள் உயிர் வாழும் தன்மையுடையவை என்பதால் இவற்றைப் பத்திரமாக அப்புறப்படுத்த வேண்டும். இவற்றை தீயிலிடுவது, நீர்நிலைகளில் கொட்டுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடக்கூடாது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இந்த மருத்துவக் கழிவுகளால் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. மருத்துவப் பயன்பாட்டுப் பொருட்கள் முடிந்தவரை மறுசுழற்சி செய்யப்படும் பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். பிளாஸ்ரிக் உபயோகத்தைக் குறைக்க வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

மருத்துவர்கள் அணிந்துகொள்ளும் கொரோனா பாதுகாப்பு உடைகள் கழிவுகளாக வெளியேற்றப்படுகின்றன. உலகம் முழுவதும் அண்ணளவாக 80 ஆயிரம் தொன் பாதுகாப்பு உடைகள் குப்பைகளாக மாறியுள்ளன. பலநூறு திமிங்கலங்களின் எடைக்கு சமமான இந்தக் குப்பைகள், எதிர்காலத்தில் உலக சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக அமையும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

கொரோனா தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவர கொவிட்-19 கழிவுகளை அப்புறப்படுத்துவதிலும் கவனமாக இருப்பது அவசியம். காரணம், கொவிட்-19 கழிவுகளாலும் நிறைய பாதிப்புகள் மற்றும் தொற்றுகள் உண்டாக வாய்ப்புள்ளது.

இந்த கொவிட்-19 காலத்தில், குறிப்பாக இந்தக் கழிவுகளைக் கையாள்பவர்கள் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலோர் வீட்டிலேயே குணமடைந்து வருவதால், அவர்கள் பயன்படுத்திய முகமூடிகள், சனிட்ரைசர் போத்தல்கள், இரத்தத்துடன் கூடிய பேப்பர்கள், பிபிஇ கருவிகள், கையுறைகள் மற்றும் பிற மருத்துவக் கழிவுகள் மற்றும் அவற்றின் உள்நாட்டுக் குப்பைகளை அப்புறப்படுத்துவது சுற்றுச்சூழலுக்கும், மனித ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றே கூறலாம்.

இந்த மாதிரியான திடக் கழிவுகளை சேகரிப்பவர்கள் அந்தக் கழிவுகளை அப்புறப்படுத்த அவற்றைப் பிரிக்கவேண்டியுள்ளது. எனவே, இந்த தொற்றுக் கழிவுகளை எவ்வாறு பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தல்களை வழங்கவேண்டியுள்ளது. தொற்றுக் கழிவுகள் என்பது ஒருவகைக் பூஞ்சைகளாகும். இது வைரஸ்கள், பக்டீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணிகள் போன்ற நோய்க்கிருமிகளை போதுமான அளவு கொண்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இது நோயைப் பரப்பும் அபாயத்தை அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.

கொவிட்-19ஐக் கண்டறியப் பயன்படுத்தும் பொருட்கள், சாதனங்கள் இத்தகைய கழிவுகள் - முக்கியமாக இரத்தம், திசுக்கள், உடல் திரவங்கள், உறுப்புகள், ஊசிகள், வெப்பமானி, கழிப்பறை ஆவணங்கள், துணியால் துடைப்பது சிறுநீர்ப் பைகள் மற்றும் பிற மருத்துவ சாதனங்கள் அல்லது பாதிக்கப்பட்ட நோயாளிகளின் உடல் உறுப்புகளுடன் தொடர்புகொண்ட பொருட்களால் மாசுபடுத்தப்படுகின்றன.

ஓர் ஆய்வின்படி, மிகவும் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து ஒவ்வொரு நாளும் உற்பத்தி செய்யப்படும் அபாயகரமான கழிவுகளின் அளவு 3.40 கிலோ ஆகும். கொவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடமிருந்து உருவாகும் கழிவுகளின் திடீர் அதிகரிப்பு, இலங்கையில் மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள கழிவு முகாமைத்துவத்துறையில் பெரும் அழுத்தத்தை தற்போது ஏற்படுத்தி வருகிறது.

தொற்றுக் கழிவுகள் முறையாக சேமிக்கப்படாமலோ, கொண்டு செல்லப்படாமலோ, கையாளப்படாமலோ இருந்தால் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. ஏனென்றால், ஓர் ஆய்வின்படி, கொவிட்-19 வைரஸானது பிளாஸ்ரிக், உலோகம் மற்றும் கண்ணாடி போன்ற மேற்பரப்புகளில் ஒன்பது நாட்கள்வரை செயற்படும் என மருத்துவ ஆய்வுகள் சொல்கின்றன.

வீடுகளில் கொவிட் -19 நோயாளிகள் இருந்தால் அவர்களின் கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டும். இக்கழிவுகளை கவனமாகக் கையாள வேண்டும். அவற்றை காற்றில் திறந்துவிடக்கூடாது. மருத்துவக் கழிவுகளை உள்நாட்டுக் குப்பைகளுடன் கலக்கக்கூடாது. கழிவுகளை சேகரித்து வைத்த பிறகு கழிவுக் கொள்கலனை ஒழுங்காக சீல் வைக்கவேண்டும். கழிவுகளுடன் நேரடித்தொடர்பு கொள்வதைத் தவிர்க்க, கழிவுகள் 70 சதவீதத்தை எட்டுவதற்கு முன்பு அந்த பொதியை சீல் வைக்கவேண்டும்.


குப்பைப் பையை சீல் வைத்த பிறகு கைகளை சரியாகக் கழுவ வேண்டும். தொற்றுக் கழிவுகளை அப்புறப்படுத்துவது அவற்றுக்கான ஒரு தனி தொட்டியில் சேகரிக்கப்பட வேண்டும். அநேகமாக அடையாளம் காணக்கூடிய பைகளில் சேகரிப்பது நல்லது. கொவிட்-19 நோயாளிகள் பயன்படுத்தும் எஞ்சிய உணவுப் பொதிகள் மற்றும் உணவு எச்சங்கள் போன்ற கழிவுகளை பொதுவான கழிவுகளாகக் கருதி மற்ற கழிவுகளுடன் சேர்க்கக்கூடாது.

முறையற்ற கழிவு முகாமைத்துவத்தால் கொவிட்-19 வைரஸ் பரவல் வீதம் 2025ஆம் ஆண்டுக்கப்பால் மேலோங்க கூடும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனவே, இதைக் கருத்திற்கொண்டு, முறையற்ற கழிவு மேலாண்மை காரணமாக மற்றொரு தொற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்க மருத்துவக் கழிவுகளின் நீண்டகால முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனவே, பயன்படுத்தப்படும் முகமூடிகள் மற்றும் மருத்துவக் கழிவுகளை முழுமையான முறையில் அப்புறப்படுத்த வேண்டும்.

இது குறித்து பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஒவ்வொரு குடிமக்களும் அரசாங்கத்திற்கு ஒத்துழைத்து செயற்படுவதும் அவசியம். உலக சுகாதார ஸ்தாபனத்தின் எச்சரிக்கையை தீவிரமாக கவனத்திற்கொள்ள வேண்டும்.

# பேரறிஞர் அண்ணா!





காஞ்சீவரம் நடராசன் அண்ணாதுரை (C. N. Annadurai, 15 செப்டெம்பர், 1909 – 03 பெப்ரவரி, 1969) இந்தியாவின் பிரபல அரசியல்வாதியும், மதராஸ் மாநிலத்தின் கடைசி முதல்வரும், தமிழகத்தின் முதலாவது முதலமைச்சருமாவார். இவர் அறிஞர் அண்ணா எனவும் பேரறிஞர் அண்ணா எனவும் அழைக்கப்படுகிறார். இவர் இந்தியா குடியரசான பிறகு ஆட்சியமைத்த காங்கிரஸ் அல்லாத முதலாவது திராவிடக் கட்சித் தலைவரும், அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தவருமாவார்.

அண்ணாதுரை, சின்ன காஞ்சீபுரத்தில் வரகுவாசல் தெருவில், கதவெண் 54இல் உள்ள வீட்டில், செங்குந்தக் கைக்கோள முதலியார் மரபில், கைத்தறி நெசவாளர் நடராசன் முதலியார் - பங்காரு அம்மாள் தம்பதியருக்கு மகனாக சௌமிய ஆண்டு ஆவணித் திங்கள் 31ஆம் நாள் (1909 - செப்டெம்பர் 15) நடுத்தரக் குடும்பமொன்றில் பிறந்தார். சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பாடசாலையிலும், பின்னர் பச்சையப்பன் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

**இளமைப் பருவம்**

அவர் தந்தை ஒரு கைத்தறி நெசவாளர். அண்ணாவின் அன்னை பங்காரு அம்மா, அண்ணா சிறு வயதாக இருக்கும்போது இறந்துவிட்டதால், அண்ணாவின் தந்தை நடராசன், இராசாமணி என்பவரை மறுமணம் செய்துகொண்டார். அண்ணாவை இராசமணி அம்மாள் வளர்த்துவந்தார். அவரை அண்ணா "தொத்தா" என்று அன்புடன் அழைப்பார். அண்ணா மாணவப் பருவத்திலேயே ராணியம்மையாரை மணம்புரிந்தார். இவர்களுக்கு குழந்தையில்லாததால் தமது தமக்கையின் பேரக்குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்தனர். பச்சையப்பன் உயர்நிலைப் பாடசாலையில் சேர்க்கப்பட்ட அண்ணாதுரை, குடும்ப வறுமை காரணமாக பாடசாலையிலிருந்து தனது படிப்பை தற்காலிமாக நிறுத்திக்கொண்டு, நகராட்சி அலுவலகத்தில் உதவியாளராக சிறிதுகாலம் பணிபுரிந்தார்.

**கல்வி**

1934 இல், இளங்கலைமாணி மேதகைமை (ஹொனர்ஸ்) மற்றும் அதனைத் தொடர்ந்து முதுகலைமாணி பொருளியல் மற்றும் அரசியல் பட்டப்படிப்புகளை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்றார். பின்பு பச்சையப்பன் உயர்நிலைப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியப் பணியை இடைநிறுத்தி பத்திரிகைத்துறையிலும், அரசியலிலும் ஈடுபாடுகொண்டார்.

**ஆங்கிலம் பேச மறுத்த அண்ணா**

அன்றைய காலகட்டத்திலும் கொஞ்சம் படித்துவிட்டால் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும். அதிலும் கல்லூரியில் படித்துவிட்டால் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்ற மனப்பான்மையும், ஆங்கில மோகமும் அதிகமிருந்தது. ஆங்கிலம் பேசினால் கௌரவம் என்று எண்ணிய காலம் அது. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த அண்ணா, விடுமுறையில் அவரின் பாட்டியின் இல்லம் அடைந்தபோது அவரின் பாட்டியார் சிறிதளவு ஆங்கிலம் பேசிக் காட்டுமாறு எவ்வளவோ வற்புறுத்தியும் ஆங்கிலம் பேச மறுத்து ஆங்கிலம் பேசினால் உனக்கென்ன புரியும்? தவிர, நாம் இப்பொழுது தமிழில் பேசிக்கொண்டுதான் இருக்கின்றோம். தேவையில்லாமல் வேண்டாம் என்று மறுத்துவிட்டார். அவரின் பாட்டியின் அன்புக் கட்டளையாக இருந்தாலும், போலியாக, தேவையில்லாமல் ஆங்கிலம் பேசுவதில் அண்ணாவிற்கு உடன்பாடில்லை.

**பேச்சாற்றல்**

அண்ணா தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறப்பாகச் சொற்பொழிவாற்றவும் எழுதவும் வல்லவர். இவர் பல முற்போக்கு, சீர்திருத்த நாடகங்களையும் எழுதியிருக்கிறார். அவற்றுள் சிலவற்றை இயக்கியுமிருக்கிறார்; சிலவற்றுள் நடித்திருக்கிறார். தமிழ்த் திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதியவரும் தன்னுடைய திராவிட சீர்திருத்தக் கருத்துகளை அதன்மூலம் முதன்முதலாகப் பரப்பியவரும் இவரே. நடுத்தர வர்க்க நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவரான அண்ணாதுரை, தன் ஆரம்பகால வாழ்க்கையை பாடசாலை ஆசிரியராகத் தொடங்கியவர், சென்னை இராசதானியில் (மெட்ராஸ் பிரசிடென்சி) தன் அரசியல் ஈடுபாட்டினை முதன்முதலில் பத்திரிகையாளராக, பத்திரிகையாசிரியராக வெளிப்படுத்தினார்.

**மொழிப்புலமை**

ஒரு தடவை சில இங்கிலாந்து மாணவர்கள் அண்ணாவை பரிகசிப்பதற்காக அவரிடம் "ஏனென்றால்" என்ற வார்த்தை மூன்று தடவை தொடர்ந்து வருகிற மாதிரி வாக்கியம் கூற முடியுமா என்று கேட்டனர். அதற்கு அவர்,

"No sentence can end with because, because, because is a conjunction. அதாவது

எந்தத் தொடரிலும் இறுதியில் வராச்சொல் ஏனென்றால், ஏனென்றால், ஏனென்றால் என்பது இணைப்புச்சொல்" என்று உடனே பதிலளித்தார்

**பெரியாருடனான தொடர்புகள்**

அதன்பின் பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, நீதிக் கட்சியில் சேர்ந்தார். பின்னர் பெரியாருடன் திராவிடக் கழகத்தில் இணைந்து, மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவுக் கருத்துகளையும், சமூக சீர்திருத்தக் கருத்துகளையும் பரப்புவதில் முன்னின்று ஈடுபட்டார். பெரியாரின் தனித்திராவிட நாட்டுக் கொள்கையின் காரணமாகவும், தன்னைவிட வயதில் இளையவரான மணியம்மையாரை பெரியார் மணம் புரிந்துகொண்டமையினாலும் கருத்துவேறுபாடுகொண்டு, திராவிடக் கழகத்தின் முக்கிய உறுப்பினர் பலருடன், 1949இல், பெரியாரை விட்டு விலகி, திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க.) என்ற புதிய இயக்கமொன்றை நிறுவினார். தனிக்கட்சி தொடங்கினாலும் தன் கட்சிக் கொள்கைகள் தாய்க்கட்சியான திராவிடக்கட்சியை ஒத்தே செயற்பட்டது. இந்தியாவின் தேசிய அரசியலில் பங்குகொள்ளும் விதமாக இந்தியா குடியரசானதிற்குப் பின்னர், இந்திய - சீனப் போருக்குப் பின்னர் 1963இல் தனது தனித்திராவிட நாட்டுக் கொள்கையைக் கைவிட்டார்.

ஆளும் காங்கிரஸ் கட்சிக்கெதிராக பல்வேறு போராட்டங்களில், பல்வேறு காலகட்டங்களில் ஈடுபட்டு அவ்வாட்சியை எதிர்க்கலானார். இறுதியில் 1965இல் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் மிகத் தீவிரமாக ஈடுபடலானார். ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டதன் விளைவாக மக்களாதரவை அவரும், அவரது கட்சியான திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும் அபரிமிதமாக பெற்றன.

**தத்துவம்**

அண்ணாதுரை இந்துக் குடும்பத்தில் பிறந்தவராயிருந்தாலும், அவரின் கோட்பாடு சமயம் சாராதவராகவே வெளிப்படுகின்றது. அவர்

**"ஒன்றே குலம், ஒருவனே தேவன் "**

என்ற கோட்பாட்டை வெளிப்படுத்தினார்.

**"கடவுள் ஒன்று, மனிதநேயமும் ஒன்றுதான்"**

என்பது அவர் கட்சியின் கொள்கை பரப்பாகவும், அவரின் தொண்டர்களாக கருதப்படும் அவரின் தம்பிகளின் கட்சி வாசகமாகவும் பின்பற்றப்பட்டது. அவர் ஒரு நேர்காணலில் **".....நான் எப்பொழுதுமே கடவுளிடம் உண்மையான நம்பிக்கையுடன் வாதாடுபவன்......"** என்றார்.

அண்ணாதுரை மூடநம்பிக்கை மற்றும் சமயச் சுரண்டல்களையும் பலமாகச் சாடினார், ஆனால், என்றுமே அவற்றின் சமூக தத்துவார்த்தங்களில் தலையிட்டதோ, எதிர்த்ததோ இல்லை.

**கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு**

அறிஞர் அண்ணா அவரது கட்சியின் முக்கிய கொள்கை முழக்கமாகவும் அவரது கட்சியின் பண்பாடாகவும் இம்மூன்று வார்த்தைகளை முன்மொழிந்தார். பொது வாழ்வில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கவேண்டிய அடிப்படையான பண்பாடுகள் இவை. கட்டுப்பாடு, கடமை ஆகியவை தனிப்பட்டு ஓர் அமைப்புக்குள் இருப்பவர் கடைப்பிடிக்கவேண்டிய குணநலன்களாக கருதப்படுகின்றது. கண்ணியம் என்பது பொதுவாக மற்றவர்களுடனும், அதிலும் சமுதாயத்தில் - அரசியலில் கலந்துகொள்ளும் அனைவருடனும் ஒருவருக்கொருவர் காட்டிடும் மதிப்பு, மரியாதை என்பனவற்றைக் குறிக்கும்.

15ஆம் பக்கம் பார்க்க....

# இன்றைய நாளில்...

- 1894 – யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1930 – பிரித்தானிய ஹொங்கொங்கின் கவுலூனில் இடம்பெற்ற மாநாட்டில் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1943 – டோர்செசுடர் என்ற அமெரிக்கக் கப்பல் ஜேர்மனியின் நீர்மூழ்கியினால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதில், 902 பேரில் 230 பேர் மட்டுமே உயிர் தப்பினர்.
- 1945 – இரண்டாம் உலகப் போரின்போது ஐக்கிய அமெரிக்காவின் 1,000 விமானங்கள் பேர்லின் மீது குண்டுகளை வீசின. இதன்போது 2,500 முதல் 3,000 வரையானோர் கொல்லப்பட்டனர்.
- 1966 – சோவியத் விண்கலமான லூனா-9 சந்திரனில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் என்ற பெருமையைப் பெற்றது.
- 1969 – யாசர் அரபாத் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரானார்.
- 1972 – ஈரானைப் பெரும் பனிப்புயல் தாக்கியது. அடுத்த ஏழு நாட்களில் 4,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- 1984 – அமெரிக்காவில் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு பெண்ணிலிருந்து மற்றொருவருக்கு கருமாற்றம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.
- 1984 – செலஞ்சர் விண்ணோடத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் புரூஸ் மக்காண்ட்லெஸ், ரொபர்ட் ஸ்டுவேர்ட் ஆகியோர் முதன்முதலாக விண்வெளியில் சுயாதீனமான நிலையில் நடந்து சாதனை படைத்தார்கள்.
- 1989 – பராகுவேயில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியையடுத்து 1954 இலிருந்து ஆட்சியிலிருந்த சர்வாதிகாரி அல்பிரெடோ ஸ்ட்ரோயெசுனர் பதவியிழந்தார்.
- 1998 – தம்பலகாமம் என்ற கிராமத்தில் ஊர்க்காவல் படையினரின் சுற்றி வளைப் பின்போது சிறுவர்கள் உட்பட எட்டு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2006 – அல்-சலாம் 98 என்ற எகிப்திய பயணிகள் கப்பலொன்று செங்கடலில் 1,721 பேருடன் மூழ்கியதில் 435 பேர் மட்டும் மீட்கப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்



# இன்றைய ராசி பலன்

03.02.2022 வியாழக்கிழமை தை 21

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்: சதயம்** | இரவு 9.17 வரை | அதிகாலை 4.38 வரை |
| மாலை 4.35 வரை | **சிவம்** | **முற்கரணம்: தைதுலம்** |
| **பூரட்டாதி** | இரவு 9.17 - 04.02.2022 | காலை6.15 -மாலை 5.21 |
| மாலை 4.35 - 04.02.2022 | இரவு 7.10 வரை | **பிற்கரணம்: கரஜம்** |
| மாலை 3.58 வரை | **திதி: பூர்வ பட்ச திரிதீயை** | மாலை 5.21 - 04.02.2022 |
| **யோகம்: பரிகம்** | காலை 6.15 - 04.02.2022 | அதிகாலை 4.38 வரை |

| | |
|---|---|
| **சுப நேரங்கள்** | காலை 9.27 - 10.56 |
| காலை 11.14 - பி.ப 12.24 | **எமகண்ட காலம்** |
| **அசுப நேரங்கள்** | காலை 6.29 - 7.58 |
| **ராகு காலம்** | **துர் முகூர்த்தம்** |
| பிற்பகல் 1.53 - 3.22 | காலை 10.26 - 11.13 |
| **குளிகை காலம்** | மாலை 3.10 - 3.58 |

**மேஷம்:** கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு கௌரவம் கிடைக்கப் பெறலாம். நண்பர்களிடமிருந்து நிதி உதவி ஏற்படலாம். செலவுகள் அதிகரிப்பால் கவலை தோன்றலாம். பிள்ளைகளுடன் வாக்குவாதம் தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்:** நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணிகளில் நல்ல நிலை ஏற்படலாம். திருமண உறவில் மனப் பிரச்சினைகள் நீங்கி இனிமை பெருகும். புதிய வருவாய்க்கான நல்ல வழிமுறைகளை பயன்படுத்துவது நன்மை தரலாம். தன்னம்பிக்கை அதிகரிக்கலாம்.

**மிதுனம்:** உயர் கல்விக்கான வெளிநாட்டு பயணம் உருவாகலாம். புதிய நிதி திட்டங்கள் கிடைக்கலாம். எதையும் உறுதி செய்யுமுன் நன்மை தீமைகளை கவனமாக ஆராய்வது நல்லது. உங்களிடம் கடன் வாங்கியவர்களிடம் இன்று திரும்ப பெற இயலாமல் போகலாம்.

**கடகம்:** பிள்ளைகளின் பிரச்சினைகளை கேட்டு விளங்கிக் கொள்ளுவது நல்லது. உடலில் பலவீனம் உணரப்படலாம். தொழில்முறை விடயங்களில் பொறுப்பு அதிகரிக்கலாம். இன்று பண நிலைமையை மனதில் இருத்தி செலவுகள் செய்வது நல்லது. இறைவணக்கம் நன்மை.
சந்திராஷ்டமம்: ஆயிலியம் நட்சத்திரத்திற்கு காலை10.51 -04.02.2022 காலை 10.03 வரை

**சிம்மம்:** கூட்டுத்தொழில் இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். வருவாய் மேம்படும். புதிய தொழில் அல்லது வேலை தொடங்க சாதகமான நாள். குடும்பத்தில் ஒருவரின் திருமணம் பற்றிய விடயம் ஏற்படலாம். பணிகளில் பாராட்டு கிடைக்கலாம். கிரக ஒத்துழைப்பு இன்று மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** வேலைத்தளத்தில் மேலதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு கீழ்ப்படிவது நல்லது. புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பது நல்லது. தத்துவ விடயங்களில் ஆர்வம் உண்டாகலாம். சமூகத்தில் நற்பெயர் உருவாகலாம்.

**துலாம்:** மாணவர்களின் புதிய திறனுக்கான கற்கை முயற்சி உண்டாகலாம். வீதிகளை கடந்து செல்லும்போதும், வாகனம் செலுத்துவதிலும் கவனம் தேவைப்படலாம். உங்கள் அறிவுரை பிறருக்கு பயனளிக்கும். சமூகப் பணிகளில் ஆர்வம் உண்டாகலாம்.

**விருச்சிகம்:** பங்குச்சந்தைகளில் நன்மை கிடைக்கலாம். உங்கள் மீதான எதிர்ப்பு விடயங்களில் கவனம் தேவைப்படலாம். நிதி இலாபங்களை தரும் புதிய சூழ்நிலை உருவாகலாம். சில சுபச் செய்திகள் கிடைக்கப் பெறலாம்.

**தனுசு:** வாழ்க்கைத்துணையுடன் மகிழ்வான நாளாக அமையலாம். திருமணத்திற்கு காத்திருப்போருக்கு சுபச் செய்திகள் கிடைக்கப் பெறலாம். அரசாங்கப் பணிகளில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். ஆளுமை திறன் அதிகரிக்கும்.

**மகரம்:** சொத்து விடயங்களில் முதலீடு செய்யலாம். நண்பர்களின் ஆதரவு பெருகும். மன அழுத்தம் நீங்கப் பெறலாம். முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புகள் உருவாகலாம்.

**கும்பம்:** வேலைத்தளத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். வணிக செயல்களில் ஏற்றம் உண்டாகலாம். உடல்நலம் சீராகும். உறவுகளின் சந்திப்பால் அதிக மகிழ்ச்சி பெறலாம். ஆடம்பர செலவுகளை தவிர்ப்பது நன்மை.

**மீனம்:** வேலைகளில் எதிர்பார்த்த நன்மை கிடைக்காமல் இருக்கலாம். அன்னையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. மாணவர்களுக்கும் கல்வியில் அதிக ஈடுபாடு தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை தரும்.

# ராகம வைத்திய பீட மாணவர்களிடையே மோதல்! வெளியாட்கள் அழைத்து வரப்பட்டதால் நேற்று சர்ச்சை







ராகம வைத்திய பீடத்தின் மாணவர் விடுதியில் நேற்று (02) காலை இடம்பெற்ற மோதலில் நான்கு மாணவர்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயங்களுக்குள்ளான வைத்திய பீட மாணவர்கள் மூவர் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையிலும், ஒருவர் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக வெளியிலிருந்து 15 பேர் வரையில் வருகை தந்திருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு, வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட நபர்களில் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் சாரதி என கருதப்படும் நபரொருவர் ராகம பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் வந்த வாகனம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட நபர்களில் ஒருவர் அரசாங்க முக்கியஸ்தர் ஒருவரின் கைக்கூலி என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் புத்திக்க ராஜபக்ஷவின் தலைமையில், குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அசேல பெரேரா உள்ளிட்டோர் தலைமையில் விசாரணைகள், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெளி ஆட்களை அழைத்து வந்த மாணவன் காயங்களுக்குள்ளான நிலையில், நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இந்த சம்பவம் தொடர்பில் கைதான 6 சந்தேக நபர்களில் ஐவர் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியர் மிரட்டப்பட்ட சம்பவத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் மௌனம் ஏன்?

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விசனம்



கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தொடர்ந்து மௌனம் சாதிப்பதையும் பாதிக்கப்பட்ட அவரது பணிப்புக்குள் உள்ள வைத்திய அதிகாரி தொடர்பில் எதுவித கரிசனையையும் காட்டாதது தொடர்பில் நாம் மிகுந்த விசனத்தை தெரிவிக்கிறோம் - என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில்,

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரிக்கு கடந்த ஜனவரி 26ஆம் திகதி உள்ளூர் அரசியல்வாதி கோபாலகிருஸ்ணன் என்பவரால் தொலைபேசி மூலம் பல தடவைகள் அழைப்பு எடுத்து அச்சுறுத்தல் மற்றும் தகாத வார்த்தைப் பிரயோகம் என்பவை மேற்கொள்ளப்பட்டதுடன், அவரது தங்குமிடத்துக்கு அச்சுறுத்தல் நோக்கத்துடன் வாகனங்களில் இனந்தெரியாத நபர்கள் சென்று வன்செயல் புரிந்தமை தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பிரியந்தினி கமலசிங்கம் வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கு தெரியப்படுத்திய நிலையில், வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையானது உடனடியாக செயற்பட்டு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேச பிரதி பொலிஸ் மா அதிபர் சமுத்திரஜீவா மற்றும் வைத்தியர் பிரியந்தினி கொடுத்த முறைப்பாட்டை விசாரிக்கும் பொலிஸ் பொறுப்பதிகாரியை தொடர்புகொண்டு குற்றவாளிகளை விரைந்து கைதுசெய்யவும் சுகாதார வைத்திய அதிகாரிக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறும் கேட்டுக்கொண்டதுடன், வைத்திய அதிகாரிகள் சங்க கிளிநொச்சி கிளை செயற்குழுக் கூட்டத்தை கடந்த 26ஆம் திகதி இரவு கூட்டிய நிலையில், இவ்விடயம் தொடர்பாக தீவிரமாக கலந்தாலோசித்து தீர்மானங்களை மேற்கொண்டு அதனை எமது தாய்ச்சங்கத்துக்கும் தெரியப்படுத்தி அவர்களின் வழிநடத்தலில் நாம் இச்சம்பவத்தை உன்னிப்பாக அவதானித்து வந்திருந்தோம்.

அத்துடன் நாம் பொலிஸாருக்கும் இது தொடர்பான பிரதான குற்றவாளிகள், அதற்கு துணைபுரிந்தோர் ஆகியோரை கைதுசெய்யும்படி அழுத்தத்தைப் பிரயோகித்திருந்தோம். பொலிஸார் பெப்ரவரி முதலாம் திகதிக்குள் இது தொடர்பான விசாரணைகளை பூர்த்திசெய்து உரிய குற்றவாளிகளை கைதுசெய்வோம் என உறுதியளித்திருந்தனர். அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரிக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறும் நாம் கேட்டிருந்தோம். இதில் எதுவித காலதாமதம் ஏற்படும் என்றாலும் நாம் எமது தாய்ச்சங்கத்தின் ஆலோசனையுடன் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்திருந்தோம்.

சுகாதார வைத்திய அதிகாரியை நாம் கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தபோது அவர் பயணம் செய்ய பாதுகாப்பு இல்லை என தெரிவித்திருந்த நிலையில், நாம் நேரடியாக அவர் பணிமனைக்கு சென்று நிலை தொடர்பில் ஆராய்ந்திருந்தோம். அவருக்கு அங்கு பாதுகாப்பு இல்லாத பட்சத்தில் அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கிளிநொச்சி பிரதேச வைத்தியசாலைக்கு அவரை தற்காலிகமாக இடமாற்றும் ஆலோசனையையும் நாம் முன்வைத்திருந்தோம்.

இந்நிலையில், கடந்த 29ஆம் திகதி எமக்கு பொலிஸார் பிரதான குற்றவாளியை கைதுசெய்துள்ளதாக அறிவித்துள்ளனர். இந்த விசாரணை தொடர்பில் நாம் உரிய அக்கறையும் தீவிரத்தன்மையும் கொண்டு கூர்மையாக அவதானிப்போம். வைத்தியர்களின் நலன்களை பாதுகாக்கும் பிரதானமான பொறுப்புக்கூறலை கொண்டுள்ள எமது சங்கமானது இவ்வாறு வைத்தியர்களை துன்புறுத்தும், அவர்களை அச்சமூட்டும், அவர்களது தொழிற்பாடுகளை செய்யவிடாது தடுக்கும் சக்திகள் தொடர்பில் மிகுந்த அதிருப்தி கொள்வதுடன், வைத்தியர்களின் கௌரவத்தை பாதுகாக்க எமது முழுப்பலத்தையும் பிரயோகிப்போம் என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

அத்துடன், கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் இது தொடர்பில் தொடர்ந்து மௌனம் சாதிப்பதையும் பாதிக்கப்பட்ட அவரது பணிப்புக்குள் உள்ள வைத்திய அதிகாரி தொடர்பில் எதுவித கரிசனையையும் காட்டாதது தொடர்பில் நாம் மிகுந்த விசனத்தையும் தெரிவிக்கிறோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜனவரி மாதத்தில் 82ஆயிரம்**

# சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை

நடப்பாண்டின் முதல் மாதத்தில் 82ஆயிரத்து 327 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 02ஆயிரம் முதல் 03ஆயிரம் வரையிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இதில் ஜனவரி மாதம் 5ஆம் திகதியே அதிக எண்ணிக்கையிலானவர்கள் (3,371) வருகை தந்திருப்பதாக பதிவாகியுள்ளது.

ஜனவரி மாதத்தில் ரஷ்யாவிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 478 ஆகும். இந்தியாவிலிருந்து 11ஆயிரத்து 751 பேரும், உக்ரைனில் இருந்து 07 ஆயிரத்து 774 பேரும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 07 ஆயிரத்து 442 பேரும் வருகை தந்துள்ளனர். 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அறிக்கைகளின்படி, அந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கைக்கு வருகைதந்த பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர். 2020ஆம் ஆண்டில் 89ஆயிரத்து 357 இந்திய சுற்றுலாப் பயணிகளும், 2021ஆம் ஆண்டில் 05 ஆயிரத்து 668 இந்திய சுற்றுலாப் பயணிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். 2020ஆம் ஆண்டளவில் ரஷ்யாவிலிருந்து 49ஆயிரத்து 397 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

2021ஆம் ஆண்டில், ரஷ்யாவிலிருந்து 16 ஆயிரத்து 894 சுற்றுலாப் பயணிகள் மட்டுமே நாட்டுக்கு வந்துள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 02.02.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 03 0831 | 035 02 6 |
| கனேடியன் டொலர் | 044 3110 | 050 1741 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 81 3 | 21 0703 |
| யூரோ | 112 5074 | 121 0438 |
| ஜப்பான் யென் | 0 61 0 | 0 6732 |
| சிங்கப்பூர் டொலர் | 035 6230 | 040 363 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 1 0 | 164 5426 |
| சுவிஸ் பிராங்க் | 103 1 06 | 110 6713 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 423 1112 |
| குவைட் | குவைட் தினார் | 554 6318 |
| ஓமான் | ஓமான் றியால் | 412 0522 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 21 0 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 5767 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 7263 |

# சீமெந்து லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையினால் இடம்பெற்ற விபத்து!

## மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி பலத்த சேதம்

கஹதுட்டுவ பொல்கசோவிட்ட சந்தியில் சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் கார் ஆகியவற்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பின்னர் லொறி, மின்சார உபகரண விற்பனை நிலையத்தின் மீது மோதியதாக கஹதுட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் முச்சக்கரவண்டியின் சாரதியும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிலியந்தலையில் இருந்து மத்தேகொட பிரதேசத்தை நோக்கி பயணித்த லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விபத்தினால் கடைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கஹதுட்டுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

RTI SRI LANKA

எந்தவொரு பொது அதிகாரசபையிடமிருந்தும் தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு உரிமை உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?

2022 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்,
Contact Us: 070 3300 700
Website: www.slpi.lk/ www.rtisrilanka.lk

# கொரோனா தொற்று பரவலால் ஸ்ரீபாத கல்லூரியில் புதிய சர்ச்சை; மாணவர்கள் - நிர்வாகம் - சுகாதாரத்துறைக்கிடையில் முரண்பாடு

## ஒருவரை ஒருவர் குற்றச்சாட்டு

(நுவரெலியா நிருபர்)

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் தொற்று வேகமாக பரவுகின்றது. கட்டுப்படுத்துவதற்கு நிர்வாகம் எந்தவிதமான தனிமைப்படுத்தல் நிலையமோ அல்லது தேவையான நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை என ஆசிரிய மாணவர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர். தொற்றை கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினரின் ஒத்துழைப்பு போதவில்லை - என கல்லூரியின் தலைவர் கு. துரைராஜசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை, நாங்கள் முழுமையாக ஒத்துழைக்கின்றோம். ஆனால், கல்லூரி நிர்வாகத்தால் பொங்கல் விழா ஏற்பாடு செய்த காரணத்தினாலேயே தொற்று அதிகரித்துள்ளது - என கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி சுதர்சன் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அறிவித்தலின்படி கடந்த மாதம் 17ஆம் திகதிமுதல் அனைத்து கல்வியியற் கல்லூரிகளையும் திறப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கிய நிலையில் பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியும் திறக்கப்பட்டது.

இந்தக் கல்லூரியில் மொத்தமாக 575 ஆசிரிய மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின்படி பலரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான தனிமைப்படுத்தல் உட்பட்ட அனைத்து சுகாதார நடவடிக்கைகளையும் ஏற்படுத்துமாறு கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரியினர் கல்லூரி நிர்வாகத்திற்கு பணித்துள்ளனர்.

ஆனால், எந்தவிதமான தனிமைப்படுத்தல் நிலையமோ அல்லது தேவையான நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை என ஆசிரிய மாணவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். காய்ச்சல் உட்பட தொற்றுக்குள்ளான அனைவரும் ஒரே பகுதியிலேயே தங்கவைக்கப்பட்டதாகவும் தங்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்து ஒருசில மாணவர்கள் கல்லூரியிலிருந்து தங்களுடைய வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது கல்லூரியின் தலைவர் கு.துரைராஜசிங்கம் மாணவர்களின் பாதுகாப்பிலும் ஏனைய செயற்பாடுகளிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனவும் குற்றஞ்சாட்டுகின்றனர். முடிவுகளை மேற்கொள்வதில் தலைவர் தடுமாற்றத்துடன் செயற்படுகின்றார். அவருடைய இந்தச் செயற்பாடு காரணமாக தாங்கள் பெரும் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளதாகவும் கல்லூரியில் இயங்கிவருகின்ற நோயாளர் பிரிவில் எந்தவிதமான மருந்துகளும் ஆகக்குறைந்தது பனடோல் மாத்திரை கூட இல்லாத நிலையே இருப்பதாகவும் உணவும் தரம் குறைவாக இருப்பதாக ஆசிரிய மாணவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பாக கல்லூரியின் தலைவர் கு.துரைராஜசிங்கத்திடம் நேற்று (02) தொலைபேசியில் தொடர்புகொண்டு வினவிய போது,

கல்லூரியில் தொற்று வேகமாக பரவி வருவதாகவும் இது தொடர்பாக தான் கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரியினருக்கு அறிவித்தபோதிலும் அவர்கள் தங்களுக்கு உரிய ஒத்துழைப்பை வழங்கவில்லை என்றும் மாணவர்கள் அநேகமானவர்கள் தங்களுடைய சுய விருப்பத்தின்பேரில் கல்லூரியிலிருந்து வெளியேறுவதாகவும் வெளியேறுகின்ற மாணவர்களை தன்னால் தடுத்து நிறுத்த முடியாத நிலையே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி கணகசபாபதி சுதர்சனிடம் நேற்று (02) தொலைபேசியில் தொடர்புகொண்டு வினவியபோது,

கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது 525 மாணவர்கள் கல்லூரிக்கு வருகை தந்துள்ளனர். இந்த அனைத்து மாணவர்களுக்கும் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால் இதற்கான அனுமதியை சுகாதார அமைச்சின் மூலமாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்கு கல்லூரி நிர்வாகம் தங்களுடைய கல்வி அமைச்சிற்கு அறிவித்து அதன் மூலமாக தேவையான - முறையான நடவடிக்கையை மேற்கொண்டு அனுமதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். அப்படி செய்தால் நாங்கள் அனைவருக்கும் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ள முடியும்.

இதனைத் தவிர, நோய் அறிகுறி உள்ளவர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனை செய்வதற்கு எந்தவிதமான அனுமதியும் தேவையில்லை. அதனையே நாங்கள் செய்து வருகின்றோம். ஆனால், கல்லூரியில் பொங்கல் விழா ஏற்பாடு செய்யப்பட்டதே தொற்று அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும். விழாவை ஏற்பாடு செய்யவேண்டாம் என நாங்கள் நிர்வாகத்திடம் கூறியிருந்தோம். ஆனால், அவர்கள் அதனை பொருட்படுத்தாது செய்ததன் காரணமாகவே இந்தத் தொற்று அதிகரிப்பிற்கான காரணமாகும்.

மேலும், கல்லூரியில் அதிகமான தொற்றுக்கு உள்ளாகின்றவர்கள் விரிவுரையாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போதுள்ள சுகாதார விதிமுறைகளின்படி கல்லூரியை மூடுவதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை.

தொற்றை கட்டுப்படுத்துவதற்கும் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கும் எங்களிடம் அனைத்து வசதிகளும் இருக்கின்றன. ஆனால், எங்களுடைய சுகாதார வழிகாட்டல் முறைகளையும் ஆலோசனைகளையும் முறையாக பின்பற்றாவிட்டால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இதேநேரம், பெற்றோர்கள் கருத்து தெரிவிக்கின்றபோது தங்களுடைய பிள்ளைகள் மிகுந்த மனஉளைச்சலுடனேயே வீடுகளுக்கு வருகை தந்துள்ளதாகவும் கல்லூரி நிர்வாகத்தின் முறையான தீர்மானம் இல்லாத காரணத்தால் தாங்கள் மிகுந்த பொருளாதார பாதிப்பை சந்தித்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

அதாவது ஒருநாள் கல்லூரியின் தலைவர் பிள்ளைகளை வீடுகளுக்கு செல்ல முடியும் என அறிவிக்கின்றார். அதற்கான ஏற்பாடுகளை பிள்ளைகள் மேற்கொண்டு தங்களுக்கு செல்வதற்காக வாகன வசதிகளையும் ஏற்பாடு செய்த பின்பு தலைவர், யாரும் வீடுகளுக்கு செல்ல முடியாது கல்லூரியின் அனைத்து நடவடிக்கைகளும் முறையாக நடைபெறும் என அறிவிக்கின்றார்.

இவ்வாறான ஒரு நிலையில் நாங்கள் ஏற்பாடு செய்து அனுப்பிவைக்கின்ற வாகனங்களுக்கான வாடகையை செலுத்தவேண்டிய ஒரு நிலைமை ஏற்படுகின்றது. அது மட்டுமல்லாமல், பிள்ளைகள் பயத்துடனும் மனஉளைச்சலுடனும் கல்லூரியில் இருக்கின்றார்கள். எனவே, எதிர்காலத்தில் கல்வி அமைச்சு சரியான முறையான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.கபில சி.கே.பெரேரா கடந்த 31ஆம் திகதி கடிதம் மூலம், கல்லூரியில் கடமைற்றுகின்ற அனைவரும் விரிவுரையாளர்கள் உட்பட கல்லூரிக்கு வருகை தர வேண்டும். அவர்கள் தங்களுடைய கற்பித்தல் செயற்பாடு களை தொலைக்கல்வி மூலமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.




மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# லுணுகலை பிரதேசத்தில் கொரோனா பரவல் தீவிரம்

(நடராஜா மலர்வேந்தன்)

லுணுகலை சுகாதாரப் பிரிவில் நேற்றுமுன்தினம் 64 நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் 28 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவர்களுடன் தொடர்புகளை பேணியோருக்கு அன்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் லுணுகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றுவதுடன் தேவையற்ற நடமாட்டங்களையும் ஒன்றுகூடல்களையும் தவிர்த்துகடகொள்ளுமாறும் லுணுகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.



சாமிமலை பெரிய சோலங்கந்தை தோட்ட முத்துமாரியம்மன் கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகத்திற்காக 6ஆம் திகதி காலை 7.30 மணிக்கு கணபதி ஹோமத்துடன் சகலபூஜைகளும் நடைபெற்று 9.33 மணிமுதல் 10.57 மணிவரை உள்ள சுப நேரத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (படங்கள் : மஸ்கெலியா நிருபர்)

# இந்தியா - இலங்கை இடையிலான நல்லுறவு வலுப்பெற்றுள்ளதை நாம் வரவேற்கின்றோம்

## இராதா எம்.பி. தெரிவிப்பு







(இக்பால் அலி)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவு இன்று வலுப்பெற்று வருகின்றது. இதனை நாங்கள் வரவேற்கின்றோம் - என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வி.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 73ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய கலாசார நடன நிகழ்வு கண்டி தர்மராஜ கல்லூரி கேட்போர் கூடத்தில் கண்டி உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி ஆதிரா எஸ். தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையகமக்கள் முன்னணியின் தலைவருமான வி. இராதாகிருஸ்ணன் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போது இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடந்து கருத்து தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவு இன்று வலுப்பெற்று வருகின்றது. இலங்கைக்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்தியா உதவி செய்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே இருக்கக்கூடிய நட்புறவுவாகும். இது அந்த நாட்களில் இருந்தே வருகின்றது.

ஒவ்வொரு அபத்தான அவசர நிலையில் இந்தியா உதவி செய்வதை நாங்கள் அவதானித்துள்ளோம். எமது நாடு இந்திய அரசாங்கத்தோடு நல்லுறவை ஏற்படுத்தி வருவதை நாங்கள் வரவேற்கின்றோம். தொடர்ந்து இந்த அரசாங்கம் இந்தியாவுடனான நல்லுறவைப் பேணி நாட்டுக்கு மக்களுக்கும் நல்ல வசதிகளைச் செய்து அதாவது, ஆபத்தில் இருக்கின்ற மக்களைக் காப்பாற்றுவதற்கான உதவிகளைச் செய்யவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக விடயத்தில் மக்களின் மனித உரிமை மீறப்பட்டதாக முறைப்பாடு

## மலையக அரசியல் அரங்கத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு துணைபோகும் தரப்பாக அதனை அவர்களே கையிலெடுத்து நடைமுறைப்படுத்தும் தரப்பாக ஒரு தரப்பும், அதனை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு அரசியல் ரீதியாக முன்கொண்டு செல்லாதவர்களாக மறுதரப்பும் செயற்படும் நிலைமையையே மலையகத்தில் காணமுடிகிறது. இந்நிலையில், அத்துமீறும் தரப்புக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மலையக அரசியல் அரங்கம் முன்னெடுத்துச் செல்லும் - என முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக விடயத்தில் மாவட்ட மக்களின் மனித உரிமை மீறப்பட்டதாக வலியுறுத்தி மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவுசெய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில்,

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு குறித்து பலகாலம் சமூக மட்டத்தில், நிர்வாக மட்டத்தில் பேசப்பட்டாலும் 2016இல் இதனை நாடாளுமன்றத்தில் பிரேரணையாக முன்வைத்தன் பின்னரே அரசியல் மட்டத்தில் பேசுபொருளானது.



அதேபோல் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தும், வர்த்தமானிப் பிரகடனம் ஊடாகவும் அதில் கணிசமான வெற்றியை அரசியல் ரீதியாக அடைய முடிந்தது. ஆனாலும் இன்று மலையக சமூகம் வென்றெடுத்த அரசியல் ரீதியான உரிமையை ஆளுந்தரப்பு மீறிச் செயற்பட்டு ஐந்து புதிய பிரதேச செயலகங்களுக்குப் பதிலாக இரண்டு உப காரியாலயங்களை மாத்திரம் வழங்கும்போது அவற்றை திறந்து வைத்து காட்டிக்கொடுக்கும் தரப்பாக ஒன்றும், எதிர்த்தரப்பில் அமர்ந்துகொண்டு அதனைக் கண்டுகொள்ளாமல் மௌனம் காக்கும் ஒரு தரப்பாக இன்னொன்றுமாகத்தான் மலையக அரசியல் தரப்புகள் இருக்கின்றன.

இந்நிலையில்தான் நுவரெலிய மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தினை கையிலெடுத்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் செய்யவேண்டிய பணிகளை மலையக அரசியல் அரங்கம் முன்கொண்டு செல்கிறது.

முதல் கட்டமாக நுவரெலியா மாவட்டம் முழுவதுமாக ஒரு மாத கால கையெழுத்து இயக்கத்தை நடத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், மக்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்து மனுவை மாவட்ட செயலாளர் ஊடாக ஜனாதிபதி, பிரதமர், துறைசார் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளோம்.

அடுத்தகட்டமாக அந்த மனு குறித்த விவரங்களுடன் மாவட்டத்தின் பிரஜைகள் என்ற வகையிலும் மலையக அரசியல் அரங்கத்தின் சார்பிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டினை பதிவுசெய்துள்ளோம். இதற்கு முன்னதாக இதே விடயம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு ஒன்றினை பதிவுசெய்துள்ள சிவில் சமூகக் குழுவின் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்துகொண்டு எமது ஒருமைப்பாட்டைத் தெரிவித்துள்ளோம்.

எனினும், அரசியல் ரீதியாக பாரபட்சம் காட்டப்படும் இந்த விடயத்தினை அரசியல் ரீதியாகவே அணுகி வென்றெடுக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். பிரதேச செயலக விடயத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவாக நின்று அரச ஆணை அத்துமீறலை நடைமுறைப்படுத்தும் தரப்பாக ஒன்றும் அதனை வேடிக்கைப் பார்த்துக்கொண்ட எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் தரப்பாக இன்னொன்றும் மலையக அரசியல் தரப்பாக மாறியுள்ள நிலையில் இந்த விடயத்தில் எதிர்கட்சியின் தலைமை வகிபாகத்தை மலையக அரசியல் அரங்கம் முன்கொண்டு செல்கிறது எனவும் தெரிவித்தார்.

# கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் 'லியசுஹுரு' - திருமணப்பெண் கண்காட்சி







ஊவா மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'லியசுஹுரு' கண்காட்சி மற்றும் திருமணப் பெண் கண்காட்சி 2022, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் ஊவா மாகாண நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது 2021ஆம் ஆண்டு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பயிற்சிநெறியில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளினால் உருவாக்கப்பட்ட கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

ஆபரணங்கள், பத்திக் தயாரிப்புகள், வீட்டு உபயோகப் பொருட்கள், இயற்கை வளங்களில் செய்யப்பட்ட தயாரிப்புகள், உணவுத் தயாரிப்புகள் உள்ளிட்ட பல கைவண்ணங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டன.

அத்துடன், அழகுக்கலை பயின்ற இளம் அழகுக் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவான திருமணப் பெண்களின் கண்காட்சி நிகழ்வும் நடைபெற்றது. மேலும் பயிற்சி நெறியில் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.





அம்பகமுவ செயலாளர் பிரிவிலுள்ள மஸ்கெலியா லக்கம் கிராமத்திலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு சிறார்கள் பாதுகாப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்று நேற்றுமுன்தினம் (01) மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள் : மஸ்கெலியா நிருபர்)

தமிழன்
# வணிக உலகம்
Business world
www.thamilan.lk

## INSEE Cement பணிமூப்பு விருதுகள் 2021 நிகழ்வில் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கௌரவித்துள்ளது






இலங்கையின் முன்னணி சீமெந்து உற்பத்தி நிறுவனமான INSEE Cement, 20 வருடங்களுக்கும் மேலாக நிறுவனத்திற்குப் பங்களித்து சேவையாற்றியுள்ள ஊழியர்களைப் பாராட்டுவதற்காக தனது வருடாந்த பணிமூப்பு விருதுகள் நிகழ்வை அண்மையில் நடத்தியது. இந்த விருதுகள் நீண்டகாலமாக பணியாற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்புடனான சேவையை பாராட்டி அங்கீகரிக்கின்றன. விருதுகள் வழங்கும் வைபவம் 2021 நவம்பர் 26ஆம் திகதி, ஹில்டன் கொழும்பு ரெசிடென்சிஸின் யூனியன் போல்றூமில் சுகாதார வழிகாட்டுதல்களுக்கமைவாக நடைபெற்றது. இதனால், விருது பெற்றவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இந்த ஆண்டு நேரடியாக நிகழ்வில் கலந்துகொள்ள முடியாத நிலையில், அவர்களால் தங்கள் அன்புக்குரியவர்களின் விசேட தருணத்தை மெய்நிகர் தளங்கள் மூலம் நேரலையில் காணமுடிந்தது. 20 ஊழியர்கள் பாராட்டப்பட்டதுடன், விருதுகள் நிகழ்வில் தங்கப் பவுணைப் பெற்றனர். இவர்களில் 19 பேர் 21 வருட கால சேவையை நிறைவு செய்துள்ளனர். அதேநேரத்தில் ஒரு ஊழியர் INSEE Cement நிறுவனத்தில் 25 வருடங்களுக்கும் மேலான சேவையை நிறைவுசெய்துள்ளார். இவர்களில் 12 பேர் Puttalam Cement Works தொழிற்சாலையிலும், நால்வர் Ruhunu Cement Works (RWC) தொழிற்சாலையிலும் நான்கு பேர் கொழும்பு அலுவலகத்திலும் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த INSEE Cement நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான குஸ்டாவோ நவாரோ, "எங்கள் பணியாளர்கள் மிகவும் திறமையானவர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் ஐந்து தசாப்தங்களாக இலங்கையில் சீமெந்து தொழிற்றுறையின் மேம்பாட்டை வழிநடத்தியுள்ளனர். பணிமூப்பு விருது பல வழிகளில் தனித்துவமானது மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றி இந்த ஊழியர்கள் நிறுவனத்திற்குள் கொண்டுள்ள அங்கீகாரத்தையும் மதிப்பையும் குறிக்கிறது. அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்தை அங்கீகரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் INSEE உடனான அவர்களின் பயணங்கள் செழிப்பானவையாகவும் பலனளிக்கின்றன என்றும் நம்புகிறோம். இந்த போற்றத்தக்க ஊழியர்களால் வெளிப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பு, எங்கள் நிறுவனத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் இடையே பகிரப்பட்ட பரஸ்பர நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது" என்று குறிப்பிட்டார்.

உற்பத்தி, பொதியிடல், சந்தைப்படுத்தல், கொள்முதல் மற்றும் போக்குவரத்து மற்றும் விநியோகத்துறை நிர்வாகம், பேணல் பராமரிப்பு மற்றும் தர உத்தரவாதம் போன்ற செயற்பாட்டு அணிகளைச் சேர்ந்த பணியாளர்கள் INSEE பணிமூப்பு விருதைப் பெற்றுள்ளனர்.

நிகழ்வில் உரையாற்றிய நவாரோ, "INSEE நிறுவனத்தில் எங்கள் பணியாளர்களே எங்கள் பலம் மற்றும் பெருமை. உங்களின் ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளை கடைப்பிடித்ததன் மூலம், நாங்கள் வாழும் இந்த சவாலான காலகட்டத்திலும், எங்கள் அபிமானம் பெற்ற இந்த முக்கியமான நிகழ்வை நடத்த முடிந்துள்ளது. உங்கள் பெறுமதிமிக்க பங்களிப்பிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். தமது அன்பிற்குரியவருக்கு தங்கள் பக்கபலத்தைக் காண்பிக்க மெய்நிகர் வழியாக எம்முடன் இன்று இணைந்துள்ள அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். குடும்பத்தின் பிணைப்புகள், உறவின் இணைப்புகள் மற்றும் ஓயாத அர்ப்பணிப்பு, ஆழ்ந்த ஈடுபாடு ஆகியவற்றையே நாம் இங்கே INSEE இல் கொண்டாடுகிறோம். பணிமூப்பு விருதும் முழுமையாக அதனைப் பிரதிபலிக்கின்றது. வாழ்வைக் கட்டியெழுப்ப இதுவே அத்திவாரம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

INSEE Cement அல்லது Siam City Cement (Lanka) Limited, 1969ஆம் ஆண்டில் தாய்லாந்தில் நிறுவப்பட்ட தென்கிழக்காசியாவின் முன்னணி சீமெந்து உற்பத்தியாளரான Siam City Cement Public Company Limited (SCCC)இன் ஓர் உறுப்பு நிறுவனமாகும். INSEE Cement நிறுவனம் INSEE வர்த்தகநாமத்தின் கீழ், சங்ஸ்தா, மகாவலி மெரின், மகாவலி மெரின் பிளஸ், INSEE ரெபிட் புளோ, INSEE ரெபிட் புளோ பிளஸ் மற்றும் INSEE எக்ஸ்ட்ரா சீமெந்து போன்ற சீமெந்து வகைகளை தயாரித்து வருகின்றது. இலங்கை பசுமை கட்டட சபையிடமிருந்து பசுமை அடையாளச் சான்று அங்கீகாரத்தைப் பெற்ற முதல் 'பசுமை சீமெந்து தயாரிப்பு' INSEE சீமெந்தாகும். இந்த நிறுவனம் இலங்கையில் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட ஒரேயொரு சீமெந்து உற்பத்தி நிறுவனமாகும். அத்துடன், LMD சஞ்சிகையால் மிகவும் நன்மதிப்புப் பெற்ற நிறுவனங்களுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

## பத்தரமுல்ல 'Elinor' உடன் Prime Group தனது Signature Lands தெரிவுகளை அறிமுகம் செய்துள்ளது



PRIME GROUP



ரியல் எஸ்டேட் துறையில் ஒப்பற்ற முன்னோடியாகத் திகழும் Prime Group, கொஸ்வத்த, பத்தரமுல்ல பகுதியில் 'Elinor' காணிகள் விற்பனையை அறிமுகம் செய்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதி களில் பரந்தளவு வதிவிடப் பகுதிகளைக் ஏற்படுத்தியுள்ள Prime Lands, தனிப்பட்ட நபர்களின் விலைத் தெரிவுக்கேற்ற வகையில் அமைந்துள்ளன. 2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தினால் கொழும்பை அண்மித்த பகுதியில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படும் காணிகள் வரிசையில் அமைந்துள்ள முதலாவது தெரிவாக 'Elinor' காணப்படுகின்றது. ஏனைய சொத்துகள் வராகொட, சீதுவ, குருநாகல், அளுத்கம மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பகுதியில் பத்தரமுல்ல அமைந்துள்ளதுடன், கொழும்பு மாவட்டத்தில் துரிதமாக அபிவிருத்தியடைந்துவரும் நிர்வாக, வணிக மற்றும் வதிவிடத் தொகுதியாக அமைந்துள்ளது. நாட்டின் புகழ்பெற்ற பகுதிகளில் ஒன்றாக அமைந்திருப்பதுடன், எண்பதாம் ஆண்டுகளில் நாடாளுமன்றம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் நகர அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட ஆரம்பித்தன. பத்தரமுல்லயில் அமைந்துள்ள Elinor காணித் தொகுதியில் 6 முதல் 10.8 பேர்ச் வரையான 41 காணித் துண்டுகள் காணப்படுகின்றன.

Prime Lands (Pvt) Ltd இன் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி ருமிந்த ரந்தெனிய கருத்துத் தெரிவிக்கையில், "இன்று, பலர் வதிவிட பகுதிகளை நீண்டகால முதலீடாகக் கொண்டிருக்க விரும்புகின்றனர். கடந்த ஒரு வருட காலப்பகுதியில் வதிவிட பகுதிகள் மீது நாட்டம் அதிகரித்துள்ளதை நாம் அவதானித்திருந்தோம். இதன் காரணமாக, எமது தெரிவுகளில் புதிய அங்கமாக 'Signature Lands' ஐ நாம் அறிமுகம் செய்திருந்தோம். காணி பெறுமதி, அமைவிடம் மற்றும் சூழவுள்ள அம்சங்கள் போன்றவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. எமது வதிவிடப் பகுதிகள் முதலீட்டின் மீது சிறந்த வருமதியை வழங்குகின்றன. நாட்டின் முன்னணி வங்கிகளிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம். முற்பணமாக 40 சதவீத தொகையை நாம் பெற்றுக்கொள்வதுடன், எஞ்சியிருக்கும் தொகையை வட்டியில்லாத தவணைக் கட்டணமாக 18 மாத காலப்பகுதியினுள் செலுத்தக்கூடியதாக இருக்கும். இது எமது வாடிக்கையாளர்களுக்கு மேலும் சௌகரியத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. பத்தரமுல்ல பகுதி நகரமயமாக்கமடைந்து வருவதால், மட்டுப்படுத்தப்பட்டளவு காணிகள் காணப்படுகின்றன. கொழும்பை அண்மித்து வசிக்க எதிர்பார்க்கும் எவருக்கும் இது சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்" - என்றார்.

சுப்பர்மார்க்கெட்கள், வங்கிகள் மற்றும் இதர நகர வசதிகளை அண்மித்து அமைந்துள்ளதுடன், Elinor பத்தரமுல்ல, கொஸ்வத்த சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்தினுள் காணப்படுகின்றது. பல முக்கியமான அரச அலுவலகங்களையும் அண்மித்து அமைந்துள்ளது.

ரந்தெனிய மேலும் தெரிவிக்கையில், "இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் நிலைபேறான சந்தை முன்னோடியாக Prime Group திகழ்கின்றது. மூடீஸ் முதலீட்டாளர் சேவைகள் குழுமத்தைச் சேர்ந்த அங்கத்துவ நிறுவனமான ICRA லங்காவிடமிருந்து தொடர்ச்சியான இரண்டாவது வருடமாகவும் [A-] Stable எனும் பெருமைக்குரிய தரப்படுத்தலைப் பெற்ற இலங்கையின் முதலாவது ரியல் எஸ்டேட் துறையைச் சேர்ந்த நிறுவனமாகவும் திகழ்கின்றது" என்றார்.

ஏற்கனவே காணப்படும் Signature Lands தெரிவுகளின் மற்றுமொரு அங்கமாக வெலிகமயில் விரைவில் Signature Lands தெரிவை அறிமுகம்செய்ய Prime Group திட்டமிட்டுள்ளது. விடுமுறை இருப்பிடம் அல்லது ஓய்வூதியம் பெற்ற பின்னர் வசிப்பதற்கான பகுதியில் முதலீட்டை மேற்கொள்வதற்கு இது சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. வெலிகம கரையோரத்தின் காட்சியமைப்புகளை வழங்கும் பகுதியில் வாழ்நாள் முதலீடாக அமைந்திருக்கும். அதுபோன்று ரம்மியமான சூழலில் அமைந்த மற்றுமொரு திட்டமொன்றை நுவரெலியாவில் அறிமுகம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக ரந்தெனிய மேலும் குறிப்பிட்டார்.

## கடல்சார் பிளாஸ்ரிக் மாசு தொடர்பில் கவனம் செலுத்த இலங்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் ஹேமாஸ் கைகோர்ப்பு

ஹேமாஸ் ட்ரான்ஸ்போர்டேஷன் பிரைவேட் லிமிடெட் மற்றும் எவர்கிறீன் மெரீன் (ஹொங் கொங்) லிமிடெட் ஆகியவற்றுக்கிடையிலான இணை நிறுவனமான எவர்கிறீன் சிப்பிங் ஏஜென்ஸி லங்கா (பிரைவேட்) லிமிடெட், இலங்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கைகோர்த்து இலங்கையின் கடல்பரப்பில் காணப்படும் மாசுகள் தொடர்பில் கவனம் செலுத்த முன்வந்துள்ளது.

காலி, சமனல கால்வாய் பகுதியில் மிதக்கும் கழிவுகளை கையகப்படுத்தும் கடல் வடிகட்டி (Ocean Strainer) ஒன்றை எவர்கிறீன் லங்கா நிறுவியுள்ளதுடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் ஐந்து 'கரையோர பராமரிப்பாளர்' செயற்றிட்டங்களையும் முன்னெடுக்கின்றது. இதில் பரனம்பல பீச் மற்றும் லுன பொகுன பீச் போன்றன அடங்கியுள்ளன. இந்தப் பங்காண்மை ஹேமாஸ் நிறுவனத்தின் சூழல்சார் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவானதாக உள்ளதுடன், இலங்கைக்கு உரித்தான உயிரினங்களை மூன்று அம்ச செயற்றிட்டத்தினூடாக பாதுகாப்பதாக இந்த நிகழ்ச்சி நிரல் அமைந்துள்ளது. பொறுப்பு வாய்ந்த முறையில் பிளாஸ்ரிக் பாவனை மற்றும் கழிவகற்றல், எமது சூழல் கட்டமைப்பை பாதுகாத்தல் மற்றும் இயற்கை வளங்களை பேணுதல் போன்றன இந்த அம்சங்களில் அடங்கியுள்ளன.

இந்தப் பங்காண்மை தொடர்பில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கைகோர்த்து எமது கடல்சார் சூழல் கட்டமைப்பை பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பில் பெருமைகொள்கின்றோம். குழுமத்தின் சூழல்சார் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பாவனையை குறைப்பதில் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை பொறுப்பு வாய்ந்த வகையில் கழிவகற்றுவதை உறுதிசெய்வதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம். எமது நாட்டில் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைக்கும் முயற்சிகளின் முதல் படிமுறையாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. நாடு முழுவதிலும் சூழலில் வெளியிடப்பட்டிருக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளை தொடர்ச்சியாக சேகரிக்கும் பணிகளை முன்னெடுக்க உதவுவதுடன், எமது பிளாஸ்ரிக் பிரசன்னத்தைக் குறைக்கும் பணிகளையும் முன்னெடுப்போம்"- என்றார்.



இலங்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை பொது முகாமையாளர் ஜகத் குணசேகர, இலங்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தவிசாளர் தர்ஷனி லஹந்தபுர, ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் நடமாடல் பிரிவின் பணிப்பாளர் முஷின் கிசிலான், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் குழும நிலைபேறாண்மை மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல்கள் சிரேஷ்ட முகாமையாளர் இஷானி ரணசிங்க மற்றும் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் குழும நிலைபேறாண்மை மற்றும் விசேட செயற்திட்டங்கள் முகாமையாளர் மிந்திக திலகரட்ன ஆகியோர் காணப்படுகின்றனர்.

கரையோர பராமரிப்பு நிகழ்ச்சியினூடாக, சமூகத்தாரை ஈடுபடுத்தி கரையோரப் பகுதியை தூய்மையாக பேணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அந்தப் பணிகளில் ஈடுபடுவோருக்கு வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்துக்கு வலுவூட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கடலிலிருந்து சுமார் ஐந்து தொன்கள் எடையுடைய பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுவதற்கு இந்தத் திட்டம் உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், இலங்கையின் ஆபத்துக்குள்ளாகியுள்ள மற்றும் அழிவடைந்து செல்லும் கடல்சார் சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதற்கு உதவுவதாகவும் அமைந்திருக்கும்.

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் நடமாடல் பிரிவின் பணிப்பாளர் முஷின் கிசிலான் கருத்துத் தெரிவிக்கையில், "அடர்ந்த உயிரியல் பரம்பல் மற்றும் கடல்சார் சூழல் கட்டமைப்பைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்கின்றது. துரதிர்ஷ்டவசமாக, பிளாஸ்ரிக் கழிவுகள் காரணமாக இது ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. சகல சமூகத்திலும் ஆரோக்கியமான வாழ்க்கையை ஏற்படுத்திக்கொடுக்க அர்ப்பணித்துள்ள பொறுப்புவாய்ந்த நிறுவனம் எனும் வகையில், எமது கடல்சார் சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதை உறுதிசெய்வதில் பங்களிப்பு வழங்கவேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்திருந்தோம். தூய்மையான மற்றும் ஆரோக்கியமான கடல்கள், சமநிலையான சூழல் கட்டமைப்பை மற்றும் நீர் வளத்தைப் பேணுவதில் முக்கிய பங்காற்றுவதுடன், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதிலும் பங்களிப்பு வழங்குகின்றது. இந்த நடவடிக்கைகளினூடாக, கடலில் பிரவேசிக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைப்பதற்கு நாம் எதிர்பார்ப்பதுடன், இலங்கையின் கடல்சார் சூழல் கட்டமைப்பை பாதுகாக்க எண்ணியுள்ளோம்" - என்றார்.

இலங்கையில் தினசரி 900 மெட்ரிக் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் உருவாக்கப்படும் நிலையில், கடல் வடிகட்டி (Ocean Strainer) மிதக்கும் கழிவு வடிகட்டியினூடாக கடலில் பிளாஸ்ரிக் கழிவுகள் சென்றடையும் முன்னர் அவற்றை சேகரித்து அகற்ற உதவும். இந்தத் திட்டத்தை MAS ஹோல்டிங்ஸ் வடிவமைத்திருந்ததுடன், முதலாவது வடிகட்டி, 2020 ஓகஸ்ட் மாதம் தெஹிவளை கால்வாயில் நிறுவப்பட்டது. நிறுவப்பட்ட முதல் வருடத்தில், இந்த மிதக்கும் வடிகட்டியினூடாக சுமார் 67,000 கிலோகிராம் பிளாஸ்ரிக் கழிவுகளை கடலில் கலக்கவிடாமல் தவிர்த்துக்கொள்ள முடிந்தது. திறந்த புத்தாக்கம் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பதில் கைகோர்ப்பு என்பதில் நம்பிக்கை கொண்டுள்ள MAS, 2021ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆர்வமுள்ள தரப்பினருக்கு கடல் வடிகட்டி (Ocean Strainer) தொழில்நுட்பத்தை வழங்க தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது.

1948ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஹேமாஸ், குடும்பங்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு உதவுவதை நோக்காகக்கொண்டிருந்தது. இந்த பிரதான நம்பிக்கை எமது 70 வருடங்களுக்கு மேலான செயற்பாடுகளில் தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றது. இன்று, நுகர்வோர் வர்த்தக நாமங்கள், சுகாதார பராமரிப்பு மற்றும் இதர சேவைகளினூடாக ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு நாம் ஆதரவளிக்கின்றோம். இலங்கையின் சமூக, பொருளாதார செயற்பாடுகளில் இணைந்துள்ள ஹேமாஸ், பிராந்தியத்தில் பங்களாதேஷ், மேற்கு வங்கம் மற்றும் மியன்மார் ஆகிய பிராந்தியங்களுக்கு வியாபித்துள்ளது. நாம் தொடர்ந்தும் பரந்த மற்றும் ஆர்வமுள்ள அணியினரில் முதலீடுகளை மேற்கொண்டு, அர்த்தமுள்ள சேவைகளை வழங்குவதுடன், நம்பிக்கை வாய்ந்த பங்காண்மைகளை ஊக்குவிப்போம். அவற்றினூடாக, எமது சகல பங்காளர்களுக்கும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் உள்ளடக்கமான உலகை உருவாக்க பங்களிப்பு வழங்குவோம்.

திகதி 01.02.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4665
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,965,630.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 3 1 4 7 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,858,956.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2960
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,129,920.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 17 52 65 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,188,747.20

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1013
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 03401
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,148,600.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 205,072,634.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Q
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 09 58 67 73

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 695
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,934,120.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 61 62 69 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,000,685.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0006
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,897,660.00
இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 11 22 38 47
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,540,914.36

சேவன
சீட்டிழுப்பு இலக்கம் :352
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,397,160.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 22 29 37 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,270,151.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

## இந்திய மீனவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில்

# பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

எல்லைத் தாண்டும் இந்திய மீனவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு தமிழ்நாடு வருமாறு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார் – என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக வடபகுதி கடலில் எங்களுடைய கடற்றொழிலாளர்கள் தங்களுடைய இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான கடற்றொழில் உபகரணங்களை மாத்திரமல்ல, தங்களுடைய இன்னுயிர்களையும் திறக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக, இந்தியாவிலிருந்து எல்லைத் தாண்டி வருகின்ற ரோலர் இழுவை மடி படகுகள் மோதி பாரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதேபோல் இலங்கைக் கடற்படையினரது படகுகளாலும் வேண்டுமென்றும், விபத்தினாலும் கொல்லப்பட்டு கரை ஒதுங்குகின்ற கடற்றொழிலாளர்களது சடலங்களால் ஒரு பதற்றமான சூழல் அதிகரித்திருக்கிறது.

வடமராட்சி மருதங்கேணி வத்திராயன் பகுதியில் இரண்டு கடற்றொழிலாளர்களது உடல்கள் கரையொதுங்கியிருக்கின்றன.

இதேபோன்று பருத்தித்துறை, பொன்னாலை வீதியில் சுப்பர்மடம் பகுதியில் வீதியை மறித்து நேற்றுமுன்தினம் காலை 8 மணியிலிருந்து அவர்கள் மறியல் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றனர். பொலிகண்டி வரை வீதி போக்குவரத்து முடக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் இதைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இலங்கை - இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஈழ மீனவர்களும், தமிழக மீனவர்களும், நடுக்கடலிலே மோதுவதை இல்லாமல் செய்யவேண்டும்.



தமிழக அரசும் வடமாகாணத்தில் இருக்கக்கூடிய சங்கங்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகளும் பேச வேண்டும். இப்பொழுது கூட இரண்டு தினங்களுக்கு முன்னர் முதலமைச்சர் ஸ்டாலின் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தி இந்த மாதிரியான பதற்றங்களை குறைக்க முன்வருமாறு கேட்டிருப்பதாக எனக்கு செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

இப்பொழுது கூட அவரது உதவியாளர் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் தமிழக முதலமைச்சருடன் பேசிவிட்டு செய்தி தருவதாக சொல்லியிருக்கிறார்.

உடனடியாக ஒரு போர்நிறுத்தம் போல் அந்த எல்லையில் இருப்பவர்கள் எல்லை தாண்டக்கூடாது. இல்லாவிட்டால் எங்களுடைய மக்கள் பட்டினியாலும் பசியாலும்தான் பாதிக்கப்படுவார்கள்.

மீதி விடயங்களைப் பேசி ஓர் இணக்கத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும். இலங்கை அரசு இதில் அக்கறை காட்டும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது. இந்திய மத்திய அரசுக்கும் ஏனோதானோ நிலைவரம்தான். இதிலே அவன் செத்தாலும் இவன் செத்தாலும் தமிழர்கள் என்ற நிலைமை இருக்கிறது.

அவர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் பலமாக இருக்கிறார்கள். தற்போது விலைவாசி அதிகரித்திருக்கும் நிலையில் பனையால் விழுந்தவனை யானை மிதிப்பதாக உள்ளது. உடனடியாக இந்தப் பிரச்சினையை தீர்க்கவேண்டும். அதற்கான முழு முயற்சிகளை உடனடியாக எடுப்போம் என்றார்.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

## வேப்பங்குளத்தில் வீடுடைத்து நகை-பணம் திருட்டு

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் பட்டப்பகலில் வீடுடைத்து நகைகள் திருடப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் வசித்து வந்தவர்கள் தேவை நிமித்தம் வெளியில் சென்ற நிலையில், அதனை சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அலுமாரியிலிருந்த பணம் மற்றும் நகை என்பவற்றினை திருடிச்சென்றுள்ளனர்.

மாலைநேரம் வீட்டு உரிமையாளர் வீடு திரும்பிய சமயத்தில் வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டிருந்ததுடன், 1000 ரூபா பணமும் வீட்டு வாயிலில் காணப்பட்டது. உள்ளே சென்று பார்த்தபோது வீட்டிலிருந்து பணமும், பெறுமதியான நகைகளும் திருடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

வீட்டார் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இரு ரிப்பர் வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்து; ஒருவர் படுகாயம்!



(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் (01) மாலை 4.30 மணியளவில் இரு ரிப்பர் வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹொரவப்பொத்தானை வீதியூடாக ஓமந்தை நோக்கி ரிப்பர் பயணித்துக்கொண்டிருந்தபோது மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ரிப்பர் வாகனத்தை சாரதி திடீரென பிரக் பிடித்துள்ளார்.

ரிப்பர் வாகனத்துக்கு பின்பக்கமாக வந்துகொண்டிருந்த மற்றுமொரு ரிப்பர் குறித்த ரிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதுடன், வீதிக்கு அருகே நின்ற மோட்டார்சைக்கிளும் ரிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் மோட்டார்சைக்கிளில் நின்றுக்கொண்டிருந்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், பின்பக்கமாக வந்த ரிப்பர் மற்றும் மோட்டார்சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மன்னாரில் அவுஸ்திரேலியா நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்

# கனிய மணல் அகழ்வு - காற்றாலை மின்சக்தி திட்டத்தின் விரிவுபடுத்தலை நிறுத்த தீர்மானம்







(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் ஐந்து வருடங்களுக்கு மேலாக மாவட்ட ரீதியாக அனுமதி பெறாது ஆய்வு என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின்சக்தி திட்டத்தின் விரிவுபடுத்தலை உடனடியாக நிறுத்தும் விதமாக மன்னார் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டிற்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம.பிரதீப்பின் நெறிப்படுத்தலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் ஐந்து வருடங்களுக்கு மேலாக மணல் ஆய்வு என்ற போர்வையில் பேசாலை, நடுக்குடா, கட்டுக்காரன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் நிலத்தின்கீழ் 25 அடி ஆழத்திற்கு துளையிட்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த ஆய்வு மற்றும் அகழ்வை உடனடியாக நிறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரம், மன்னாரில் கடந்த வருடம் அமைக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி செயற்றிட்டம் காரணமாக மீன்பிடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்திய நிலையில், மன்னார் மாவட்டத்தில் மேலதிகமாக நிறுவப்பட கலந்தாலோசிக்கப்பட்டும் காற்றாலை செயற்றிட்டத்தையும் நிறுத்துவதற்கு அபிவிருத்திக் குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பிரதேச ரீதியாக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் பற்றியும் விரிவாக கவனம் செலுத்தப்பட்டதுடன், கடந்த வருடம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன என விரிவாக ஆராயப்பட்டன.

குறித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோ நோகராதலிங்கம், பிரதேச, நகர சபைத் தவிசாளர், உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் புதிய அறநெறிப் பாடசாலை திறப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா, கற்குளம் படிவம் 4இல் ஸ்ரீ நாகம்பாள் அறநெறி பாடசாலை மாணவர்களின் அறநெறி கல்வி செயற்பாடுகளை அவர்கள் மரநிழலிலிருந்து கற்று வந்ததால் மாணவர்களின் நலன் கருதி அறநெறி பாடசாலை புதிய கட்டடம் நேற்று முன்தினம் (01) மாணவர்களின் அறநெறி செயற்பாடுகளுக்காக கையளிக்கப்பட்டது. நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் இராமலிங்கம் நடராசாவின் ஓராண்டு திதியை முன்னிட்டு தமிழ் விருட்சம் ஊடாக இந்த அறநெறி பாடசாலை அமைக்கப்பட்டிருந்தது.

மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியிருந்ததுடன் மாணவர்களுக்கான கொப்பிகளும் வழங்கப்பட்டன.

# உலக சதுப்பு நில தின விழிப்புணர்வுப் போட்டி























(யாழ். நிருபர்)

உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகமும் கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாசாலை சுற்றாடல் கழகமும் இணைந்து நடத்திய உலக சதுப்பு நில தின விழிப்புணர்வு போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் (01) பாடசாலை அதிபர் கே. திலீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏ.எம்.றியாஸ் அஹமட் (சிரேஷ்ட விரிவுரையாளர்- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) சிறப்பு விருந்தினராக க.சுப்ரமணியம், (உதவிக் கல்விப் பணிப்பாளர்) சுற்றுச்சூழல் கழகத் தலைவர் வி.கேதீஸ்வரன், கழக செயலாளர் ம.சசிகரனும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

# அவுஸ்திரேலியாவில் தமிழர் ஒடுக்குமுறைநாள் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு

## நீதிகிடைக்கும்வரை சுதந்திரம் என்பது பொய் என்று சுட்டிக்காட்டு

நீதிகிடைக்கும்வரை இலங்கையின் சுதந்திர தினம் என்பது பொய். அதன் உண்மையான பெயர் தமிழர் ஒடுக்குமுறை நாள் என தெரிவித்துள்ள அவுஸ்திரேலியாவின் தமிழ் அகதிகள் பேரவை, நாளைமறுதினம் 05ஆம் திகதி சனிக்கிழமை சிட்னியில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெப்ரவரி 4ஆம் திகதி, இலங்கை அரசாங்கம் பிரித்தானிய ஆட்சியிலிருந்து நாடு சுதந்திரமடைந்ததன் 74ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. ஆனால், நாட்டிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களுக்கு 1948 பெப்ரவரி 04ஆம் திகதி ஓர் ஒடுக்குமுறையாளர் மற்றொரு அடக்குமுறையாளரிடம் அதிகாரத்தை ஒப்படைத்த நாளைக் குறிக்கிறது. சிங்கள-பௌத்த பேரினவாதத்தை ஊக்குவிக்கும் அரசியல்வாதிகள் காலனித்துவ ஆட்சியின் இரக்கமற்ற தன்மையுடன் இணைந்து தமிழ் சமூகங்களுக்கு எதிரான பல படுகொலைகள் மற்றும் பிற கொடூரமான செயல்களுக்கு வழிவகுத்தன.

புதிய அரசாங்கத்தின் முதல் நடவடிக்கைகளில் ஒன்று ஒரு மில்லியனுக்கும் அதிகமான தமிழர்களின் வாக்குரிமையை பறித்தது. அவர்கள் பின்னர் சிங்களச் சட்டத்தை மட்டும் நிறைவேற்றினர். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்தை மறுத்து சிங்களத்தை நாட்டின் ஒரே அதிகாரபூர்வ மொழியாக்கினர். அரசு பெருகிய முறையில் பேரினவாதமாக மாறியது. வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் தமிழர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டியது. அதே நேரத்தில் தமிழ் நிலங்களை சிங்கள-பௌத்த குடியேற்றங்களுடன் குடியேற்றியது.

தீவின் பெரும்பான்மையான தமிழர் பகுதிகளில் தங்களுடைய சொந்த விவகாரங்களை நிர்வகிக்கும் வகையில், பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வரவும் தமிழர்களுக்கு அரசியல் சுயாட்சியை வழங்கவும் அரசாங்கத்தைக் கோரிய மனுக்கள் மற்றும் வன்முறையற்ற போராட்டங்கள் மூலம் தமிழர்கள் இவை அனைத்தையும் முதலில் அமைதியான முறையில் எதிர்த்தனர். அவர்கள் அலட்சியம் மற்றும் வன்முறையின் கலவையுடன் சந்தித்தனர்.

1972இல் இலங்கை தன்னை ஒரு குடியரசாக அறிவித்தது. அரசியல்வாதிகள் சட்டவிரோதமாக ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கினர். இது தேசிய சிறுபான்மையினரின் உரிமைகளை நீக்கியது மற்றும் சிங்கள மொழி மற்றும் பௌத்த மதத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தியது. இது தமிழர்களுக்கு எதிரான அதிகாரபூர்வமற்ற போர்ப் பிரகடனமாகும். இவர்களின் அடக்குமுறைக்குப் பதில் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்திலும் கொரில்லாப் போரிலும் ஈடுபடத் தொடங்கினர். 1980 களின் முற்பகுதியில் தீவின் வரலாற்றில் மிக மோசமான தமிழர் விரோதப் படுகொலைக்குப் பிறகு ஒரு தேசிய விடுதலைப் போர் உருவானது.

2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர்களின் சுயநிர்ணயத்தை அங்கீகரிக்கும் பேச்சுவார்த்தை சமாதானத்திற்கான உண்மையான சாத்தியக்கூறுகள் காணப்பட்டாலும் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் இலங்கை அரசாங்கத்தை மீண்டும் போருக்குத் திரும்ப ஊக்குவித்தன. இலங்கை இராணுவத்தின் இனப்படுகொலைத் தாக்குதலின் மூலம் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் நூறாயிரக்கணக்கானோர் வதை முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட், கடந்த வருடம் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் ஒப்புக்கொண்டது போல், இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர் பெருகிய முறையில் ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளையில், உயர் அரச அதிகாரிகள் அவர்களுக்கு எதிரான பிரிவினைவாத மற்றும் பாரபட்சமான பேச்சுகளை தொடர்கின்றனர். தமிழர் நிலங்கள் கடும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. தமிழ் ஆர்வலர்கள் தொடர்ந்து குறிவைக்கப்படுகிறார்கள். தமிழர்களின் பொருளாதார வாழ்வு தொடர்ந்து நெரிக்கப்பட்டு தமிழர்களின் நிலங்கள், குடியேற்ற முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

2009 இனப்படுகொலை, படுகொலைகளை மேற்பார்வையிட்ட முன்னாள் பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஆண்டு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றிலிருந்து இந்துகள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் அடங்கிய தமிழ்ப் பேசும் சமூகங்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. சமீபத்திய வாரங்களில், 2009 படுகொலைகளுக்கான இனப்படுகொலை நினைவுச்சின்னம் அழிக்கப்பட்டது. முஸ்லிம்கள் தங்கள் அன்புக்குரியவர்களை தகனம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இது அவர்களின் நம்பிக்கையின் அடிப்படைக் கொள்கைக்கு எதிரானது.

பெப்ரவரி 5 சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு சிட்னி டவுன் ஹாலில் கூடுவோம். தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான எமது எதிர்ப்பில் தமிழ் மக்களுடன் நிற்குமாறு சிங்கள மற்றும் சர்வதேச சமூகங்களின் ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். நீதி கிடைக்கும் வரை இலங்கையின் சுதந்திர தினம் என்பது பொய். அதன் உண்மையான பெயர் தமிழர் ஒடுக்குமுறை நாள் என்று அந்த பேரவை தெரிவித்துள்ளது.

# அன்ரிஜன் சோதனைக் கருவிகளுக்கு தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு



ஒமிக்ரொன் பரவலுடன், அன்ரிஜன் சோதனை கருவிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அன்ரிஜன் பரிசோதனை கருவிகள் குறைவாக வழங்கப்படுவதே இப்பிரச்சினைக்கு காரணம் என பொது சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளரான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போதுள்ள அன்ரிஜன் சோதனைக் கருவிகள் உடனடி முடிவுகள் தேவைப்படும் கொவிட் -19 நோயாளிகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரண்டு விற்பனை நிலையங்களில் பணம் திருட்டு –மெதகமவில் சம்பவம்

**(கெலும் குணதிலக்க)**

பிபில, மெதகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடபோவ வீதியில் அமைந்துள்ள இரு விற்பனை நிலையங்கள் நேற்று முன்தினம் (01) காலை உடைக்கப்பட்டு 12ஆயிரத்து 500 ரூபா திருடப்பட்டுள்ளதாக மெதகம பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த விற்பனை நிலையங்களில் ஒரு விற்பனை நிலையத்தில் கூரைகள் நீக்கப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து 02ஆயிரம் ரூபா நாணயக் குற்றிகள், 03ஆயிரம் ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

மற்றைய விற்பனை நிலையத்தில் முன்கதவின் ஒரு துண்டு நீக்கப்பட்டு விற்பனை நிலையத்தின் காசாளர் மேசையிலிருந்த 7ஆயிரத்து 500 ரூபா திருடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் மெதகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரபாத் திஸாநாயக்க தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# ஒப்பனைக் கலையை தொழிலாக மாத்திரமன்றி கலாசார அம்சங்களைப் பேணுவதற்கான ஒரு முறையாக கையாள வேண்டும்

## டிப்ளோமாதாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் இராதா எம்.பி. வலியுறுத்து





ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு









**(இக்பால் அலி)**

கொவிட் தொற்று காரணமாக இன்று நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் தான் எங்களுடைய வாழ்க்கை முறையை நடத்திக் கொண்டிருக்கின்றோம். அதேபோன்று, வாழ்க்கைக்கு தேவையான பல விடயங்களில் ஒன்றாக ஒப்பனை அழகுக் கலையும் உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் இந்தக் கலை மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஸரின் அழகுக்கலையில் NVQ - iv டிப்ளோமா கற்கை நெறியினை பூர்த்தி செய்த அழகுக்கலை துறையைச் சேர்ந்த ஒப்பனையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கண்டி ஓக் ரே ஹோட்டலில், ஸரின் அழகுக்கலை கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் ஸரின் ஸ்ரீபிரியா தலைமையில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே, இராதாகிருஷ்ணன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

கொரோனா ஆறு மாதம் அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு தடவை புதிய பிறழ்வுகள் வந்து கொண்டிருக்கின்றன. கொரோனா தொற்று அல்பா, டெல்ட்டா, ஒமிக்ரொன் என ஒவ்வொரு பிறழ்வுகளாக உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு தகுந்தவாறு எங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயத் தேவைப்பாடும் இருக்கின்றது. அரசாங்கம் பல கோடி ரூபாவை செலவு செய்து இந்த நாட்டுக்கு தடுப்பூசிகளைக் கொண்டு வந்திருக்கிறது.

நாங்கள் கட்டாயம் இந்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உணர்வுள்ளவர்களாகவும் கட்டாயம் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அலட்சியத்துடன் இருந்துவிடக்கூடாது. ஏனென்றால், எங்கள் உயிர்களை நாங்கள் முதலில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, எமது உயிர்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

அரசாங்கம் இந்த பொறுப்பு வாய்ந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. பல கோடி ரூபா இந்த தடுப்பூசிகளுக்காக கடன் பெறப்பட்டுள்ளன. ஆகவே, இந்த வேலைத்திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதில் எவ்வித அரசியல் பாகுபாடுமின்றி, இனப்பாகுபாடுமின்றி அனைவரும் ஒன்றாக இணைந்து செய்ய வேண்டும். அரசாங்கம் எடுத்த சகல முயற்சியையும் பிழையென்று விமர்சனம் செய்ய முடியாது. அரசாங்க செயற்பாடுகளை விமர்சிப்பது போன்று அரசாங்கம் செய்யும் நல்ல திட்டங்களை பாராட்ட வேண்டியதும் எங்களது கடமையாகும்.

இன்று அரசாங்கம் பல்வேறு சிக்கலுக்கு மத்தியில் விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்தாலும்கூட, அதன் பிரதிபலன்களை அரசாங்கமும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் மாத்திரமல்ல பொது மக்கள், எதிர்க்கட்சி உள்ளிட்ட சகலரும் அனுபவிக்க நேரிடும்.

படித்தவர்கள் சகலருக்கும் வேலைவாய்ப்பு கிடைப்பது என்பது மிகவும் அரிது. ஆகவே, படித்து விட்டு தொழிலின்றி இருக்க முடியாது. ஏதாவதொரு தொழிலில் ஈடுபட வேண்டியது அவசியம். ஆகவே அந்த தொழிலை தெரிவு செய்வது என்பது உங்களுடைய பொறுப்பாக இருக்கிறது. சிலர் அலுவலகம் செல்வார்கள். சிலர் கடைகளுக்கும் ஆடைத் தொழிற்சாலைக்கும் சிலர் சொந்த தொழில்களையும் ஆரம்பிக்கின்றனர். உங்களைப் பொறுத்த வரையிலும் நீங்கள் ஒப்பனைக் கலையினை தெரிவு செய்துள்ளீர்கள்.

ஒப்பனைக் கலைஞர் என்பது சினிமாவிலும், சின்னத் திரையிலும், மணப்பெண்களுக்கும், கலை கலாசாரத்தில் ஈடுபடும் பெண்களுக்கும் மிக முக்கியமான தொழிலாக இருக்கின்றது.

இந்த தொழிலைச் செய்வதற்கு ஒரு களம் வேண்டும். அதற்காகவே ஸரின் அழகுக்கலை பயிற்சியினை வழங்கிக் கொண்டிக்கின்றோம். இது மலையக பெண்களுக்கு மிக அவசியமான தொழிலாகும். ஷரின் ஒரு நல்ல பணியைச் செய்து கொண்டிருக்கின்றார். இந்தக் கலையை பயின்று நல்ல நிலைக்கு வர வேண்டும். இந்தக் கலையின் மூலமாக உழைப்பை மட்டும் நோக்கமாகக்கொண்டதாக இருக்கக் கூடாது.

எங்களுடைய வாழ்க்கை விழுமியங்களையும் கலாசார அம்சங்களையும் பேணுவதற்கான சந்தர்ப்பத்தை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இங்கு தமிழ், முஸ்லிம், பௌத்த என பல்லின சமூகத்தை சேர்ந்தவர்களுடைய ஆடை அலங்காரங்களை அழகான முறையில் வெளிப்படுத்தியிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அதற்கேற்றவாறு உங்களது ஒப்பனைக் கலையை செய்து அவர்களையும் மகிழ்வித்து அவர்களது குடும்பத்தையும் மகிழ்விக்க வேண்டும். அதேபோன்று உங்களையும் உங்களது வாழ்க்கையையும் மகிழ்விக்கக்கூடிய ஒரு விடயமாக அழகுக்கலை அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் இலக்கியவாதி இரா. அ. இராமன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே. எம். ஹாபிஸ் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்பழகன், தொழிலதிபர் முத்தையா ஸ்ரீகாந்தன், எழுத்தாளர் கலாபூஷணம் இஸ்மாலிகா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# வடகொரியாவிடமிருந்து கறுப்புச் சந்தை டொலர் மூலம் ஆயுதம் வாங்கவில்லை

## மறுத்தது வெளிவிவகார அமைச்சு

யுத்தத்தின்போது கறுப்புச் சந்தை டொலரைப் பயன்படுத்தி அரசாங்கம் வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்ததாக நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ வெளிப்படுத்தியதாக வெளியான செய்தியை வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுடன் பேசியதாகத் தெரிவித்த அமைச்சு, குறித்த செய்தியில் கூறப்பட்ட கருத்துகளை மறுத்துள்ளது.

இலங்கையின் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, கறுப்புச் சந்தை டொலர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல கொள்வனவுகள் தொடர்பில் சில சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டதாக முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் கறுப்புச் சந்தையில் கிடைத்த பணத்தைப் பயன்படுத்தியே இலங்கை வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.





இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அதே காலப்பகுதியில் எரிபொருளுக்கு செலுத்துவதற்கு இலங்கையும் கறுப்புச் சந்தை டொலர்களைப் பெற்றுள்ளது,

யுத்த காலத்தில் எரிபொருள் ஏற்றுமதிக்கு பணம் செலுத்துவதற்கு டொலர்கள் தேவைப்பட்டது. நாம் ஏனைய அதிகாரிகளுடன் கொழும்பிலுள்ள 'புறக்கோட்டை' வர்த்தக பிரதேசத்துக்கு விஜயம் செய்தோம். அங்கு கறுப்புச் சந்தையில் டொலர்களைப் பாதுகாப்பதற்காக வர்த்தகர்களுடன் கலந்துரையாடினோம்.

இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு குறைந்துவரும் இவ்வேளையில், நாட்டுக்கு மிகவும் தேவையான டொலர்களை கொண்டு வருவதற்கு கறுப்புச் சந்தை முறையைப் பயன்படுத்த வேண்டும். ஏதோ ஒருவகையில் நாட்டுக்குள் டொலர்கள் வரவேண்டும். வங்கித்துறைக்கு வெளியே மக்கள் தங்கள் டொலர்களை மாற்றுவதன் மூலம் அதிகப் பணத்தைப் பெறுவதில் தவறில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# பொது போக்குவரத்துச் சேவை சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும்

## போக்குவரத்து அமைச்சு அறிவிப்பு

பொது போக்குவரத்துச் சேவையானது கடுமையான முறையில் நிர்வகிக்கப்படுமென போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது போக்குவரத்துச் சேவைகள் தனியார் மயமாக்கப்பட்டுள்ள போதிலும் பொது மக்களுக்கு போதியளவு சேவை கிடைக்கவில்லை என போக்குவரத்து அமைச்சரான பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

மகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே போக்குவரத்து அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது போட்டி நிறைந்த போக்குவரத்து சேவையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதேபோன்று, பொதுமக்களுக்கு போக்குவரத்து சேவையை இலகுபடுத்த வேண்டியது அவசியமாகும்.



இதன்படி, பொது போக்குவரத்துச் சேவையின் தரத்தை மேம்படுத்தும் வகையில், கடுமையான முறைமையின் மூலம் பஸ் சேவையை நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# புத்தளத்தில் இடம்பெற்ற தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா








(ரஸீன் ரஸ்மின்)

தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா நேற்று முன்தினம் (01) புத்தளம், உடப்பு பிரதேசத்தில் இடம்பெற்றது.

சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற அடிப்படையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இளைஞர் விவகார , விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை மற்றும் முந்தல் பிரதேச செயலகம் என்பனவற்றின் ஒத்துழைப்பில் இந்த தேசிய தைப்பொங்கல் விழா இடம்பெற்றது. இந்த விழா செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் தமிந்த விக்ரமசிங்க, ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபைத் தலைவர் கே.தட்சணாமூர்த்தி உட்பட அமைச்சின் அதிகாரிகள், கலைஞர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த விழாவுக்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்தும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக 6 - 8 வரையான மாணவர்கள் வீதம் கலை நிகழ்ச்சிக்காக அழைத்து வரப்பட்டதுடன, இளைஞர் நாடாளுமன்ற சபாநாயகர், பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

இதற்கு மேலதிகமாக கொழும்பு கோட்டையிலிருந்து தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி வடிவமைப்பு செய்யப்பட்ட புகையிரதம் ஒன்று புத்தளம் நோக்கி வருகை தந்தது.

புத்தளம், பத்துளுஓயா புகையிரத நிலையத்திற்கு நேற்று முன்தினம்(01) மாலை 7 மணியளவில் வருகை தந்த விசேட புகையிரதத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா உள்ளிட்ட இளைஞர்கள் வருகை தந்தனர். விசேட புகையிரதத்தில் வருகை தந்த அமைச்சர்கள் உள்ளிட்ட இளைஞர், யுவதிகள் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து பாரம்பரிய நடனங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அத்தோடு நாட்டு மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் ஆசிகள் வேண்டி உடப்பு திரௌபதி அம்மன் கோயிலில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன. அத்துடன், இந்து கலாசார மண்டபத்தில் அதிதிகளின் விசேட உரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இதேவேளை, புதன்கிழமை அதிகாலை பெரிய கோயிலில் பொங்கல் பொங்கப்பட்டு சிறப்பு பூஜைகள் இடம்பெற்றதுடன், பல மாவட்டங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட பச்சரிசி, பலகாரம், சமரச விருந்துபசாரமும் இதன்போது இடம்பெற்றன.

இதேவேளை, முகத்துவாரம் கடற்கரைப் பகுதியில் பட்டம் விடுதல் போட்டி, குழு நாடகங்கள, கச்சேரிகள் , கலாசார நடனங்கள் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 46 ஆயிரம் யூரோக்களை சூட்சுமமாக டுபாய்க்கு எடுத்துச்செல்ல முயற்சி

## இருவர் கைது

ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 46 ஆயிரம் யூரோ நாணயத் தாள்களை சட்ட விரோதமாக வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்ல முயற்சித்த இருவர் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று (02) காலை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர், பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதந்த சில்வா தெரிவித்துள்ளார். டுபாய் செல்வதற்கு தயாராக இருந்த இவர்கள் இருவரதும் பயணப் பொதிகளில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த வெளிநாட்டு பணத்தொகை சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்நிலையில், சந்தேகநபர்கள் இருவர் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுங்க ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# லொத்தர் விற்பனையாளர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு





(அநுராதபுரம் நிருபர்)

தேசிய லொத்தர் சபையின் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (01) அநுராதபுரம் ஹெரிடேஜ் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

லொத்தர் விற்பனையை நாடுபூராவும் முறையாக விஸ்தரிப்பதற்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக அவர்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என நம்புகின்றேன்.

அவ்வாறு செய்வதன் மூலம் விற்பனை முகவர்கள் மற்றும் லொத்தர் விற்பனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைப்பதுடன் நாடுபூராவும் லொத்தர் விற்பனையை அதிகரிப்பதன் மூலம் சபைக்கு அதிக இலாபத்தினையும் ஈட்டிக்கொள்ள முடியும் என நம்புகின்றோம் - என்றார்.

இதன்போது சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கு காசோலைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நாடாளுமன்ற உறுப்பினர் கே.பி.எஸ்.குமாரசிறி, அநுராதபுரம் மாநகர முதல்வர் எச்.பீ.சோமதாச மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன நாரகல, நிறைவேற்று அதிகாரி அநுர ஜயரத்ன உள்ளிட்ட அரச அதிகாரிகள் விற்பனை முகவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கல்வித்துறைக்காக செய்யப்படும் முதலீடு ஒருபோதும் வீணாகாது!

## நவீன விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்திற்கு முகங்கொடுக்கக்கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்பவேண்டுமென இம்தியாஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

(பேருவளை நிருபர்)

கல்வித்துறைக்காக செய்யப்படும் முதலீடு ஒருபோதும் வீணாகி விடாது. முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால எழுச்சி கல்வித்துறையின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது. எனவே, இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்திற்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் கல்வியறிவுள்ள ஒரு சமூகத்தை உருவாக்க நாம் அனைவரும் கைகோர்த்து செயற்பட வேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

தர்கா நகர் அளுத்கம வீதிய முஸ்லிம் தேசிய பாடசாலையில் புனரமைக்கப்பட்ட மனையியல்கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியில் 99 சதவீதத்தை கல்வி நடவடிக்கைகளுக்காகவே ஒதுக்கியுள்ளேன். கல்விதான் ஒரு மனிதனை பூரண மனிதனாக மாற்றியமைக்கும். பெற்றோர்கள் தமது குழந்தைச் செல்வங்களுக்கு வழங்கும் செல்வங்களில் பெரும் செல்வம் கல்விச் செல்வமாகும். எமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுப்பதோடு, பல்லின சமூகங்கள் வாழும் நாட்டில் ஏனைய இன மக்களுடன் எவ்வாறு நல்லிணக்கத்துடன் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழவும் வழிகாட்ட வேண்டும்.

கொழும்பு ஆனந்தக் கல்லூரியில் நான் கல்வி கற்றேன். பௌத்த சமயம், பாலி, சிங்கள மொழிகளையும் கற்றேன். அப்போதைய பாடசாலை ஆசிரியர்கள், விசேடமாக பௌத்த பிக்கு ஆசிரியர்கள் எவ்வித வேறுபாடுமின்றி கல்விப் போதனை வழங்கினார்கள். அவர்களை நான் இன்றும் மதிக்கின்றேன்.





இப்பாடசாலையிலுள்ள பல குறைபாடுகளை அதிபர் இங்கு சுட்டிக்காட்டினார். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்றவகையில் எனக்கு வரையறுக்கப்பட்ட தொகையே வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படுகிறது. என்றாலும் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக என்னால் முடியுமான உதவிகளைச் செய்ய முயற்சிப்பேன். இப்பாடசாலை அதிபருடன் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஒன்றாய் கைகோர்த்து செயல்படுவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு ஒன்றாய் இணைந்து தியாகத்துடன் உழைப்பதன் மூலமே பாடசாலையின் முன்னேற்றம் தங்கியுள்ளது - என்றார்.

விழாவில் பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளருமான ஏ.ஆர்.எம்.பதியுதீன், பிரதேச சபை உறுப்பினர் பைஸான் நைஸர் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.







74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 4ஆம் திகதி இடம்பெறவுள்ள சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஒத்திகைகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்த ஒத்திகை நிகழ்வுகளில் நேற்று முன்தினம் (01) இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாண அமைச்சுகளில் அதிரடி மாற்றம்



(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் வழங்கப்பட்டது. இந்த இடமாற்றம் எதிர்வரும் 07ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனடிப்படையில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக ஜ.கே.ஜீ.முத்துபண்டாவும், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக ஏ.எச்.எம்.அன்ஸாரும், முதலமைச்சின் செயலாளராக பீ.கலாமதியும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக ஜே.ஜே.முரளிதரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளராக எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்காவும் கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராக எம்.வை.சலீமும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளராக எம்.கோபாலரத்னமும், பிரதி பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜலீலும், பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) மன்சூரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## போடியார் புலம்பல்!



**ஜெனிவாவ சமாளிக்க நாடகமாடுகிறதாம் அரசாங்கம் என்று சுமந்திரன் எம்.பி. சொல்லுறாரு எலுவா..? அப்ப பன்னண்டு வருசமாய் ஜெனிவாவுல போய் திருவிழா நடத்தி என்னத்த சாதித்தயல் நீங்க தம்பி.. கோட்டா கோஷ்டி நாடகமாடட்டும், சம்பந்தன் தரப்பு திருவிழா காட்டட்டும்..ஜெனிவாகாறங்க காவடி எடுக்கட்டும். மொத்தத்தில வடக்கு, கிழக்கு தமிழர்கள் கனவு காணட்டும்.**

# கிண்ணியாவில் இடம்பெற்ற ஈர நிலங்கள் தின நிகழ்வு




(சீனக்குடா நிருபர்)


உலக ஈர நிலங்கள் தினத்தை முன்னிட்டு நேற்று (02) திருகோணமலை மாவட்டத்தின் பிரதான நிகழ்வு கிண்ணியாவில் நடைபெற்றது.

இதன்போது, ஈர நிலங்களை பாதுகாக்கும் பொருட்டு விழிப்புணர்வு வீதி ஊர்வலம் ஒன்று நடைபெற்றதோடு, கிண்ணியா ஓரிகன் பால கரையோரப் பிரதேசங்களில் கண்டல் தாவரங்கள் நடும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிண்ணியா மகளிர் வித்தியாலயம், கிண்ணியா அல்-அக்ஸா கல்லூரி மற்றும் திருகோணமலை அபேயபுர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை இதனை ஏற்பாடுசெய்திருந்தது.

# மட்டக்களப்பு சந்திவெளியில் 15 வயது சிறுவனைக் காணவில்லை



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, சந்திவெளி பிரதேசத்தைச் சோந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவர் வீட்டிலிருந்த நிலையில் கடந்த 28ஆம் திகதி காணாமல்போயுள்ளதாக நேற்று புதன்கிழமை (02) பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி பத்தினி அம்மன் கோவில் வீதி ஜீவபுரத்தைச் சேர்ந்த 15 வயதுடைய அன்ரனி ஆனுராஸ் என்ற சிறுவன் சம்பவதினமான கடந்த மாதம் 28ஆம் திகதி வீட்டில் இருந்துள்ள நிலையில் காணாமல்போயுள்ளார் எனவும் கையடக்கத் தொலைபேசி கவரினுள் வைத்திருந்த இரண்டாயிரம் ரூபா பணத்தைக் காணவில்லை எனவும் அவரை எங்கு தேடியும் காணவில்லை எனவும் அவரை கண்டுபிடித்துத் தருமாறும் நேற்று புதன்கிழமை (02) பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுவன் பற்றிய தகவல்கள் தெரிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பில் கைதான 64 பேருக்கும் 15ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயிற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணிவந்த 60 பேரையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் காணொளி மூலமாக நேற்று (02) உத்தரவிட்டார்.

கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் காத்தான்குடியைச் சேர்ந்த 65 பேரை கைதுசெய்தனர்.

அதேவேளை, சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிசார் கைதுசெய்தனர். இரு வெவ்வேறு வழக்குகளைக்கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதையடுத்து 64 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், வெவ்வேறு இரு வழக்குகளைக்கொண்ட 64 பேரும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தற்போது தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக நீதிமன்றிற்கு இவர்களை அழைத்துவர முடியாததையடுத்து அவர்களை காணொளி மூலமாக எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் உத்தரவிட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆலையடிவேம்பில் 15 இலட்சம் ரூபா நிதியில் புதிய கரப்பந்தாட்ட மைதானம் திறந்துவைப்பு



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோளாவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மைதானத்தில் 15 இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானம் நேற்று மாலை விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் அமித்தேனுக விதானகமகேயினால் திறந்துவைக்கப்பட்டது.

பிரதேசத்திற்கு ஓர் இரவு - பகல் கரப்பந்தாட்ட மைதானம் எனும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கு அமைவாக பிரதேச சபை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்கவின் இணைப்பாளருமான கிந்துஜா பிரதீபனின் வேண்டுகோளுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட மைதானமே இவ்வாறு திறந்துவைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் அமித் தேனுக விதானகமகே, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ஷ, ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தவிசாளர் த.கிரோஜாதரன், பிரதேச செயலக கணக்காளர் க.பிரகஸ்பதி, பிரதேச சபை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்கவின் இணைப்பாளருமான கிந்துஜா பிரதீபன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

திறப்பு விழாவிற்காக வருகைதந்த அதிதிகளுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. இதன்பின்னர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்ட அதிதிகளுக்கு ஆலய பிரதமகுரு உள்ளிட்டவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இதன் பின்னர் கரப்பந்தாட்ட மைதானத்தின் பெயர்ப்பலகையினை திரைநீக்கம் செய்து வைத்த இராஜாங்க அமைச்சர் உள்ளிட்டோர் நாடாவை வெட்டி மைதானத்தை திறந்துவைத்து கரப்பந்தாட்ட போட்டியினையும் ஆரம்பித்து வைத்தனர்.

இதேநேரம் மரநடுகையிலும் கலந்துகொண்ட அவர் கூட்டமொன்றில் கலந்துகொண்டு, அரசாங்கம் இன, மத வேறுபாடின்றி அனைத்து பிரதேசங்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்கொண்டுசெல்வதாகவும் எதிர்காலத்திலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார்.

இந்நிலையில் இடம்பெற்ற சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களையும் வழங்கினார்.

# சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்க ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும்





(மாவடிப்பள்ளி நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் பிரதேச செயலாளருமான எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் 10 வருடங்களுக்கு மேல் இங்கு தொடர்ந்து சேவையாற்றியவர்கள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கிராம உத்தியோகத்தர்களுக்கிடையிலான பிரதேச முகாமைத்துவப் போட்டியில் முதலாம் 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களுடன் நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அரசாங்க அதிபர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்ட இதேவேளை, அதிதிகளும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு உத்தியோகத்தர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.பாக்கியராஜா, மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.எல்.ஆதம்பாவா, மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ், மாவட்ட செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எச்.பி.எம்.அனீஸ், மாவட்ட காணி உத்தியோகத்தர் கே.எல்.முஸம்மில், பிரதேச செயலாளர்களான ஏ.எம்.ஏ.லத்தீப், ஜே.லியாகத் அலி, எஸ்.எல்.எம்.ஹனீபா, பிரதேச செயலகத்தின் முன்னாள் கணக்காளர் ஏ.எல்.எம்.நஜிமுடீன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம்.ஜௌபர், பிரதேச செயலகத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் என்.பி.எம்.ழரீப், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.மௌபிகா, நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பழீல், நிர்வாகக் கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம் மற்றும் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எம்.எம்.நியாஸ் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன், சமூக பாதுகாப்பு நிதியத்திற்காக உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதில் திறமைகளை வெளிக்காட்டிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் இங்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் முதலாவது அபிவிருத்திக் குழுக் கூட்டம்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு - பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் இவ்வாண்டுக்கான முதலாவது அபிவிருத்திக் குழுக் கூட்டம் இராஜாங்க அமைச்சரும் பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் நேற்று (02) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த ஆண்டில் குறித்த பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் பிரதேசத்தின் பொருளாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, போக்குவரத்து, மீன்பிடி, இறால் பண்ணை அமைத்தல், மின்சாரம், சிறுகைத்தொழில் மற்றும் விளையாட்டு உள்ளிட்ட சுற்றாடல் உட்பட ஏனைய அனைத்து திணைக்களங்கள்சார் விடயங்களும் ஆராயப்பட்டதுடன், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்திக் குழுவின் உப தலைவர் பரமசிவம் சந்திரகுமார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா), மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.புஸ்பலிங்கம், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வை.சந்திரமோகன், மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி தட்சனகௌரி தினேஸ் மற்றும் பிரதேச செயலக உயரதிகாரிகள் உள்ளிட்டோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஏனைய திணைக்களத் தலைவர்கள், துறைசார்ந்த அரச உயரதிகாரிகள், கிராமமட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸார், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# இதுவரை கொரோனா தடுப்பூசி செலுத்தாதோருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மட்டக்களப்பில் ஆரம்பம்

## பிரதேச சுகாதார அதிகாரி வைத்தியர் இளையதம்பி உதயகுமார்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை கொரோனா தடுப்பூசி ஏற்றாத 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர், பைசர் தடுப்பூசிகள் மற்றும் முதலாம், இரண்டாம் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் இன்று வியாழக்கிழமைமுதல் மட்டு. மாநகர சபை மண்டபம் மற்றும் சத்துருக்கொண்டான் சர்வோதய மண்டபம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளதாக மட்டக்களப்பு பிரதேச சுகாதார அதிகாரி வைத்தியர் இளையதம்பி உதயகுமார் நேற்று (02) தெரிவித்தார்.

கொரோனா தடுப்பூசி ஏற்ற ஆரம்பிக்கப்பட்டு கடந்த மாதம் 28ஆம் திகதியுடன் ஒருவருட பூர்த்தி நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இருந்தபோதும் இந்த ஒருவருடத்தில் தடுப்பூசி ஏற்றாதவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதனடிப்படையில் இதுவரை தடுப்பூசி ஏற்றாதவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இன்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இதுவரை தடுப்பூசி ஏற்றாத அனைவரும் இந்த தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவேண்டும்.

இதில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருமாத இடைவெளியில் இந்தத் தடுப்பூசிகளை ஏற்றமுடியும். எனவே அவர்களும் இந்த தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவும்.

இந்த கொரோனா தொற்றின் பாதிப்பை இல்லாமல் செய்ய ஒரே ஒருவழி இந்த தடுப்பூசியை ஏற்றுவதுதான். எனவே, இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி காலதாமதமின்றி தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்.

# திருமலை சண்முகா இந்துக் கல்லூரியில் அபாயா ஆடையால் சர்ச்சை

## கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்






(பதுர்தீன் சியானா)

அபாயா அணிந்து வரவேண்டாம். ஆசிரியைக்குரிய ஆடையை அணிந்து வரவும் என திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்கு முன்னால் நேற்று (02) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2017ஆம் ஆண்டு இப்பாடசாலையில் அபாயா பிரச்சினை பாரிய பிரச்சினையாக உருவெடுத்த நிலையில், அப்பாடசாலையில் ஏற்கனவே கடமையாற்றிவந்த ஆசிரியை மீண்டும் பாடசாலைக்கு நேற்று சென்றுள்ளார்.

குறித்த பாடசாலை அதிபர் காரியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்க சென்ற நிலையில், பாடசாலை சமூகத்திற்கும் குறித்த பெண் ஆசிரியருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அப்பாடசாலையின் அதிபர் தன்னை அபாயா அணிந்து வந்த ஆசிரியை தாக்கியதாகவும் இதேவேளை, அபாயா அணிந்து வந்தமையால் கோபம் கொண்ட அதிபர் தன்னை தாக்கியதாகவும் கூறி இருவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலிருந்து அபாயா அணிந்து சென்ற காரணமாக வெளியேற்றப்பட்ட ஆசிரியை பாத்திமா பஹ்மிதா நீதிமன்றத்தில் இரு தரப்பிற்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வின் காரணமாக நேற்று மீண்டும் பாடசாலைக்கு கடமையை பொறுப்பேற்கச் சென்றபோதே மேற்படி பாடசாலையில் பதற்றநிலை தோன்றியுள்ளது.

2017இல் அபாயா அணிந்து கற்பிக்கச் சென்ற ஆசிரியைகளை அபாயா அணிந்து வந்ததன் காரணமாக பாடசாலையை விட்டு சண்முகா இந்துக்கல்லூரி நிர்வாகம் வெளியேற்றியதும் குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆசிரியைகள் செய்த முறைப்பாட்டை விசாரித்த ஆணைக்குழு, ஆசிரியைகளின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக முடிவுசெய்ததோடு ஆசிரியைகளை மீள சண்முகா இந்துக் கல்லூரிக்கு உடனடியாக அனுமதிக்குமாறு பிரேரித்தது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரை வெளியாகி வருடங்களாகியும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் அதனை நடைமுறைப்படுத்தக் கோரி பாதிக்கப்பட்ட ஆசிரியைகளில் ஒருவரான ஆசிரியை பஹ்மிதா ரமீஸ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

சென்ற மாதம் வழக்கு விசாரணைக்கு வந்தபோது அரச தரப்பு இணக்கப்பாட்டிற்கு வருவதாகக் கூறியதைத் தொடர்ந்து அதனை ஏற்றுக்கொண்ட மனுதாரரான ஆசிரியை பஹ்மிதா தான் மீண்டும் சண்முகாவிற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று கேட்டிருந்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட அரச தரப்பு நேற்று (02) ஆசிரியை பஹ்மிதாவை மீண்டும் சண்முகா இந்துக் கல்லூரிக்கு கடமையை ஏற்குமாறு அனுமதித்தது. அதற்கான கடிதத்தினை கல்வி அமைச்சு அனுப்பியிருந்தது.

அதன்பிரகாரம் நேற்று சண்முகாவிற்கு மேற்படி ஆசிரியர் கடமையேற்கச் சென்றுள்ளார். இதன்போதே மேற்படி சம்பவம் நடந்து ஆசிரியையை வெளியேற பணிக்கப்பட்டுள்ளது.

வீடியோவைக் காண...

இந்த விவகாரம் சட்ட மா அதிபரின் கவனத்திற்கும் நீதிமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரண வீட்டுக்குச் சென்று திரும்பிய குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை!

## கொக்கட்டிச்சோலையில் சம்பவம்

(கல்லடி நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் குடும்பஸ்தரொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான குருகுலசிங்கம் நமச்சிவாயம் (வயது - 41) என்பவர் தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் நேற்று முன்தினம் (01) தனது உறவினரின் மரணவீட்டுக்குச் சென்று அதிகாலைவேளையில் வீடு திரும்பியுள்ளார். அதன்பின்னர் அவரது மனைவி வெளி மண்டபத்தைக்குச் சென்று பார்த்தபோது அவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதை அவதானித்துள்ளார்.

இந்நிலையில், அயலவர்களின் உதவியுடன் தூக்கிடப்பட்டவரை மீட்டெடுத்தபோது அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்குச்சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. ஊறணி சந்தியில் கோழிகளை ஏற்றிச்சென்ற லொறி - மோட்டார்சைக்கிள் மோதி விபத்து

## பெண் ஒருவர் படுகாயம் - வாகனச் சாரதி கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - கொழும்பு வீதி ஊறணி சந்தியில் மோட்டார்சைக்கிள் ஒன்றும் கோழிகளை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றும் மோதிய விபத்தில் மோட்டார்சைக்கிளை செலுத்திச்சென்ற பெண் ஒருவர் படுகாயமடைந்ததுடன், வாகனம் தடம்புரண்டுள்ள சம்பவம் நேற்று (02) அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், சாரதியை கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை பகுதியிலிருந்து காத்தான்குடி பிரதேசத்தை நோக்கி கோழிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த லொறி, மட்டக்களப்பிலிருந்து நேற்று அதிகாலை 5 மணியளவில் ஊறணிக்கு மோட்டார்சைக்கிளை செலுத்திச்சென்ற பெண் மீது ஊறணி சந்தியில் எதிரே வந்த லொறி மோதி விபத்துக்குள்ளானதில் அவர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, சுமார் 50 மீற்றர் தூரம்வரை மோட்டார்சைக்கிளை இழுத்துச்சென்ற நிலையில் லொறி வீதியைவிட்டு விலகி தடம்புரண்டுள்ளதுடன், லொறிச் சாரதியை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கலாநிதி சபீனா இம்தியாஸ் பேராசிரியராக பதவியுயர்வு!



(எம்.என்.எம்.அப்ராஸ்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றும் கலாநிதி எம்.ஐ.சபீனா இம்தியாஸ் 23.12.2020ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும்வகையில் தாவரவியல்துறையில் பேராசிரியராக (Professor in Botany) பதவியுயர்வு பெறுகின்றார்.

1997ஆம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞான பீட உருவாக்கத்தின் ஆரம்ப காலத்தில் உதவி விரிவுரையாளராக பல்கலைக்கழக ஆசிரிய சேவையில் இணைந்துகொண்ட இவர், 1998ஆம் ஆண்டு நிரந்தர விரிவுரையாளர் நியமனம் கிடைக்கப்பெற்றார்.

தொடர்ந்து சிரேஷ்ட விரிவுரையளர் தரம் II, தரம் I மற்றும் துறைத்தலைவர், கல்விசார் திணைக்களங்களின் தலைவர், இணைப்பாளர், மாணவர் ஆலோசகர், பணியாளர் மேம்பாட்டுத் திணைக்களத்தின் தலைவர் என பல்வேறுபட்ட பொறுப்புகள் மற்றும் பதவியுயர்வுகள் பல பெற்றதுடன், பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக தொடர்ச்சியாக 14.06.2010முதல் 23.07.2016வரை இருதடவைகள் கடமையாற்றி பிரயோக விஞ்ஞான பீடத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு தன்னை முழுதாக அர்ப்பணித்து சிறப்பாக செயலாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் வைத்து கைதான கொள்ளையர் உட்பட இரு தேரர்களையும் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, காரைதீவு வெட்டுவாய்க்காலில் பொலிஸார் மீது கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் படுகாயமடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட கொள்ளையன் ஒருவன் மற்றும் இரு பௌத்த தேரர்கள் உட்பட 3 பேரையும் எதிர்வரும் 8ஆம் திகதிவரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (01) பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அக்கரைப்பற்றில் நீதவான் ஒருவரின் வீடு உட்பட பல வீடுகளில் கொள்ளையிட்டுவந்த கொள்ளையர்கள் பதுங்கியிருந்த காரைதீவு வெட்டுவாய்க்கால் இடத்தை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை (01) இரவு 10 மணிக்கு முற்றுகையிட்டு அவர்களை கைதுசெய்ய மடக்கிப்பிடிக்க முற்பட்டபோது பொலிஸார் மீது கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு குறிதவறி கொள்ளையன் ஒருவர் மீது துப்பாக்கி குண்டுபாய்ந்ததையடுத்து அவன் படுகாயமடைந்ததையடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட கொள்ளையர்கள் இருவர் அங்கிருந்து தப்பி ஓடினர்.

இந்நிலையில், படுகாயமடைந்த கொள்ளையன் மற்றும் பௌத்த தேரர்கள் இருவர் உட்பட 3 பேரை கைதுசெய்த பொலிஸார், இவர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை (01) ஆஜர்படுத்தியபோது இவர்களை தொடர்ந்து பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யவேண்டியுள்ளதால் மன்றில் அதற்கான அனுமதியை கோரியதை யடுத்து அவர்களை எதிர்வரும் 8ஆம் திகதிவரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட நால்வர் ஏறாவூர் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட நால்வர் நேற்று(02) ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சட்ட மா அதிபரின் ஆலோசனை தொடர்பான கடிதத்தின்படி குறித்த வழக்கிற்கான நகர்த்தல் மனு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டவேளை, ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி கருப்பையா ஜீவராணியினால் பிணை வழங்கப்பட்டுள்ளது.


கடந்த 2020 நவம்பர் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி, சித்தாண்டி, ஏறாவூர் மற்றும் ஐயங்கேணி போன்ற பகுதிகளைச் சேர்ந்த க.சோபனன், யோ.யோகேஸ்வரன், வ.விவேந்த் மற்றும் க.ஜெகநாதன் ஆகியோரே இவ்விதம் பிணையில் விடுதலை பெற்றுள்ளனர்.

இவர்கள் முகப்புத்தகத்தில் அரசினால் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் உருவம் அடங்கிய புகைப்படத்தினை பதிவிட்டதன் பிரகாரம் இவர்கள் ஏறாவூர் பொலிஸாரினால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப் பட்டிருந்தனர்.

சுமார் 13 மாதகாலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர்கள் நால்வரும் சட்ட மா அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று அவர்கள் 02 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தங்கள் பதிவை உறுதிசெய்ய வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அரச அலுவலர்களுக்கான சிங்கள மொழி பாடநெறி




(சியாத் எம்.இஸ்மாயில், றாசிக் நபாயிஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அரச அலுவலர்களுக்கான சிங்கள மொழி பாடநெறி நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழீல் ஒருங்கிணைப்பில் உதவிப் பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிரினால் நேற்று முன்தினம் (01) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் 2007 - 26ஆம் இலக்க நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அதிகாரத்திற்குட்பட்டு அரச அலுவலர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி கற்கை நெறிகள் அரசாங்க சுற்றறிக்கைகளுக்கமைவாக, தமிழ்பேசும் அரச அலுவலர்களுக்கு சிங்கள பாடநெறியும், சிங்கள மொழி பேசும் அரச அலுவலர்களுக்கு தமிழ் பாடநெறியும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டின் நிர்வாகத்துறையினை சிறப்பாக முன்னெடுக்கும் வகையிலும், சகல இன மக்களிடத்திலும் மொழி வழியிலான சமாதானம், ஐக்கியம், இன ஒற்றுமையை கட்டியெழுப்பும் வகையிலும், அரச உத்தியோகத்தர்களை இரு மொழிப் பயன்பாட்டிற்கு தேர்ச்சி பெறச்செய்யும் நோக்கில், தமிழ் பேசும் அரச ஊழியர்களுக்கு சிங்கள பாடநெறியும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இவ்வாறான பாடநெறிகள் அம்பாறை மாவட்டத்தில் பல அலுவலகங்களிலும் திணைக்களங்களிலும் நடைபெற்று வருகின்றன.

இப்பாடநெறிக்கு வளவாளராக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் பயிற்றப்பட்ட எஸ்.பாக்கியரட்ணம் கலந்துகொண்டு பாடநெறியினை ஆரம்பித்து வைத்ததுடன், சமுர்த்தி தலைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லாஹ், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜௌபர், பிரதம முகாமைத்து சேவை உத்தியோகத்தர் எம்.ஏ.சி.முகம்மட் றகீப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பொத்துவில் பிரதேச செயலகத்தில் சுதந்திர தினத்தன்று இரத்த தான நிகழ்வு

(பொத்துவில் நிருபர்)

74ஆவது சுததந்திர தினத்தையொட்டி, பொத்துவில் பிரதேச செயலகத்தில் மாபெரும் இரத்த தான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இரத்த தான நிகழ்வானது வெள்ளிக்கிழமை (04) காலை 09 மணிமுதல் மாலை 3.30 மணிவரை இடம் பெறவுள்ளது.

பொத்துவில் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து மேற்படி இரத்ததான நிகழ்வினை ஏற்பாடுசெய்துள்ளது.

இரத்த தானம் செய்ய விரும்புவோர் அன்றைய தினம் பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்து இரத்த தானம் செய்ய முடியும் என நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.அப்துல் வாசித் தெரிவித்தார்.

# கழிவுநீர் பிரச்சினைக்கு தீர்வு கோரி கல்முனை பிரதேச செயலக வாயிற்கதவை மூடி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

## அதிகாரிகளின் சமரசம் வீணானது!





(நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம்.சினாஸ், எம்.என்.எம்.அப்ராஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரினால் அப்பிரதேச மக்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கல்முனை விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர் தலைமையிலான பொதுமக்கள் நேற்று (02) கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை சுபத்திராம விகாரைக்கு முன்னால் நேற்று (02) காலை ஒன்று கூடிய மக்கள் அங்கிருந்து பேரணியாக கல்முனை பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர். இதனையடுத்து கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை அமைந்துள்ள கட்டிடத்தொகுதியின் பிரதான கதவை மூடி, வழிமறித்து தமது சுகாதாரப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தீர்வை வழங்க வேண்டும் எனக் கோரி குறித்த இடத்தில் அமர்ந்திருந்தனர். "கழிவு நீரை வைத்து அரசியல் செய்யாதீர், மக்களின் சுகாதாரப் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும், முறையான கழிவகற்றல் செய்யப்படவேண்டும், மாநகர சபை மௌனம் காப்பது ஏன்?" போன்ற சுலோகங்களை ஏந்தி பொதுமக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, குறித்த பகுதிக்கு வருகை தந்த கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடி சுமுகமான தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பொதுமக்கள் அங்கிருந்து செல்லவில்லை. மாநகரசபை முதல்வர், சுகாதாரத் தரப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த இடத்திற்கு வருகை தந்து பொதுமக்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்சாத் காரியப்பர், பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் உட்பட கல்முனை தெற்கு மற்றும் வடக்கு சுகாதார வைத்திய அதிகாரிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சுமுகமான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த கழிவுநீரை உடனடியாக கல்முனை மாநகர சபையின் உதவியைக் கொண்டு அப்புறப்படுத்துவது எனவும் நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடி தீர்வு பெற்றுத் தருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உறுதியளித்தனர். எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த வாக்குறுதியை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்கவேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக பிரதேச செயலக வளாகத்துக்குள் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் செல்ல முடியாமல் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டதுடன், குறித்த வீதியூடாக போக்குவரத்தும் தடைப்பட்டு காணப்பட்டன. அதனை சீரமைக்கும் பணியை கல்முனை பொலிஸார் வெற்றிகரமாக மேற்கொண்டிருந்ததுடன் அங்கு தற்காலிக கொட்டிலமைத்து தொடர்ந்தும் தீர்வு கிட்டும்வரை தரித்திருக்க முயற்சித்தவர்களை தடுத்து நிறுத்திய கல்முனை பொலிஸார், தொடர்ந்தும் சுமுகமான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன், கல்முனை ஸ்ரீசுபத்திரா விகாராதிபதி ரன்முதுகல தேரர் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர், பொதுமக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கும் இந்த பிரச்சினை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துகளை வெளியிட்டனர். இதன்மூலம் இனக்கலவரம் மற்றும் வீணான பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய நிலை உள்ளதாக பலரும் ஊடகங்களுக்கு சுட்டிக்காட்டினர்.

இவர்களிடம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்சாத் காரியப்பர் இவ்விடயம் தொடர்பில் கடந்த காலங்களில் என்னால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு போன்று நிரந்தரமாக ஒரு தீர்வு கிடைக்கும் வரை பொதுமக்களின் சுகாதார பிரச்சினைக்கு முடியுமான சகல உதவிகளையும் செய்ய தயாராக உள்ளதாக தெரிவித்தார். பிரதேச செயலாளரும் பல்வேறு கருத்துகளை முன்வைத்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இங்கு வருகைத் தந்த அதிகாரிகளின் நீண்டநேர கலந்துரையாடலின் பின்னர் குறித்த கழிவு நீர் பிரச்சினைக்கு சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், போராட்டம் கைவிடப் பட்டது.

இதனை தொடர்ந்து அவசரநிலையை கவனத்தில் கொண்டு கல்முனை மாநகர சபை முதல்வரின் பணிப்புக்கிணங்க மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பரின் ஆலோசனையுடன் சுகாதார பிரிவினர் இஸ்லாமாபாத் வீட்டுத்திட்ட பிரதேசத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# காணாமல்போன ஓட்டமாவடி மாணவன் வவுனியாவில் கண்டுபிடிப்பு



(மீராவோடை நிருபர்)

காணாமல்போன நிலையில் தேடப்பட்டு வந்த மாணவனை கண்டுபிடித்துள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியைச் சேர்ந்த 17 வயதுடைய மன்சூர் அன்ஸப் எனும் மாணவன் கடந்த 28 ஆம் திகதி வீட்டைவிட்டு சென்ற நிலையில் வீடு திரும்பாததால் பெற்றோர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவுசெய்திருந்தனர்.

இவ்வாறு காணாமல்போன மாணவன் சென்ற சைக்கிளும் அவர் அணிந்திருந்த சேர்ட் மற்றும் பாதணி போன்றவைகள் கடந்த 29ஆம் திகதி பாசிக்குடா - கல்மலை கடலோரம் கண்டெடுக்கப்பட்டது.

மாணவனின் பொருட்களை கண்டு கொண்ட பெற்றோரும், பிரதேச மக்களும் மாணவன் நீரில் மூழ்கி மரணமடைந்திருக்கலாம் எனும் சந்தேகத்தில் பொலிஸாரின் உதவியுடன் சுழியோடிகள் கடும் பிரயத்தனம் எடுத்து மாணவனை தேடி ஏமாற்றத்துடன் கரை திரும்பினர்.

மர்மமான முறையில் காணாமல்போன மாணவனை கண்டுபிடிக்க பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், மாணவன் வீட்டை விட்டு வெளியேறும்போது சில ஆடைகளையும், அவரிடமிருந்து சிறிதளவு பணத்தையும், தேசிய அடையாள அட்டை மற்றும் கையடக்க தொலைபேசி ஆகியவைகளை எடுத்துச் சென்றுள்ள விடயம் பெற்றோருக்கு தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், மாணவனின் வட்ஸ்அப் ஒன்லைன் காட்டியபோது மாணவனுக்கு குறுந்தகவல்கள் அனுப்பப்படுகின்றபோது அதனை பார்த்துவிட்டு குறுந்தகவல்கள் அனுப்பப்படும் இலக்கங்கள் முடக்கப்பட்டு வந்தன.

இவ்வாறான விடயங்களை அவதானித்த பொலிஸார் மாணவன் எங்கேயோ தலைமறைவாகி இருக்கலாம் எனும் சந்தேகத்தில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

காணாமல்போன மாணவனை பொலிஸார் ஐந்து நாட்களின் பின்னர் செவ்வாய்க்கிழமை (01) மாலை வவுனியா பகுதியில் வைத்து கண்டுபிடித்துள்ளனர். வீட்டில் ஏற்பட்ட முரண்பாடு ஒன்றின் காரணமாகவே தான் வீட்டை விட்டு வெளியாகியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது மாணவன் வாக்கு மூலம் வழங்கியுள்ளான்.

பெற்றோரை திசைத் திருப்பவே மாணவன் கடலோரம் சைக்கிளையும் அணிந்திருந்த சேர்ட்டையும் வைத்து விட்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்சில் வவுனியா சென்றுள்ளதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்று வரும் இம் மாணவன், கடந்த க.பொ.த.சாதாரண தரத்தில் அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளான். கண்டுபிடிக்கப்பட்ட மாணவனை பொலிஸார் பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புகைப்படக் கலைஞர்களுக்கான விருது வழங்கல் விழா அக்கரைப்பற்றில்




(அட்டாளைச்சேனை, மாளிகைக்காடு நிருபர்கள்)

அக்கரைப்பற்றில் புகைப்பட கலைஞர்களுக்கான விருது வழங்கல் விழா Club Photo Ceylonic வின் தலைவரும் வைத்தியருமான ஆகில் அஹ்மட் ஷரிபுதீன் மற்றும் புகைப்படக் கலைஞரும் விழா ஏற்பாட்டாளருமான அப்துல் ஹமீட் தாஹிர் ஆகியோரின் தலைமையில் அக்கரைப்பற்று மாநகர சபையின் ஹல்லாஜ் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்றது.

Club Photo Ceylonica வின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரபல புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்கள் மற்றும் 2020, 2021ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், வெற்றிபெற்ற கலைஞர்களுக்கான விருது வழங்கல் விழாவும் நடைபெற்றது.

சனிக்கிழமை (29) நடைபெற்ற புகைப்படத் திருவிழா நிகழ்வில், அக்கரைப்பற்று மாநகரசபை மேயர் அதாஉல்லா அகமட் சகி பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, கௌரவ அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், சர்வதேச விருது வெற்றியாளர் ஹர்ஷ மதுரங்க ஜெயசேகர, அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார மேம்பாட்டு கலாசார உத்தியோகத்தர் ஐ.எல்.றிஸ்வான், மாவட்ட உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.ஏ.தீன் முகம்மட், போட்டோஹப்பின் தலைமை பிரவீன் சமரக்கோன், எழுத்தாளர் உமாவரதராஜன், படத் தயாரிப்பாளரும் எழுத்தாளருமான ஹசீன் ஆதம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எஸ்.நவநீதன், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், FNPIAS சர்வதேச விருது வெற்றியாளர் ஹர்ஷ மதுரங்க ஜெயசேகர, போட்டோஹப்பின் தலைமை பிரவீன் சமரக்கோன் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும், இறுதி நாள் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற கலைஞர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதில் Grant Award விருது அக்கரைப்பற்று முனவ்வரா கனிஷ்ட கல்லூரி மாணவன் எம்.எஸ். அதீப் அஹமட்டுக்கு வழங்கப்பட்டதுடன், Club Photo Ceylonica வின் அங்கீகார விருது வத்தளை அமலினி டி செய்றாஹுக்கு வழங்கப்பட்டது.

# வியாழேந்திரனின் வீட்டிற்கு முன்பாக இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு!

(கல்லடி நிருபர்)

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டு வாசலுக்கு முன்பாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பாலசுந்தரத்தின் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் (01) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பாலசுந்தரத்தின் வழக்கு விசாரணையில் கடந்த வாரம் நகர்த்தல் பத்திரம் மூலம் மன்றுக்கு எடுத்துரைக்கப்பட்டமைக்கு அமைவாக, விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய படுகொலை செய்யப்பட்ட தினம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் தான் முதலாவது பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதாக சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் எந்த இடத்திலிருந்து அந்தத் தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டது என்பது தொடர்பாக பொலிஸாரை அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிபதி உத்தரவிட்டிருந்தார். சாட்சியொருவர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த நகர்த்தல் பத்திரத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறும் நீதிபதியால் உத்தரவிடப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், கைதுசெய்யப்பட்டுள்ள மெய்ப்பாதுகாவலரை மேலும் 15 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிதியமைச்சர் வடகொரியாவிலிருந்து கறுப்பு டொலர் மூலம் ஆயுதம் வாங்கியதாக கூறுவது தொடர்பில் விசாரணை வேண்டும்!

## மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

(கல்லடி நிருபர்)

நிதியமைச்சர் வடகொரியாவிலிருந்து கறுப்பு டொலர் மூலம் ஆயுதம் வாங்கியதாகக் கூறுகிறார். இந்தக் கருத்தைக்கொண்டு கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தியமை தொடர்பில் அவரை முதலில் விசாரணைசெய்ய வேண்டுமென மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்று சொல்லி ஒரு கூட்டம் இங்கு நடைபெற்றது. மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் எதுவித விடயங்களும் இக்கூட்டத்தில் ஆராயப்படவில்லை. அதற்குக் காரணமாக நிதியில்லை என்று சொல்லப்படுகின்றது.

அண்மையில் நீதியமைச்சர் வடக்கிற்குச் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். இதில் காணாமல்போனவர்களின் விடயம் தொடர்பில் ஆராய்ந்துள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. உண்மையில் இந்த உறவுகள் காணாமல்போனவர்கள் அல்ல. அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்பதை அவர் மறந்துவிடக்கூடாது. காணாமல் போனவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். இந்த ஒரு இலட்சம் ரூபாவுக்காகத் தாய்மார்கள் இன்று வரை வீதியில் போராடவில்லை என்பதையும் அவர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அத்துடன் நேற்றைய செய்தியில் நிதியமைச்சர் பெஷில் ராஜபக்ஷ தாங்கள் வடகொரியா விலிருந்து கறுப்பு டொலர்களைப் பயன்படுத்தி, யுத்தத்திற்கு ஆயுதங்கள் பெற்றுள்ளதாகக் கருத்து வெளியிட்டிருந்தார். இந்நிலையில் ஒரு நாட்டின் நிதியமைச்சர் எவ்வாறு இவ்வாறானதொரு கருத்தைச் சொல்ல முடியும்.

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ஒரு நாட்டில் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி, ஆயுதம் வாங்கி இந்த யுத்தத்தை நடத்தியதாகச் சொல்கிறார்கள். இனிவரும் காலங்களில் இன்னும் இன்னும் எத்தனை உண்மைகளை அறியக் கூடியதாக இருக்குமோ தெரியவில்லை.

நீதியமைச்சர் காணாமல் போனவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதாகச் சொல்லுகின்றார். அதே நேரத்தில் நிதியமைச்சர் வடகொரியாவிலிருந்து கறுப்பு டொலர் மூலம் ஆயுதம் வாங்கியதாகக் கூறுகின்றார். இந்தக் கருத்தைக்கொண்டு கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தியமை தொடர்பில் அவரை முதலில் விசாரணைசெய்ய வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகள் இதனைக் கவனிக்க வேண்டும்.




தொடர்ந்தும் இந்த அரசாங்கம் இவ்வாறு ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற விடயங்களை வன்மையாகக் கண்டிக்கவேண்டும். பொங்கலுக்குப் பிறகு எமது மாவட்டத்தில் பல மில்லியனர்கள் உருவாகுவார்கள் என மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் தெரிவித்திருந்தார். ஆனால், இன்று மாவட்டத்தில் உருவான ஒரு மில்லியனர்கூட இல்லை. இன்று மாவட்ட விவசாயிகளெல்லாம் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று இந்தக் கூட்டத்தில்கூட, விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு நாங்களே கோர வேண்டியுள்ளது.

அதேநேரத்தில் இன்று ஓமிக்ரொன் மட்டக்களப்பில் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருப்பதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.சுகுணன் தெரிவித்துள்ளார். அப்படியான ஒரு நேரத்தில் அவசரமாக இந்தக் கூட்டம் எதற்காக? இன்று முக்கியமானவர்கள் பலரை இக்கூட்டத்திற்கு அழைக்கவும் இல்லை எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

வழமையாகப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெற்று, அதில் தீர்மானிக்கும் விடயங்களை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கொண்டு வருவதுதான் வழமை. ஆனால், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று நடந்திருக்கின்றது. பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இனிவரும் ஒருசில தினங்களில் நடக்கவிருக்கின்றன. இவ்வாறானதொரு குழப்பநிலை இந்த மாவட்டத்தில் இருக்கின்றது.

கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கதைக்க வேண்டுமென்றால் கையை உயர்த்திக் கதைக்க வேண்டுமாம். இன்று இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பல விடயங்களுக்குத் தீர்வினைத் தருவதாகச் சொல்லியிருந்தார். விசேடமாக ஐ புரொஜெக்ட் நிதியினை வைத்திருக்கும் நபரிடமிருந்து அந்த நிதியை மீள எடுத்து அந்தத் திட்டத்திற்கு வழங்குவதற்கான அனுமதியை அவர் வழங்கியிருந்தார். அதேவேளை, கெவிலியாமடுவில் இடம்பெறும் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுப்பது தொடர்பில் ஆராய்வதற்கு நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். அம்பிட்டிய சுமணரத்ன தேரர் பண்ணையாளர்களின் மாடுகளை வலுக்கட்டாயமாகப் பறித்தமை தொடர்பிலும் நாங்கள் தெரியப்படுத்தியிருந்தோம்.

இன்று இந்த நாட்டில் ஜனாதிபதிக்கும் அறிவில்லை. நிதியமைச்சருக்கும் அறிவில்லை. அவர்களின் பிரதிநிதிகளாக எமது மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும் அறிவில்லாத நிலையே காணப்படுகின்றது என்றார்.

# இந்திய செய்திகள்

## உடல்நலன் காக்க உடற்பயிற்சி...



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள தனது இல்லத்தில் உடற்பயிற்சி செய்த வீடியோ காட்சிகள் வெளியாகி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

முதலமைச்சர் தனது உடல்நலனை பேணிக்காக்கும் வகையில் தினமும் காலை, மாலை என இருவேளைகளிலும் வழக்கமாக நடைப்பயிற்சி மேற்கொள்வார்.

அவ்வப்போது அவர் சைக்கிள் பயணங்களையும் மேற்கொண்டு வருகிறார். அதன் தொடர்ச்சியாக உடற்பயிற்சிக்கூடத்தில் முதலமைச்சர் உடற்பயிற்சி செய்த வீடியோ காட்சிகள் வெளியாகி வைரலாகியுள்ளன.

## இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண கோரி நாகை மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம்



இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்தி நாகை மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவது தொடர்கதையாகி வருகிறது.

பல ஆண்டுகாலமாகவே மீனவர்கள் கைது செய்யப்படுவதும், விரட்டியடிக்கப்படுவதும் வாடிக்கையான நிகழ்வாகவுள்ளது. சில மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். பல மீனவர்கள் இலங்கை சிறையில் சித்திரவதை அனுபவித்து வருகின்றனர். மேலும் படகுகளை இழந்து பலர் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில், திங்கட்கிழமை நாகை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 400இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளோடு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர். மீனவர்கள் நள்ளிரவு மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது இலங்கை, யாழ்ப்பாணம் மாவட்டம், மாதகல் கடற்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இரண்டு விசைப்படகுகளையும், அதிலிருந்த 21 மீனவர்களையும் கைதுசெய்து மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதுபோன்ற சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்தி நாகை மீனவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். நாகை, அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம், கல்லாரைச் சேர்ந்த 50,000 மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. மீனவர்கள் வேலைநிறுத்தம் காரணமாக 2000 விசைப்படகுகள், 5000 பைபர் படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘விக்’குக்குள் 525 கிராம் தங்கம்; உள்ளாடைகளுக்குள் தங்கப்பசை

## இலங்கையிலிருந்து சென்னைக்கு கடத்தலில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது



இலங்கையிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் திங்கட்கிழமை இரவு சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு சென்றுள்ளது. அதில், சென்னையைச் சேர்ந்த 3 பெண்கள் ஒரு குழுவாக சென்றுள்ளனர். அவர்கள் தங்களிடம், சுங்கத்தீர்வை செலுத்தும் பொருட்கள் எதுவும் இல்லை என்று கூறிவிட்டு கிரீன் சேனல் வழியாக வெளியில் செல்ல முயன்றுள்ளனர்.

சந்தேகத்தின்பேரில், பெண் சுங்க அதிகாரிகளை வரவழைத்து, குறித்த 3 பெண்களையும் மடக்கி, தனி அறைக்கு அழைத்துச் சென்று சோதனையிட்டனர். அப்போது, அவர்கள் அணிந்திருந்த ‘விக்’ எனப்படும் அலங்காரக் கூந்தலில் தங்க வளையல்கள், சிறிய தங்கக்கட்டிகள் மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர்.

மேலும், உள்ளாடைகளில் தங்கப்பசைகள் அடங்கிய சிறிய பிளாஸ்ரிக் பக்கெட்டுகள் மறைத்துவைத்திருந்ததையும் கண்டுபிடித்தனர். குறித்த மூன்று பெண்களிடமிருந்தும் 525 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

இதன் மதிப்பு ரூ. 23 இலட்சம் (இந்திய ரூபாபடி). இதையடுத்து 3 பெண்களையும் சுங்க அதிகாரிகள் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சரத்குமார் - ஐஸ்வர்யா தனுஷுக்கு கொரோனா தொற்று உறுதி



நடிகரும், சமத்துவ மக்கள் கட்சித் தலைவருமான சரத்குமாருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனால் அவர் மருத்துவர்கள் அறிவுரையின்படி தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார்.

இந்தியா முழுவதும் கொரோனா 3ஆவது அலை வேகமாகப் பரவி வருகிறது. உருமாறிய ஒமிக்ரொன் தொற்றாலும் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். திரைப் பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் நடிகரும், சமத்துவ மக்கள் கட்சித் தலைவருமான சரத்குமாருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.


இது தொடர்பாக அவர் தமது ட்விட்டர் பக்கத்தில்,

கடந்த இரண்டு நாட்களாக அறிகுறிகள் இருந்ததால், கொரோனா பரிசோதனை செய்துகொண்டதாகவும், அதில் கொரோனா உறுதி செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதனால் மருத்துவர்கள் அறிவுரையின்படி தனிமைப்படுத்திக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தன்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் பரிசோதனை செய்துகொண்டு தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் சரத்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

**ஐஸ்வர்யா தனுஷுக்கு கொரோனா**

இதேவேளை, நடிகர் ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா (வயது 40) தனுஷுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.



அண்மையில் கணவர் தனுஷை விவாகரத்து செய்வதாக அறிவித்தார். தனுஷும் இதை உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், இசை ஆல்பம் ஒன்றுக்காக தெலுங்கானா மாநிலம், ஐதராபாத்தில் தங்கியிருந்த ஐஸ்வர்யாவுக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டு, அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் சிகிச்சை பெற்றுவரும் புகைப்படத்தையும் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்குக!

### மத்திய அரசுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மத்திய அரசுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

“நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து 12 மீனவர்கள் விசைப்படகில் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். நாகப்பட்டினத்திலிருந்து தென்கிழக்கே மீன்பிடிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படைத்தளத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இதேபோன்று, மற்றொரு படகில் தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள் புதுச்சேரியைச் சேர்ந்த 3 மீனவர்களுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். 2021ஆம் ஆண்டு டிசம்பரில் நடந்த 3 வெவ்வேறு சம்பவங்களில் 68 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, தமிழகம் மற்றும் மத்திய அரசு மேற்கொண்ட கடும் முயற்சிக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் தாயகம் திரும்பக் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழக மீனவர்கள் மீண்டும் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ள சம்பவம், மீனவ மக்களிடையே பீதியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கைச் சிறைகளிலுள்ள நமது மீனவர்கள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது, மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் துயரத்துக்கு ஆளாக்குவதோடு, அந்தக் குடும்பங்களும் வறுமையில் தள்ளப்படுகின்றன.

இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு இந்தியா - இலங்கை மீனவர்களுக்கு இடையில் உள்ள நீண்டகாலப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க, உறுதியான வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

மேலும், சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்கள், 2 விசைப் படகுகளை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.”

- இவ்வாறு தனது கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 24இல் வெளிவரும் வலிமை: புஷ்பா வெற்றியை முந்துமா?




போனி கபூர் தயாரிப்பில் நடிகர் அஜித் நடித்த ‘வலிமை’ திரைப்படம் எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி வெளியாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை படக்குழு உறுதி செய்துள்ளது. இந்தப் படத்தை வினோத் இயக்கியுள்ளார்.

இந்தப் படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் வெளியான அல்லு அர்ஜுனின் ‘புஷ்பா’ திரைப்படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக, ஹிந்தியில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியான இத்திரைப்படம் வட மாநிலங்களில் பெரும் வெற்றிபெற்றது.

நடிகர் அஜித்தின் ‘வலிமை’ திரைப்படமும் அனைத்து மொழிகளிலும் வெளியாவதால், ‘புஷ்பா’ வெற்றியை முந்துமா என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே உருவாகியுள்ளது. இந்தப் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் பின்னணி இசையை ஜிப்ரான் மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தப் படத்தில் தெலுங்கு நடிகர் கார்த்திகேயா வில்லனாக நடிக்க ஹுமா குரேஷி, சுமித்ரா, யோகி பாபு, புகழ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். நீரவ் ஷா இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து நடிகர் அஜித், இயக்குநர் வினோத், தயாரிப்பாளர் போனி கபூர் கூட்டணி மூன்றாவது முறையாக ஒரு படத்தில் இணையவிருக்கின்றனர்.

இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்க, தபு, பிரகாஷ் ராஜ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தமிழக மீனவர்களுக்கு இனி பாதிப்பு இருக்கக்கூடாது; மத்திய அரசு இலங்கை அரசிடம் உறுதிபட தெரிவிக்கவேண்டும்

### தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்து

*(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)*



“தமிழக மீனவர்களுக்கு இனிமேல் இலங்கைக் கடற்படையினரால் பாதிப்பு இருக்கக்கூடாது என்பதை மத்திய அரசு இலங்கை அரசிடம் உறுதிப்பட தெரிவிக்க வேண்டும்” - என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஜி.கே.வாசன் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழக மீனவர்களை சிறைப்பிடித்துச் சென்ற இலங்கைக் கடற்படையின் அராஜகம் மிகவும் கண்டிக்கத்தக்கது. திங்கட்கிழமை நாகை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 400இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சென்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர்.

இவர்களில் 21 தமிழக மீனவர்களை கைதுசெய்து, 2 படகுகளையும் இலங்கைக்கு கொண்டுசென்றனர்.

இதனால் தமிழக மீனவர்களின் குடும்பங்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர். தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் கைது நடவடிக்கை இனியும் தொடரக்கூடாது.

தமிழக மீனவர்களின் மீன்பிடித்தொழில் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து பாதிக்கப்படுவதால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகவே நீடிக்கிறது.

தற்போது இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 21 தமிழக மீனவர்களை விடுவிக்கவும், அவர்களின் 2 படகுகளை மீட்கவும் மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும். மேலும், தமிழக மீனவர்களுக்கு இனிமேல் இலங்கைகட கடற்படையினரால் பாதிப்புகள் இருக்கக்கூடாது என்பதை மத்திய அரசு, இலங்கைக்கு உறுதிப்பட தெரிவிக்கவேண்டும் என்று த.மா.கா. சார்பில் வலியுறுத்துகிறேன்.”

- இவ்வாறு ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

## ஆந்திராவிலிருந்து நாகை வழியாக படகில்...

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 500 கிலோ கஞ்சா பறிமுதல்

### 2 கார்கள் - ஓட்டோவுடன் அறுவர் கைது

ஆந்திரா மாநிலத்திலிருந்து நாகை வழியாக படகில் இலங்கைக்கு கடத்தவிருந்த ரூ. ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பிலான (இலங்கை மதிப்பின்படி ரூ.4,05,41,560.45) 500 கிலோ கஞ்சா மூடைகளை பொலிஸார் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்தோடு இரண்டு கார்கள் மற்றும் ஓட்டோ சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



ஆந்திரா மாநிலத்திலிருந்து நாகை வழியாக இலங்கைக்கு படகு மூலம் கஞ்சா கடத்தப்படுவதாக தனிப்பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதன்பேரில், நாகை, புத்தூர் ரயில்வே மேம்பாலம் அருகே தனிப்படை பொலிஸார் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த மினி ஓட்டோவை சந்தேகத்தின்பேரில் நிறுத்தி சோதனை செய்தனர். அதில் கால்நடைகளுக்கு பயன்படுத்தப்படும் தவிடு மூடைகளை ஏற்றிச்செல்வதுபோல் கஞ்சா மூடைகளை கடத்திச் சென்றமை தெரியவந்தது.

இதுதொடர்பாக நாகை, அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த சிங்காரவேல் (வயது - 44) என்பவரை கைதுசெய்து விசாரணை நடத்தியதில், ஆந்திரா மாநிலத்திலிருந்து நாகை வழியாக படகு மூலம் இலங்கைக்கு கடத்துவதற்காக 500 கிலோ கஞ்சாவை எடுத்துச் சென்றதும், இதன் மதிப்பு ரூ. ஒரு கோடியே 50 இலட்சம் எனத் தெரியவந்தது. இது தொடர்பாக அவர் கொடுத்த தகவலின்பேரில் தேனியைச் சேர்ந்த மணிவாசகம் (வயது 32), அலெக்ஸ்பாண்டியன் (வயது 37), முத்துப்பேட்டை ஜம்புவானோடையைச் சேர்ந்த ரங்கேஸ்வரன் (வயது 26), திருவண்ணாமலையைச் சேர்ந்த உமாபதி (வயது 32), மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியைச் சேர்ந்த சேகர் (வயது 49) ஆகிய 5 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

அவர்களிடமிருந்து 500 கிலோ கஞ்சா மற்றும் 2 கார்கள், ஒரு மினி ஓட்டோ ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இதுகுறித்து நாகை நகர பொலிஸார் வழக்குப்பதிந்து வேறு நபர்களுக்கும் தொடர்புள்ளதா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உலக செய்திகள்

# 57 நாடுகளை ஆக்கிரமித்த பி.ஏ.-2 ஒமிக்ரொன் திரிபு


ஒமிக்ரொனை விட, அதன் மரபணு மாறிய துணை திரிபான பி.ஏ. - 2 வகை வைரஸ் அதிவேகமாக பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வகை வைரஸ் தற்போதுவரை 57 நாடுகளில் பரவியுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. பி.ஏ.2 வைரஸ், ஒமிக்ரொன் வைரஸிலிருந்து பல வகைகளில் பிறழ்வுகளை கொண்டுள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, துணை திரிபுகள் இடையேயான மாறுபாடுகள் குறித்த தகவல்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனவும், அதன் வீரியம், பரவும் தன்மை, பண்புகள் குறித்து ஆய்வு செய்யுமாறு ஐ.நா.வின் சுகாதார அமைப்பு கூறியுள்ளது.



## பூமியை நோக்கி பாய்ந்த விண்கல்





பாகிஸ்தானில் வானில் ஒளிர்ந்தபடி பூமியை நோக்கி பாய்ந்த விண்கல் பார்ப்பவர்களுக்கு சிலிர்ப்பூட்டியது.

சனிக்கிழமை இரவு ஏழு மணியளவில், கராச்சி நகரில் தென்பட்ட இந்த விண்கல்லை சிலர் வீடியோ எடுத்து சமூகவலைத்தளங்களில் பகிர்ந்தனர்.

புவியீர்ப்பு விசையால் பூமியை நோக்கி அதிவேகமாக ஈர்க்கப்படும் விண்கல் வளிமண்டலத்தில் ஏற்படும் உராய்வுகளால் தீப்பற்றி எரிந்து கண்கொள்ளாக் காட்சியாக மாறுகிறது.

விண்கல் பூமியில் விழுவதை காணும் போது மனதில் நினைத்தது நடக்கும் என பல நாடுகளில் நம்பப்படுவதால் மக்கள் இந்த வானியல் அதிசயத்தை ஆச்சர்யத்துடன் ரசிக்கின்றனர்.

## பூமியின் 2ஆவது ட்ரோஜன் குறுங்கோள் கண்டுபிடிப்பு

பூமியின் 2ஆவது ட்ரோஜன் குறுங்கோள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறுங்கோள் பூமியைப் போல் சூரியனின் சுற்றுப்பாதையை மற்ற விண்வெளிப் பாறைகளுடன் பகிர்ந்து கொள்வதும் தெரியவந்துள்ளது. 2020 XL5 என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் குறுங்கோள் இதற்கு முன்பாக 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியை வலம் வந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற சிறு கோள்கள் முக்கியமானவை என்று குறிப்பிட்டுள்ள ஆய்வாளர்கள், ஆரம்பகால சூரிய குடும்பம் எப்படி இருந்தது மற்றும் அது எவ்வாறு உருவானது என்பதை காட்ட உதவும் என்று தெரிவித்துள்ளனர்.

## ஈக்குவடோரில் கடும் மழை - மண்சரிவு: 24 பேர் பலி; 48 பேர் காயம்; 20 பேர் மாயம்









ஈக்குவடோரில் கடும் மழை மற்றும் மண்சரிவில் சிக்கி 24பேர் உயிரிழந்துள்ளதுடன் 48 பேர் படுகாயமடைந்துள்ளனர். மேலும் 20இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். கனமழையால் ஏற்பட்ட சகதி வெள்ளத்தில் சிக்கி காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்குவடோரில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்துவருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பெய்த மழையால் லா காஸ்கா, லா குமுனா உள்ளிட்ட வடக்கு பகுதிகளில் உள்ள பள்ளத்தாக்கில் வெள்ளம் தேங்கியது. இதனால் அப்பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டு, பாறைகள் மற்றும் சேற்றை அடித்து கொண்டு வெள்ளம் கியூட்டோ நகருக்குள் பாய்ந்தது.

திடீரென ஏற்பட்ட சகதி வெள்ளம் சுமார் 6 அடி உயரத்திற்கு நகருக்குள் பாய்ந்தது. வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் வெகு தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டன. ஏராளமானோர் சகதி வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர்.

வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டும் பாறைகளில் சிக்கியும் 24 பேர் உயிரிழந்துள்ளதாக ஈக்குவடோர் அரசு தெரிவித்துள்ளது. 48 பேர் காயமடைந்துள்ள நிலையில், 20இற்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என்று கூறப்படுவதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

வெள்ளம் தற்போது வடிந்திருக்கக் கூடிய நிலையில், வீதிகளில் படிந்துள்ள சகதி, மண் மற்றும் பாறைகளை அகற்றும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

## 2022ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு யாருக்கு?





மகாத்மா காந்தி பற்றிய படத்தை இயக்கிய ரிச்சர்ட் அட்டன்பரோவின் சகோதரர் டேவிட் ஆட்டன்பரோ, போப் ஆண்டவர் பிரான்சிஸ், உலக சுகாதார அமைப்பு, பெலாரசின் மனித உரிமைப் போராளி ஷிகோனஸ்கயா உள்ளிட்ட பெயர்கள் இந்த ஆண்டின் நோபல் அமைதிப் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டு பரிசீலிக்கப்படுகின்றன.

உலகின் பல பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான எம்.பிக்கள் பரிந்துரைகளை செய்யலாம். பொதுவாக நோபல் அமைதிப் பரிசுக்கு நோர்வே எம்.பிக்களின் பரிந்துரைகள் அதிகளவில் ஏற்கப்படுவது வழக்கம்.


இந்த ஆண்டு நோர்வேயின் பரிந்துரைகளில் டேவிட் அட்டன்பரோ உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அமைதிக்கான நோபல் பரிசு பெறுபவர் பெயர் அறிவிக்கப்படும்.

## வடகொரியா அடுத்தடுத்து ஏவுகணை பரிசோதனை; ஐ.நா. கடும் கண்டனம்









வடகொரியா அடுத்தடுத்து தொலைதூர ஏவுகணை சோதனையை நிகழ்த்தி வரும் நிலையில், இதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டரெஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரே மாதத்தில் 7 ஏவுகணைகளை சோதனை செய்த வடகொரியா, கடந்த ஞாயிற்றுக்கிழமை 2017ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இல்லாதளவிற்கு மிகவும் சக்தி வாய்ந்த ஏவுகணையை சோதித்து பார்த்தது.

இது அமெரிக்கா வரை சென்று தாக்கும் என்பதால், ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்திற்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. இந்நிலையில், வடகொரியா ஐ.நா. பாதுகாப்பு சபையின் விதிகளை மீறிவிட்டதாக அன்டோனியா குட்டரெஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

*04ஆம் பக்கத் தொடர்ச்சி...*

வேறுபட்ட கட்சிகள், மாறுபட்ட வெறுப்போ, விரோதமோ இல்லாமல், எதிர் நிற்பவர்களையும் நண்பர்களாகப் பாராட்டும் தன்மை பொதுவாழ்வில் மிகவும் தேவையான ஒரு பண்பாடு ஆகும்.

**அரசியலில் நுழைவு**

அண்ணாதுரை அரசியலில் ஈடுபாடு கொண்டு நீதிக்கட்சியில் 1935 இல் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். நீதிக்கட்சி பிராமணரல்லாதோருக்கான அமைப்பாக 1917 இல் மதராஸ் ஒருங்கிணைப்பு இயக்கம் என்ற அமைப்பிலிருந்து உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் பிராமணரல்லாதோர் மாணவர்களின் கல்விச் செலவை ஏற்கும் விதத்திலும் அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் விதமாக பல உதவிகளை புரிந்து வந்தது.

பின்னாளில் இது அரசியல் கட்சியாக சர். பி.டி. தியாகராய செட்டி மற்றும் டி. எம். நாயர் தலைமையில் தொடக்கப்பட்டது. இக்கட்சி பின்னர் தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கம் எனப் பெயரிடப்பட்டு பின் நீதிக்கட்சியாக பெயர்மாற்றம் கண்டது. இக்கட்சியே சென்னை இராசதானியில் சுயாட்சி முறையை பின்பற்றி 1937 இல் இந்திய தேசிய காங்கிரஸால் தோற்கடிக்கப்படும்வரை ஆட்சியில் இடம்பெற்றிருந்தது. அந்த நேரத்தில் அண்ணாதுரை நீதிக்கட்சியில் பெரியாருடன் சேர்ந்தார். பெரியார் அப்பொழுது நீதிக்கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார் .

அண்ணாதுரை நீதிக்கட்சி பத்திரிகையின் உதவி ஆசிரியராக பொறுப்பேற்றிருந்தார். பின்பு விடுதலை மற்றும் அதன் துணைப் பத்திரிகையான குடியரசு பத்திரிகைக்கு ஆசிரியரானார். பிறகு தனியாக திராவிட நாடு என்ற தனி நாளிதழைத் (திராவிட நாடு தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி தொடங்கப்பட்டது) தொடங்கினார். 1944 இல் பெரியார் நீதிக்கட்சியை திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றினார். தேர்தலில் போட்டியிடுவதையும் கைவிட்டார்.

**பெரியாருடன் கருத்து வேறுபாடு மற்றும் தி.மு.க. உருவாதல்**

பிரித்தானிய காலனிய ஆதிக்கத்தை இந்திய தேசிய காங்கிரஸ் மிக வன்மையாக எதிர்த்து இந்தியாவின் சுதந்திரத்துக்கு வழிவகுத்தது. இக்கட்சி பெரும்பாலும் பிராமணர்கள் மற்றும் வட இந்தியர்களின் ஆதிக்கம் மிகுந்த கட்சியாக தென்னிந்திய மக்களாலும் குறிப்பாக பெரியாராலும், தமிழர்களாலும் பெரிதும் விமர்சிக்கப்பட்டது. இவர்களிடமிருந்து தென்னிந்தியாவை மீட்கப் பெரியார் பெரிதும் விரும்பினார். இக்காரணங்களை முன்வைத்தே பெரியார் இந்தியாவின் சுதந்திர தினமான ஓகஸ்ட் 15, 1947 அந்த நாளை கறுப்பு தினமாக எடுத்துக்கொள்ளுமாறு அவரின் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

அண்ணாதுரை இக்கருத்தில் முரண்பட்டார். இக்கருத்து பெரியாருக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் கருத்து வேறுபாட்டால் விரிசல் ஏற்படக் காரணமாயிற்று. அண்ணாதுரை இந்தியாவின் சுதந்திரம் அனைவரின் தியாகத்தாலும், வியர்வையினாலும் விளைந்தது. அது வெறும் ஆரிய, வடஇந்தியர்களால் மட்டும் பெற்றது அல்ல என்பதை வலியுறுத்தினார்.

**தமிழ்நாடு பெயர் மாற்றம்**

1967இல் நடைபெற்ற தேர்தலில் பங்கு பெற்ற தி.மு.க. வெற்றி பெற்று முதன் முறையாக திராவிட ஆட்சியை தமிழகத்தில் அமைத்தது. அவரது தலைமையில் 1967 மார்ச் 6இல் அமைந்த அமைச்சரவை இளைஞர்களை கொண்ட அமைச்சரவையாக விளங்கியது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் சுயமரியாதைத் திருமணங்களை சட்டபூர்வமாக்கி தனது திராவிடப் பற்றை உறுதிப்படுத்தினார். இரு மொழி சட்டங்களை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உருவாக்கி முந்தைய அரசின் மும்மொழித்திட்டத்தினை (தமிழ், இந்தி, ஆங்கிலம்) முடக்கினார். மேலும், மதராஸ் மாநிலம் என்றிருந்த சென்னை மாகாணத்தை 1969 ஜனவரி 14இல் தமிழ்நாடு என்று பெயர் மாற்றி தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார். அமெரிக்கரல்லாத அண்ணாதுரைக்கு யேல் பல்கலைக்கழகம், சப் பெல்லோசிப் என்ற கௌரவ பேராசிரியர் விருது 1967-1968 இல் வழங்கப்பட்டது. அமெரிக்கரில்லாத ஒருவருக்கு வழங்கப்பட்டதும் இதுவே முதல் முறை.

**இறுதிக்காலம்**

மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தும், இரண்டு ஆண்டுகள் மட்டுமே பதவியிலிருக்க அவரால் முடிந்தது. புற்று நோய்க்கு ஆளான அவர், 03 பெப்ரவரி 1969 இல் காலமானார். அவரின் இறுதி ஊர்வலம் கின்னஸ் உலக சாதனையில் இடம்பெறுகின்ற அளவில் மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். பல கல்வி நிறுவனங்கள், கட்சிகள் அவரின் பெயரில் தொடங்கப்பட்டன.

ஒரு முதலமைச்சராக மட்டுமன்றி, ஒரு அறிஞராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், ஒரு சிறந்த அரசியல்வாதியாகவும், மிகச் சிறந்த பேச்சாளராகவும், மக்கள் தலைவனாகவும், இன்றும் தமிழக மக்களால் அவர் நினைவு கூறப்படுகிறார். தி.மு.கவிலிருந்து பிரிந்து தனிக்கட்சி தொடங்கிய இவரின் இதயக்கனி எம்.ஜி.இராமச்சந்திரன் இவரின் பெயரைக்கொண்டு உருவாக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியினால் வெற்றியைக் கொண்டு தமிழகத்தின் ஆட்சியை பின்னாளில் நடத்தினார்.

**இலக்கிய பங்களிப்புகள்**

அண்ணாதுரை மிகச் சிறந்த தமிழ் சொற்பொழிவாளரும், மேடைப் பேச்சாளரும் ஆவார். தமிழில் சிலேடையாக, அடுக்கு மொழிகளுடன், மிக நாகரிகமான முறையில், அனைவரையும் கவர்கின்ற வகையில் தனிக்குரல் (கரகரத்த குரலில்) வளத்துடன் பேசும் திறன் பெற்றவர். எழுத்தாற்றலும் பெற்றவர்.

பல புதினங்களும், சிறு கதைகளும் மற்றும் அரசியல் நாடகங்களுக்கும் நாடகமாக்கம், திரைக்கதைகள் எழுதியவர். அவரே கதாபாத்திரமேற்று நாடகங்களில், திராவிடர் கழக பிரசார நாடகங்களில் நடித்துள்ளார்.

திரைப்படங்களை முக்கிய பிரசார ஊடகங்களாக அரசியலுக்காக பயன்படுத்தியவர் அண்ணாதுரை. இவரின் முதல் திரைப்படம் நல்லதம்பி (1948). இதில் முக்கிய கதாபாத்திரத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நடித்துள்ளார். இது ஜமீன்தாரி ஒழிப்புமுறையை வலியுறுத்தி எடுக்கப்பட்ட திரைப்படமாகும். இவரின் வேலைக்காரி (1949), ஓர் இரவு ஆகிய நாடகங்களும் தாய் மகளுக்குக் கட்டிய தாலி, ரங்கோன் ராதா, வண்டிக்காரன் மகன் ஆகிய கதைகளும் திரைப்படமாக எடுக்கப்பட்டன. திராவிட அரசியலின் பிரசாரமாக இத்திரைப்படங்கள் திகழ்ந்தன.

வேலைக்காரியில் அண்ணாதுரை அடக்குமுறையை கையாளும் நிலச்சுவான்தாரர்கள் ஜவஹர்லால் நேரு மற்றும் காந்தியுடன் எப்படி கூட்டணி வைத்துள்ளார்கள் என்பதை விளக்குகின்ற விதமாக எடுத்துக்காட்டப்பட்டது.

**மறைவு**

அண்ணாதுரை முதலமைச்சரான இரண்டு வருடத்திற்குள் புற்று நோய் தாக்குதலுக்குள்ளாகி, மருத்துவ பராமரிப்பிலிருக்கும் பொழுது 3 பெப்ரவரி, 1969 அன்று மரணமடைந்தார். அவர் புகையிலை உட்கொள்ளும் பழக்கமுடையவராததால் (புகையிலைப் பொடி நுகரும் பழக்கம்) இந்நோய் தீவிரமடைந்து மரணமடைந்தார். அவரின் இறுதி மரியாதையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு கின்னஸ் உலக புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இறுதி மரியாதையில் சுமார் 1 கோடியே 50 இலட்சம் பேர் வரை கலந்துக் கொண்டு இறுதி மரியாதைச் செலுத்தினர். இவரின் உடல் சென்னை மெரீனா கடற்கரையில் அடக்கம் செய்யப்பட்டது. இவரின் நினைவை போற்றும் வகையில் இவ்விடம் அண்ணா சதுக்கம் என்ற பெயரில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**நினைவுச் சின்னங்கள்**

தமிழ்நாடு அரசு அண்ணாவின் நினைவாக இவர் வாழ்ந்த காஞ்சிபுரம் இல்லத்தை பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் என்கிற பெயரில் நினைவுச் சின்னமாக மாற்றியமைத்துள்ளது. இங்கு அண்ணா அமர்ந்த நிலையிலான சிலை வைக்கப்பட்டுள்ளது. அண்ணாவின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் சென்னை மெரீனா கடற்கரையில் இவர் உடல் புதைக்கப்பட்ட இடத்தை பேரறிஞர் அண்ணா நினைவிடம் எனும் பெயரில் நினைவிடமாக ஆக்கியுள்ளது. இங்கு அண்ணாவின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. நூலகமும் செயல்பட்டு வருகின்றது. இங்குள்ள பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகத்தில் இவரது வாழ்க்கை வரலாற்றுப் புகைப்படங்கள், இவர் பயன்படுத்திய பொருட்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள தி.மு.க. தலைமைச் செயலக கட்டிடத்துக்கு "அண்ணா அறிவாலயம்" என்றும், தமிழ்நாட்டின் முதன்மையான தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு அண்ணா பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. சென்னையின் முக்கிய சாலையான மவுண்ட் ரோடு அண்ணா சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சென்னை, மதுரை போன்ற நகரங்களின் முக்கிய குடியிருப்பு பகுதிகள் அண்ணா நகர் என்று பெயரிடப்பட்டுள்ளன. வேலூரில் உள்ள அரசு திரையரங்கம் அண்ணா கலையரங்கம் என பெயர் சூட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இங்கு 24.09.1968 முதல் சிறுவர்களுக்கான திரைப்படம் திரையிடப்பட்டு பின்பு 09.07.1971 முதல் "அண்ணா கலையரங்கம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு முழு நீளத் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. 2009ஆம் ஆண்டு மத்திய அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபா நாணயத்தை வெளியிட்டது. 2010ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு பூர்த்தியடைவதை நினைவு கூரும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு அண்ணாதுரை பிறந்த நாளான செப்டெம்பர் 15 அன்று அரசு விழாவாக சிறப்பாக கொண்டாடுகிறது.

**(அறிஞர் அண்ணா நினைவுதினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது )**



# இறுதி நேரத்தில் ஹீரோவாக மாறிய ரெஹான் அஹமட் ஆப்கானை வீழ்த்தி இறுதிப்போட்டியில் இங்கிலாந்து

ஐ.சி.சி. இளையோர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டக்வர்த் லூயிஸ் முறையில் வீழ்த்திய இங்கிலாந்து அணி முதல் அணியாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

ஆண்டிகுவாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து இளையோர் அணியும், ஆப்கானிஸ்தான் இளையோர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

மழை பெய்ததன் காரணமாக போட்டி 3 ஓவர்கள் குறைக்கப்பட்டு 47 ஓவர்கள் கொண்ட போட்டியாக ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 47 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 231 ஓட்டங்களை குவித்தது.



232 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, ஒரு கட்டத்தில் வெற்றிபெறும் என எதிர்பார்த்திருந்தாலும்கூட போட்டியின் 46ஆவது ஓவர் திருப்புமுனையாக அமைந்தது. அந்த ஓவரை வீசிய இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரெஹான் அஹமட் குறித்த ஓவரில் 3 விக்கெட்களை வீழ்த்த இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 47 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 215 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்த வெற்றியின் மூலமாக இங்கிலாந்து இளையோர் அணி நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறுகின்ற மாபெரும் இறுதிப் போட்டிக்கு முதல் அணியாக தெரிவானது.

# பீஜிங் ஆரம்ப விழாவில் தைவான்

(அக்ஷரா)

பீஜிங் ஒலிம்பிக் ஆரம்ப விழாவிலும், நிறைவு நாள் அணி வகுப்பிலும் தைவான் பங்குபற்றும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தைவானில் உள்ள ஒலிம்பிக் அதிகாரிகள், பீஜிங் விளையாட்டுப் போட்டிகளின் வெள்ளிக்கிழமை தொடக்க விழாவைத் தவிர்ப்பதற்கான முடிவை மாற்றியமைத்துள்ளனர்.






அவர்கள் அவ்வாறு செய்ய ஐ.ஓ.சி. அழுத்தம் கொடுத்ததாகக் கூறினர்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி மூலம் சீனாவுடனான பல தசாப்த கால ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக தைவான் விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக்கில் சீன தைபேயாக போட்டியிடுகின்றனர். தைவானின் சுயராஜ்யத் தீவை சீனா தனது சொந்தப் பிரதேசமாக உரிமை கோருகிறது. இராஜதந்திர மற்றும் இராணுவ மிரட்டல் கொள்கையை தொடர்ந்து கொண்டுள்ளது.

இந்த ஆண்டு குளிர்கால விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க மற்றும் நிறைவு விழாக் களில் "சீன தைபே ஒலிம்பிக் கமிட்டி பங்கேற் பதை உறுதி செய்துள்ளது" என்று ஐ.ஓ.சி. நேற்று முன்தினம் கூறியது. கடந்த ஆண்டு, டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு ஒரு குழுவை அனுப்ப மறுத்ததற்காக பீஜிங் விளையாட்டுகளில் இருந்து வட கொரியாவை இடைநீக்கம் செய்த விதிகளை ஒலிம்பிக் கமிட்டி மேற்கோள் காட்டியது.

# ஐ.பி.எல். ஏலப் பட்டியலில் விளையாட்டுத்துறை அமைச்சர்

## 30 தமிழக வீரர்களுக்கும் இடம்



2022ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் மெகா ஏலத்துக்கான இறுதிப் பட்டியல் நேற்று முன்தினம் வெளியான நிலையில், மேற்குவங்க மாநில விளையாட்டுத்துறை அமைச்சரான மனோஜ் திவாரி ரூ.50 இலட்சம் (இந்திய மதிப்பு) அடிப்படை விலையுடன் ஏலப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

36 வயதான இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் மேற்கு வங்க மாநில விளையாட்டுத்துறை அமைச்சருமான மனோஜ் திவாரி ரூ.50 இலட்சம் அடிப்படை விலையில் இடம்பெற்றுள்ளார். இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் மனோஜ் திவாரி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் ரைசிங் புனே சுப்பர் ஜெயிண்ட்ஸ் அணிகளில் ஆடியுள்ளார்.

மேற்குவங்க மாநில சட்டமன்றத் தேர்தலில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினரான முன்னாள் கிரிக்கெட் வீரர் மனோஜ் திவாரி, தற்போது மேற்குவங்க விளையாட்டுத்துறை அமைச்சராக செயற்பட்டு வருகிறார்.

இதேவேளை, இறுதி ஏலப் பட்டியலில் மொத்தமாக 30 தமிழக வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் தினேஷ் கார்த்திக், டெல்லி கெப்பிடல்ஸ் அணியின் ரவிச்சந்திரன் அஸ்வின், பஞ்சாப் கிங்ஸ் அணியின் ஷாருக்கான், ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் வொஷிங்டன் சுந்தர் உள்ளிட்ட பல தமிழக வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். மெகா ஏலம் எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் பெங்களூரில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரசிகர்களுக்கு அனுமதி மறுப்பு




சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் - இந்திய அணிகளுக்கிடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடரில் நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் போட்டிகளை நேரடியாக மைதானத்தில் பார்வையிட ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அஹமதாபாத்திலும், இருபதுக்கு 20 சர்வதேச தொடர் பெப்ரவரி 16ஆம் திகதி கொல்கத்தாவிலும் ஆரம்பமாகின்றன. கொல்கத்தாவில் நடைபெறும் இருபதுக்கு 20 சர்வதேச தொடருக்கு 75 சதவீத ரசிகர்களை அனுமதிக்க மேற்கு வங்காள அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் 50 ஆயிரம் ரசிகர்கள் வரையில் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், கொரோனா பரவல் காரணமாக அஹமதாபாத்தில் நடைபெறவுள்ள 3 ஒருநாள் போட்டிகளிலும் ரசிகர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என குஜராத் கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. இந்தப் போட்டி இந்திய அணியின் 1000ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# சம்பியனான கற்பிட்டி பிரதேச செயலக அணி

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்த புத்தளம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான சுதந்திர தின கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடர் அண்மையில் வென்னப்புவ அல்பட் பீரிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட செயலகத்திற்குட்பட்ட 16 பிரதேச செயலக அணிகளும், புத்தள மாவட்ட செயலக அணி மற்றும் புத்தள நகர சபை அணி அடங்களாக 18 அணிகள் பங்கேற்றிருந்தன. 18 அணிகளும் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விலகல் முறையில் இடம்பெற்ற தொடரில் கற்பிட்டி பிரதேச செயலக அணி, வண்ணாத்திவில்லு பிரதேச செயலக அணிகள் இறுதிப்போட்டியில் மோதின.





தீர்மானமிக்க இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வண்ணாத்திவில்லு பிரதேச செயலக அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கற்பிட்டி பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பின்னர் 44 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வண்ணாத்திவில்லு பிரதேச செயலக அணி 4.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 35 ஓட்டங்களை மட்டுமே பெற, கற்பிட்டி பிரதேச செயலக அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் மகுடத்தை தனதாக்கிக் கொண்டது.

இத்தொடரின் அதிதிகளாக புத்தளம் மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி, புத்தளம் மாவட்ட மேலதிக செயலாளர் ரவீந்திர விக்ரமசிங்க உட்பட பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# ஐந்தாமிடத்துக்கான போட்டியில் இலங்கை – பாக். அணிகள் இன்று பலப்பரீட்சை



மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் 2022 ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் ஐந்தாவது இடத்தை தீர்மானிப்பதற்கான போட்டியில் இலங்கை இளையோர் அணி மற்றும் பாகிஸ்தான் இளையோர் அணி இன்று பலப்பரீட்சை நடத்துகின்றன.

இலங்கை இளையோர் அணி காலிறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் இளையோர் அணியுடன் தோல்வியை தழுவி அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகும் வாய்ப்பை இழந்த நிலையில், ஐந்தாம் இடத்திற்கான போட்டிக்கு தெரிவாகும் அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க இளையோர் அணியை வீழ்த்தி தகுதி பெற்றது.

மறுமுனையில் பாகிஸ்தான் அணி நடப்பு சம்பியனான பங்களாதேஷ் அணியை வீழ்த்தி ஐந்தாம் இடத்தை தேர்வு செய்யும் போட்டிக்கு தகுதி பெற்றது. அந்தவகையில் ஆண்டிகுவாவில் இலங்கை நேரப்படி பிற்பகல் 6.30 மணிக்கு ஆரம்பமாகின்ற இந்தப் போட்டியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

# இலங்கை – இந்திய அணிகளுக்கிடையில் பகலிரவு டெஸ்ட்

சுற்றுலா இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியை பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தில் பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய அணி மேற்கிந்திய தீவுகளுடன் சொந்த மண்ணில் 3 ஒருநாள் மற்றும் 3 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுகிறது. இந்த தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகி 20ஆம் திகதி நிறைவடைகிறது. அதன் பின்னர் இலங்கை அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் மற்றும் 3 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுகிறது.

இதில் இரண்டாவது டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடைபெறவுள்ள நிலையில், இந்தப் போட்டியை பகலிரவு போட்டியாக நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்த உத்தியோகபூர்வ அட்டவணையை கிரிக்கெட் சபை விரைவில் வெளியிடும் என்று தெரிகிறது.

கடந்த 2015ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் முதல் முறையாக பகலிரவு டெஸ்ட் போட்டி அறிமுகம் செய்யப்பட்டது. இதுவரை 18 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7